விலை : 20.00
பக்கங்கள் : இருபது

# வலம்புரி
Valampurii

website : www.valampurii.lk
E-mail: valampurii@yahoo.com

Registered as a Newspaper in Srilanka

சங்கு 15, வள்ளுவர் ஆண்டு 2045 வைகாசி 16 வெள்ளிக்கிழமை (30.05.2014) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 162

ராம்கோ
MADRAS CEMENTS LTD
RAMCO CEMENT
உலகத்தர ISO 14 001, 9001
சான்றிதழ் பெற்றுள்ள
ஒரே சீமெந்து ராம்கோ

## சுஷ்மாவுக்கு பீரிஸ் வாழ்த்து

(கொழும்பு)

நரேந்திர மோடி தலைமையிலான புதிய இந்திய அரசின் கீழ் இலங்கை - இந்திய உறவுகள் மேலும் வலுவடையும் என வெளி விவகார அமைச்சர் ஜீ.எல்.பீரிஸ் தெரிவித்துள்ளார்.

இந்தியாவின் புதிய வெளிவிவகார அமைச்சராக பொறுப்பேற்றுள்ள சுஷ்மா சுவராஜுக்கு அனுப்பியுள்ள வாழ்த்துச் செய்தியில் அவர் இதனை கூறியுள்ளார்.

சுஷ்மா சுவராஜ் தனது இலங்கை

20 ஆம் பக்கம் பார்க்க....

# முழு இராணுவ ஆட்சிக்குள் தமிழர் தாயகப் பிரதேசம்!

## த.தே.ம முன்னணி குற்றச்சாட்டு



(யாழ்ப்பாணம்)

தமிழர் தாயகம் முற்று முழுதாக இராணுவ ஆட்சிக்குள் சிக்குண்டே தற்பொழுதும் உள்ளது. இங்கு அற்ப சொற்பமாகவுள்ள சிவில நிர்வாகமும் இராணுவ ஆட்சிக்கு உறுதுணை வழங்குவதாகவேயுள்ளது என்று தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி குற்றம்சாட்டியுள்ளது.

அதேவேளை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் மாகாணசபை உறுப்பினரின் வீடு இராணுவத்தினரால் சுற்றிவளைக்கப்பட்டதற்கும் அக்கட்சி தனது கடுமையான கண்டனத்தை வெளியிட்டுள்ளது.

யாழ்.ஊடக அமையத்தில் நேற்று பற்பகல் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின் போதே அக்கட்சியின் தலைவரும் முன்னாள் யாழ்.மாவட்ட பாராளுமன்ற உறுப்பினருமான கஜேந்திரகுமார் பொன்னம்பலம்

20 ஆம் பக்கம் பார்க்க....

## குருப்பெயர்ச்சி பலன்கள்



ஜோதிடர் கலைமணி சிவல்புரி சிங்காரம் எழுதும் குருப்பெயர்ச்சி பலன்கள் உங்கள் வலம்புரியில் நாளை மறுதினம் முதல்...

*வாசிக்கத் தவறாதீர்கள்*

## புலிகளை பிடிக்க தீவிர விசாரணை

(கோலாலம்பூர்)

மலேசியாவில் மேலும் விடுதலைப் புலிகளின் சந்தேக நபர்கள் வசிப்பதாக தெரிவிக்கப்படுகின்ற

20 ஆம் பக்கம் பார்க்க....

## மன்னராக மகிந்த தளபதியாக கோத்தா

(கொழும்பு)

சிங்கள வரலாற்றை கூறும் மஹாவம்சம் நூலில் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ இலங்கையின் மன்னராகவும், கோத்தபாய ராஜபக்ஷ தளபதியாகவும் வர்ணிக்கப்பட்டுள்ளனர்.

அவர்கள் தொடர்பான அத்தியாயங்கள் தற்போது எழுதப்பட்டு வருவதாக ஆங்கில ஊடகம் ஒன்று தெரிவித்துள்ளது.

இறுதி யுத்தத்தின் போது பொது மக்களில் ஒருவரேனும் உயிரிழக்காமல் போரை வெற்றி கொண்ட மன்னராக மகிந்த ராஜபக்ஷ சித்திரிக்கப்பட்டுள்ளார்.

இதேவேளை இந்த யுத்தத்துடன் தொடர்புடைய சரத் பொன்சேகா,

20 ஆம் பக்கம் பார்க்க....

# இலங்கை விவகாரத்துக்கு இந்தியச் சிறப்புப் பிரதிநிதி

## நியமிக்கிறார் பிரதமர் மோடி

(புதுடில்லி)

*இலங்கை விவகாரங்களைக் கவனிப்பதற்கென தனது நேரடி கண்காணிப்பின் கீழ் சிறப்புப் பிரதிநிதி ஒருவரை நியமிக்க இந்தியாவின் புதிய பிரதமர் நரேந்திர மோடி முடிவு செய்திருப்பதாக டில்லி தகவல்கள் தெரிவிக்கின்றன.*

*இந்தியாவின் முன்னாள் பிரதமர் இந்திரா காந்தி, தமது ஆட்சி காலத்தில் இலங்கை விவகாரங்களுக்காக மட்டும் ஜி.பார்த்தசாரதியை சிறப்பு பிரதிநிதியாக நியமித்திருந்தார்.*

*அதேபோல் இலங்கை விவகாரங்களை தமது சார்பில் நேரடியாக கையாளக் கூடிய சிறப்புப் பிரதிநிதியை நியமிப்பது குறித்து பிரதமர் மோடி ஆலோசிப்பதாக கூறப்படுகிறது.*

இலங்கை விவகாரங்களைக் கவனிக்க சிறப்பு பிரதிநிதி ஒருவரை நியமிக்க இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி முடிவு செய்யயிருப்பதாக டில்லி இருந்து வெளியாகிய தகவல்கள் தெரிவிக்கின்றன.

இலங்கை பிரச்சினையில் கடந்த 25 ஆண்டு காலத்துக்கும் மேலாக தீர்மானிக்கக் கூடிய சக்திகளாக வெளியுறவுத்துறை அதிகாரிகள், றோ மற்றும் ஐ.பி. அதிகாரிகளே இருந்து வருகின்றனர். இதனால் எத்தகைய அரசியல் மாற்றங்கள் ஏற்பட்ட போதும் பிரதமர்கள் மாறிய போதும் இந்தியாவின் இலங்கை தொடர்பான கொள்கை என்பது இலங்கையுடன் அனுசரித்துப் போகின்ற கொள்கையாக இருந்து வருகிறது.

19 ஆம் பக்கம் பார்க்க....

## மலேசியாவில் கைதான குசாந்தன் விமான தயாரிப்பு பொறியியலாளர்

### புலிகளின் முக்கிய புள்ளி எனவும் தெரிவிப்பு

(கொழும்பு)

மலேசிய பயங்கரவாத தடுப்பு பிரிவினால் கைது செய்யப்பட்டு இலங்கையிடம் ஒப்படைக்கப்பட்ட குசாந்தன் மாஸ்டர் என்பவர், புலிகளின் விமானப் படையின் நிறுவனரான சங்கரின் மைத்துனர் என புலனாய்வு பிரிவினருக்கு தகவல்கள் கிடைத்துள்ளன.

குசாந்தன் மாஸ்டர், புலிகள் அமைப்புக்கு சொந்தமான விமானங்களை பயன்படுத்தி கொழும்பு, அநுராதபுரம் உள்ளிட்ட பிரதேசங்களில் விமான தாக்குதல்களை நடத்த நேரடியான பங்களிப்பை வழங்கியவர் என தெரிய வந்துள்ளது.

பொறியியலாளரான அவர், புலிகளின் விமானப்படையில் பயன்படுத்தப்பட்ட ஸ்லின் ரக விமானங்களை தாக்குதல் விமானங்களாக மாற்றும் பணிகளிலும் சிறிய ஹெலிகொப்டர்களை வடிவமைத்து அவற்றை பரீட்சித்து பார்க்கும் நடவடிக்கைகளிலும் ஈடுபட்டமைக்கான தெளிவான சாட்சியங்கள் இருப்பதாக இராணுவப் புலனாய்வு பிரிவின், விசாரணை அதிகாரிகள் உறுதிப்படுத்தியுள்ளனர்.

புலிகளின் விமானப் படைக்குரிய

20 ஆம் பக்கம் பார்க்க....

## சர்வதேச யுத்தம் அவசியமாம்!

(கொழும்பு)

இராணுவத்தினர் போரில் விடுதலைப் புலிகளை தோற்கடித்த போதும் புலம்பெயர் புலிப் பயங்கரவாதிகள் சர்வதேசத்தில் ஈழம் என்ற கொள்கையை முன்னோக்கி நகர்த்தி வருவதாக வடமேல் மாகாண முதலமைச்சர் தயாசிறி ஜயசேகர தெரிவித்தார்.

இதற்கு எதிராக இலங்கையும் சர்வதேச ரீதியில் கொள்கை ரீதியான போரை தொடுக்க வேண்டும் எனவும் அவர் கூறியுள்ளார்.

குருநாகல் பிரதேசத்தில் நடைபெற்ற இராணுவத்தினருக்கு மரியாதை செலுத்தும் நிகழ்வில் கல

20 ஆம் பக்கம் பார்க்க....

## பாரிய பின்னடைவில் எமது அரசாங்கம்!

### ஐ.தே.க தெரிவிப்பு

(கொழும்பு)

அரசாங்கம் பாரிய பின்னடைவை எதிர்நோக்கி வருவதாக ஐக்கிய தேசியக் கட்சியின் தலைமைத்துவப் பேரவையின் தலைவர் கரு ஜயசூரிய தெரிவித்துள்ளார். அபிவிருத்தி என்ற அழகிய சொல்லைப் பயன்படுத்தி அரசாங்கம் ஊழல் மோசடி மற்றும் கொள்ளையில் ஈடுபட்டு வருவதாக அவர் குற்றம் சுமத்தியுள்ளார். ஆட்சியாளர்கள் நாட்டின் நலனை விடவும் குடும்பத்தின் நலனில் கூடுதல் கரிசனை காட்டி வருகின்றமை துரதிர்ஷ்டவசமானது என அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

கல்வி, சுகாதாரம், சட்டம் ஒழுங்கு, பொருளாதாரம், மக்களின் இயல்பு வாழ்க்கை ஆகிய அனைத்து விடயங்களும் பாதிக்கப்பட்டுள்ளதாகத் தெரிவித்துள்ளார். ஆளும் கட்சிக்குள் பிரச்சினைகள் நாளுக்கு நாள் உக்கிரமடைந்து செல்வதாகத் தெரிவித்துள்ளார். ஆட்சியாளர்கள் இலங்கை என்பது தங்களது சொந்த சொத்து எனக் கருதி செய

20 ஆம் பக்கம் பார்க்க....

## மோடி அரசாங்கத்தின் மீதான இலங்கையின் பயம் நீங்கியது

### அமைச்சர் டி சில்வா தெரிவிப்பு

(கொழும்பு)

இந்தியப் பிரதமராக நரேந்திர மோடி பதவியேற்றால், இலங்கையை அசௌகரியத்திற்கு உள்ளாக்குவார் என அரசாங்கத்திற்கு எதிரானவர்கள் கருதியதாக அமைச்சர் நிமால் சிறிபால டி சில்வா நேற்று தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

மன்மோகன் சிங்கின் ஆட்சியில் போன்று அல்லாது மோடி ஆட்சிக்கு வந்தால், இலங்கை சிரமங்களை எதிர்நோக்க வேண்டி வரும், அரசா[illegible] சிரமங்களை எதிர்நோக்கும் என அவர்கள் நினைத்தனர்.

எனினும் பாஜக தலைமையிலான இந்திய அரசாங்கத்தின் தலைவர்கள், பிரதமர் நரேந்திர மோடியும் இலங்கையின் நலன்களுக்கு எதிராக செயற்படுவார்கள் என்ற அச்சம் நீங்கியுள்ளது.

ஜனாதிபதிக்கும், இந்தியாவின் புதிய பிரதமருக்கும் இடையிலான அண்மைய சந்திப்பு இரு நாடுகளுக்

19 ஆம் பக்கம் பார்க்க....

## கௌரவமான தீர்வு கிடைப்பதற்கு தமிழகத்தின் ஆதரவு அவசியமானது!

### ஜெயலலிதாவுக்கு சம்பந்தன் கடிதம்

(கொழும்பு)

இலங்கையில் நீதி மற்றும் சமத்துவத்தின் அடிப்படையிலான கௌரவமான தீர்வு ஒன்று எட்டப்படுவதை உறுதிப்படுத்துவதற்கு இந்தியாவின் பங்களிப்புத் தொடரவேண்டும் என்று இந்தியப் பிரதமரிடம் நாம் கோரியுள்ளோம். இதனை எட்டுவதற்கு உங்களின் முழு ஆதரவு தொடர்ந்து அவசியம் என்று நாங்கள் வேண்டி



நிற்கின்றோம்.

இவ்வாறு தமிழக முதல்வர் ஜெயலலிதாவுக்குத் தமிழ்த் தேசியக்



19 ஆம் பக்கம் பார்க்க....

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

## இலவச கணனி பழுது பார்த்தல் சேவை

தேர்ச்சி பெற்ற வல்லுநர்களால் ஆனைக்கோட்டையில் 2Km க்கு உட்பட்ட பிரதேசங்களிற்கு இலவசமாக கணனி பழுது பார்க்கும் சேவையானது துரிதமாக திருத்தித் தரப்படும்.

**தொடர்பு: பிரியதர்சன்**
**தொ.பே: 0766967246**

(சி-7513)



# தேவை

**யாழ் நகர மத்தியில் உள்ள உயர்தர சைவ உணவகம் ஒன்றிற்கு**



1. உணவு பரிமாறுதலில் அனுபவம் வாய்ந்தவர்கள் (சிங்களம், ஆங்கிலம் கதைக்கத் தெரிந்தவர்கள் விரும்பத்தக்கது)

2. சமையல் உதவியாளர்கள்

3. காசாளர்கள் (பெண்கள்)

4. CARE TAKER (வீடு பராமரிப்பவர்) வயது 40க்கு மேல். தங்கியிருந்து வேலை செய்தல் அவசியம்.

**தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி**
60, Stanley Road,
ஆரியகுளச் சந்தி.
**தொலைபேசி இலக்கம் : 0773478427**

(6519)


## கூட்டமைப்பு உறுப்பினர் கட்சியிலிருந்து நீக்கம்

(யாழ்ப்பாணம்)

யாழ்.வலிகாமம் தென்மேற்கு (மானிப்பாய்) பிரதேச சபையின் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு உறுப்பினர் கே.கௌரிகாந்தினைக் கட்சியிலிருந்து நீக்குவதாக தமிழரசுக் கட்சியின் பொதுச் செயலாளர் மாவை சேனாதிராசா கடிதம் அனுப்பியுள்ளார்.

வடமாகாண சபையின் அவைத்தலைவரும் இலங்கை தமிழரசுக்கட்சியின் துணைப் பொதுச்செயலாளருமான சீ.வீ.கே.சிவஞானம் இதனை உறுதிப்படுத்தினார்.

கட்சியின் கொள்கைகள் கோட்பாடுகளுக்கு எதிராகச் செயற்பட்டார் எனத் தெரிவிக்கப்பட்டே இவர் கட்சியிலிருந்து நீக்கப்பட்டுள்ளார்.

வலிகாமம் தெற்மேற்குபிரதேசசபையின் வரவு செலவுத்திட்டம் இரண்டு முறை தோற்கடிப்பதற்கு காரணமாக இருந்தமை, பிரதேச சபைத் தவிசாளர் பதவி விலகக் காரணமாக இருந்தமை மற்றும் மானிப்பாய் மருதடி விநாயகர் ஆலயத்தின் நடவடிக்கைகளை பிரதேச சபைக்குள் கொண்டு வந்தமை உள்ளிட்ட விடயங்களைக் காரணம் காட்டி இவர் கட்சியிலிருந்து நீக்கப்பட்டுள்ளார்.

இவர் கட்சியிலிருந்து நீக்கப்பட்டதுடன், பிரதேச சபை உறுப்பினர் பதவியிலிருந்தும் நீக்குவது தொடர்பாக தேர்தல் திணைக்களத்திற்கு அறிவிக்கப்பட்டுள்ளதாகவும் துணைப் பொதுச்செயலாளர் சிவஞானம் மேலும் தெரிவித்தார். (எ-6)


# பிள்ளையார் இன்

எமது உணவகத்தில் இந்திய சமையற்கலை வல்லுநர்களால் தயாரிக்கப்பட்டு தரமான சைவ, அசைவ உணவுகள் நிறைவான சேவையுடன் வழங்கப்படுகின்றன.

**விசேடமான உணவுகளான**

- மசாலா தோசை - 150/=மட்டுமே.
- பேப்பர் தோசை, வெங்காய தோசை, நெய்த் தோசை - 120/= மட்டுமே.
- பூரி, சப்பாத்தி - 100/ மட்டுமே.

தினமும் மாலை 6 மணிமுதல் 10 மணிவரை விசேட உணவுகளான மரக்கறி புரியாணி, பிறைட் றைஸ், சிக்கின் புரியாணி, சிக்கின் பிறைட் றைஸ் என்பன விசேட விலைக் கழிவுடன் பெற்றுக்கொள்ள நாடவேண்டிய ஒரே இடம்.

**இல.31, மானிப்பாய் வீதி, யாழ்ப்பாணம். 0212222829**

(C-7506)


## JAFFNA MEDICAL ASSOCIATION ANNUAL GENERAL MEETING 2014

### NOTICE OF MEETING

Notice is hereby given that the **Annual General Meeting** of the **Jaffna Medical Association** will be held on Saturday, **28th June 2014 at 11.30 am at the Lecture hall of Nursing Training School, Jaffna.** for the following purposes;

**Agenda**

1. Annual Report of the Committee of Management on the affairs of the Association and the Statement of Accounts for the year ended 31st December 2013 and the Report of the Auditors thereon
2. Resolutions (Annexed)
3. Election of the Committee members for Year 2014/15
4. Appointment of the Auditors of the Association
5. Any other matters

By order of the Committee of Management,
**Hony. Secretary.**

(6521)

# கேள்வி அறிவித்தல் - 2014

## கரைச்சிப் பிரதேச சபை – கிளிநொச்சி
## நிறுத்தல் தராசு கட்டணத்தை ஏலத்தில் விடுதல்
## கிளிநொச்சி சேவைச்சந்தை

கரைச்சிப் பிரதேச சபைக்கு சொந்தமான கீழ்க் காணும் அட்டவணைக்கமைய 03.06.2014 தொடக்கம் 31.12.2014 ஆண்டு வரையான காலப்பகுதிக்கு குத்தகைக்கு விடுவதற்கான அரக்கு முத்திரையிடப்பட்ட மீள் கேள்விகள் கீழ்க்குறிப்பிடப்படும் நிபந்தனைகளுக்கமைய கோரப்படுகின்றன.

அலுவலக நாட்களில் மு.ப 8.30 - பி.ப 3 மணிவரை

கேள்விப் பத்திரம் வழங்கும் காலம் : 30.05.2014 - 13.06.2014
கேள்விப்பத்திரம்ஏற்றுக்கொள்ளும் இறுதித்திகதியும்நேரமும்: 13.06.2014 - மு.ப 10.00 மணிவரை
கேள்வி திறக்கும் திகதி : 13.06.2014 - மு.ப 10.30 மணி
கேள்வி திறக்கும் இடம் : கரைச்சி பிரதேச சபை மாநாட்டு மண்டபம்

கேள்விப் பத்திரங்கள் இரு பிரதிகளில் தயாரிக்கப்பட்டு மூலப் பிரதியை தலைவர், கரைச்சிப் பிரதேச சபை, கிளிநொச்சி என்ற முத்திரையிட்டு தபால் உறையின் இடது பக்க மேல் மூலையில் கேள்வியின் பெயர் தெளிவாக இடப்பட்டு பதிவுத் தபால் மூலம் அல்லது அலுவலகத்தில் வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் உரிய நேரத்திற்கு முன் இடப்படல் வேண்டும். இரண்டாவது பிரதியை பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர், பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர் அலுவலகம், கிளிநொச்சி என்ற முகவரியிட்டு பதிவுத் தபாலில் அனுப்பி வைக்க வேண்டும். கேள்விப் பத்திரம் பெற விரும்புவோர் தங்களது ஆள் அடையாள அட்டையைக் கொண்டு வருதல் வேண்டும். அத்துடன் அதன் நிழல்படப் பிரதியையும் சமர்ப்பித்தல் வேண்டும்.

| இல | கிளிநொச்சி பொதுச் சந்தையின் விபரம் | கேள்வி வைப்புப் பணம் (மீளப்பெறக்கூடியது) | கேள்விப்படிவக் கட்டணம் (NBTநீங்கலாக) (மீளளிக்கப்படமாட்டாது) | ஏற்றுக்கொள்ளக்கூடிய ஆகக்குறைந்த கேள்வி மதிப்பீடு (NBTநீங்கலாக) | |
|---|---|---|---|---|---|
| | | | | நாள் ஒன்றிற்கு | 15.06.2014 தொடக்கம் 31.12.2014 வரை |
| 01 | மீன் | | | | |
| 02 | கருவாடு | | | | |
| 03 | மரக்கறி | | | | |
| 04 | தேங்காய் கொப்பறா | | | | |
| 05 | வாழைக்குலைஏனைய பழவகை | 20,000.00 | 1000.00 | 15,000.00 | 3000,000.00 |
| 06 | வெற்றிலை | | | | |
| 07 | பாக்கு | | | | |
| 08 | புகையிலை | | | | |
| 09 | தேங்காய் | | | | |
| 10 | உள்ளூர் உற்பத்திகள் | | | | |

நிபந்தனைகள்


01. உரிய காலத்தில் சமர்ப்பிக்கப்படாத கேள்விகள் இரத்துச் செய்யப்படும்
02. கடந்தகாலக் கேள்விகள் மூலம் சபைக்கு நிலுவைகளைச் செலுத்தத் தவறியவர்களும் கறுப்புப் பட்டியலில் உள்ளவர்களும் குத்தகைக் கேள்விகளில் பங்குபற்ற தகுதியற்றவர்கள்.
03. கேள்வியை முழுமையாகவோ அல்லது பகுதியாகவோ ஏற்பதற்கோ நிராகரிப்பதற்கோ கேள்விச் சபைக்கு அதிகாரம் உண்டு.
04. சித்தியடையும் கேள்விதாரர் கேள்வித் தொகையின் மூன்றில் ஒரு பகுதிப் பணத்தை உடனடியாக செலுத்தி சபையுடன் ஒப்பந்தம் செய்தல் வேண்டும்.
05. மேலதிக விபரங்களை கரைச்சி பிரதேச சபையுடன் நேரடியாக தொடர்பு கொண்டு பெற்றுக் கொள்ளலாம்.

**கரைச்சி பிரதேச சபை,**
**கிளிநொச்சி.**

(சி-7512)

**வைத்திலிங்கம் குகராசா,**
**தவிசாளர்.**

## விளக்கமறியல்



(யாழ்ப்பாணம்)

யாழ்.சாவற்கட்டு பகுதியில் டைனமற் வெடி வைத்து பிடிக்கப்பட்ட மீன்களை வைத்திருந்த இருவரையும் தலா 2 இலட்சம் ரூபாய் பிணையில் செல்ல அனுமதியளித்த மல்லாகம் நீதவான் நீதிமன்ற நீதவான், மீன்களை அழிக்கும்படி யாழ். கடற்றொழில் நீரியல் வளத்துறையினருக்கு நேற்று உத்தரவிட்டார்.

மானிப்பாய் சாவற்கட்டு பகுதியில் வைத்து நேற்று முன்தினம் இரவு கைது செய்யப்பட்ட மேற்படி இருவரையும் நேற்று மல்லாகம் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்திய போதே நீதவான் மேற்படி உத்தரவினை பிறப்பித்தார். (எ-6)


**வலம்புரி**
விளம்பரத் தொடர்புகளுக்கு
**021 321 0815**
**021 567 1532**
valampurii@yahoo.com



## ST.JOHN'S COLLEGE, JAFFNA
## VACANCIES

Applications are hereby invited from the qualified persons for the following vacancies.

1. Biology A/L and Science English Medium for 6-11 Qualification: B.Sc Degree in Bio Science
2. Science for Technology - A/L
   Qualification: B.Sc Degree in Bio Science or Physical Science
3. Engineering Technology - A/L
   Qualification: B.Ed Degree in Technology/Technological Diploma (NDT, NDES)

Please send your complete CV including the contact details of two non - related referees by post or via e-mail on or before 10th June 2014 to the following address. Only shortlisted candidates will be called for the interview.

**The Principal**
**St.John's College**
**Jaffna.**
**stjohns@sltnet.lk**

(C-7511)


# மரண அறிவித்தல்



## ந.பத்மலோஜனி அம்மா

சட்டநாதர் றோட், திருநெல்வேலி கிழக்கை பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட ந.பத்மலோஜனி அம்மா நேற்று (29.05.2014) வியாழக்கிழமை சிவபதமடைந்தார்.

அன்னார் காலஞ்சென்ற நடராஜசர்மா – மீனாட்சி அம்மா தம்பதியரின் மூத்த புதல்வியும், சிதம்பரநாதசர்மா, [illegible]ணி, விஜயகுமாரி, பாஸ்கரநாதசர்மா, வசந்தகுமாரி, காலஞ்சென்ற சுந்தரநாதசர்மா ஆகியோரின் அன்புச் சகோதரியும், கமலராணி, பாலசுப்பிரமணியக் குருக்கள், செம்பொற்[illegible]ஸ்வரசர்மா, காலஞ்சென்ற நடராஜ குருக்கள் ஆகியோரின் அன்பு மைத்துனியும், அனந்தலெட்சுமி (வாணி), ஸ்ரீதேவி, சுரேஸ்குமார் (கோவிந்தன்), ஜெயலட்சுமி ஆகியோரின் பாசமிகு பெரியம்மாவும், மாணிக்கராஜசர்மா, கமலராஜசர்மா, சிவனருட்செல்வசர்மா (வாசு), கிருபானுசுத சர்மா (பானு) ஆகியோரின் அன்பு [illegible]யும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் 30.05.2014 இன்று வெள்ளிக்கிழமை மு.ப 10 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக செம்மணி இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

சட்டநாதர் வீதி,
திருநெல்வேலி கிழக்கு.

(6516)


தகவல் :
குடும்பத்தினர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முள்ளிவாய்க்கால் நினைவை அஞ்சலிக்க யாழ்ப்பாண மாநகர சபையில் மறுப்பு

## எதிர்க்கட்சியினர் வெளிநடப்பு





(யாழ்ப்பாணம்)

இறுதிக்கட்ட போரில் முள்ளிவாய்க்கால் பகுதியில் கொல்லப்பட்ட மக்களுக்கு அஞ்சலி செலுத்த யாழ்.மாநகரசபையின் எதிர்த் தரப்பான தமிழ்த்தேசியக் கூட்டமைப்பின் உறுப்பினர்களினால் முன்வைக்கப்பட்ட கோரிக்கையை மாநகர முதல்வர் உள்ளிட்ட ஆளும் தரப்பினர் ஏற்க மறுத்ததால் சபைக் கூட்டத்தில் இருந்து எதிர்க்கட்சி உறுப்பினர்கள் வெளிநடப்பு செய்துள்ளனர்.

யாழ்.மாநகரசபையின் மாதாந்த பொதுக்கூட்டம் நேற்று முற்பகல் 10.30 மணியளவில் மாநகர முதல்வர் திருமதி யோகேஸ்வரி பற்குணராசா தலைமையில் ஆரம்பமானது.

இதன் போது மாநகர சபையின் எதிர்க்கட்சியினர் முள்ளிவாய்க்காலில் கொல்லப்பட்ட மக்களுக்கு அஞ்சலி செலுத்துவதற்கான கோரிக்கையை சபையில் முன்வைத்தனர்.

முள்ளிவாய்க்காலில் இறந்தவர்களுக்கு மட்டும் சபையில் அஞ்சலி செலுத்தமுடியாது. 1983 ஆம் ஆண்டுக்கு பின்னர் கொல்லப்பட்ட அனைவருக்கும் அஞ்சலி செலுத்துவதானால் சபையில் அஞ்சலி செலுத்தலாம் என முதல்வர் அறிவித்தார்.

முதல்வரின் உத்தரவிற்கு ஆளும் கட்சியினரும் ஆதரவு வழங்கினர்.

இருப்பினும் 1983 ஆம் ஆண்டு முதல் கொல்லப்பட்டவர்களுக்கு அஞ்சலி செய்வது என்றால் துரோகிகளுக்கும் நாம் அஞ்சலி செலுத்த வேண்டும்.

எனவே அவ்வாறு எங்களால் அஞ்சலி செலுத்த முடியாது. இன்று நாம் முள்ளிவாய்க்காலில் கொல்லப்பட்டவர்களுக்கு மட்டுமே அஞ்சலி செலுத்த வேண்டும் என்று எதிர்க்கட்சியினர் வாதிட்டனர்.

ஆனால் எதிர்க் கட்சியினரின் இக் கோரிக்கை சபையின் ஆளும் கட்சியினரால் முற்றுமுழுதாக மறுக்கப்பட்ட போது எதிர்க்கட்சியினர் சபை நடவடிக்கைகளில் இருந்து வெளிநடப்பு செய்தனர்.

இதனையடுத்து எதிர்க்கட்சியின்றி அமைதியான முறையில் கூட்டம் இடம்பெற்றது. இதேவேளை கூட்டமும் பிற்பகல் ஒரு மணியளவிலேயே முடிவிற்கு கொண்டுவரப்பட்டது.

**மோடிக்கு எழுந்து நின்று வாழ்த்து:**

மேலும் நேற்று இடம்பெற்ற யாழ். மாநகரசபையின் மாதாந்தப் பொதுக் கூட்டத்தில் இந்திய பிரதமராக புதிதாக பதவியேற்றுள்ள நரேந்திர மோடிக்கு மாநகர சபையில் எழுந்து நின்று வாழ்த்து தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்தியா வின் புதிய பிரதமராக நரேந்திர மோடி பதவியேற்றுக் கொண்டதற்கு முதல்வர் தலைமையில் ஆளும் கட்சியினர் அனைவரும் எழுந்து நின்று வாழ்த்துக்களையும் பாராட்டுக்களையும் தெரிவித்தனர்.

கடந்த திங்கட்கிழமை இந்தியாவின் புதிய பிரதமராக நரேந்திர மோடி பதவியேற்றார்.

குறித்த பதவியேற்பு நிகழ்விற்கு ஜனாதிபதியின் அழைப்பின் பேரில் யாழ்.மாநகரசபை முதல்வரும் கலந்து கொண்டிருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது. (6)

## புத்தாண்டு விழா

(யாழ்ப்பாணம்)

யாழ்.கொட்டடி கிராம அபிவிருத்திச் சங்கமும் சனசமூக நிலையமும் இணைந்து நடத்தும் புத்தாண்டு விழா நாளை சனிக்கிழமை பிற்பகல் 6.30 மணிக்கு சீனிவாசகம் வீதியிலமைந்துள்ள சனசமூக நிலைய கட்டட முன்றிலில் கிராம அபிவிருத்திச் சங்க தலைவர் கலாநிதி நா.தனேந்திரன் தலைமையில் நடைபெறும்.

இந் நிகழ்விற்கு பிரதம விருந்தினராக யாழ்.பல்கலைக்கழக வணிகத் துறைத் தலைவர் பேராசிரியர் க.தேவராஜா கலந்து கொண்டு சிறப்பிக்கவுள்ளார்.

சிறப்பு விருந்தினர்களாக யாழ். மாவட்ட ஓய்வுபெற்ற கிராம அபிவிருத்தி உத்தியோகத்தர் திருமதி நவமணி அலோசியஸ் ஜெயராஜன், யாழ். இந்துக் கல்லூரி அதிபர் வீரவாகு கணேசராசா ஆகியோர் கலந்து கொண்டு சிறப்பிக்கவுள்ளனர்.

கௌரவ விருந்தினர்களாக யாழ்.மாநகரசபை பொதுசன தொடர்பு உத்தியோகத்தர் சண்முகம் லோகசிங்கம், பிரபல தொழிலதிபர் நடராசா சத்தியரூபன், கொட்டடி ஜே/83 கிராம சேவையாளர் திருமதி. றசிகலா விஜயரட்ணம் ஆகியோர் கலந்து கொண்டு சிறப்பிக்கவுள்ளனர்.

இதன்போது சமூகத்தொண்டாற்றிய சேவையாளர்களுக்கு சமூக திலகம் விருது வழங்கி கௌரவிக்கப்படவுள்ளதுடன் திருக்குறள் மனனம், பரிசளிப்பு என்பன இடம்பெறவுள் ளன. (2)

# 13ஆவது திருத்தத்தை அமுலாக்க இனியும் காலம் தாழ்த்தாதீர்

## சுமந்திரன் எம்.பி. வலியுறுத்து



இந்தியாவின் காங்கிரஸ் அரசாங்கத்திற்கு வழங்கப்பட்ட அனைத்து வாக்குறுதிகளையும் ஒப்பந்தங்களையும் நிறைவேற்றுமாறு புதிய பிரதமர் நரேந்திர மோடி இலங்கை ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவை வலியுறுத்தியுள்ளமை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பிற்கு மகிழ்ச்சியை தருகின்றது என அக் கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன் தெரிவித்தார்.

கொழும்பில் நேற்று முன்தினம் நடைபெற்ற அதிகாரத்தைப் பகிர்ந்து நாட்டை ஒருமைப்படுத்தும் அமைப்பு ஊடகவியலாளர் சந்திப்பிலேயே சுமந்திரன் மேற்கண்டவாறு தெரிவித்தார். அவர் தொடர்ந்து அங்கு உரையாற்றுகையில் தெரிவித்ததாவது,

இலங்கைக்கும்' இந்தியாவுக்கும் இடையில் ஏற்படுத்திக் கொண்ட உடன்படிக்கையின் பிரகாரம் உருவாக்கப்பட்டதும் அரசியல் அமைப்பில் ஏற்றுக் கொள்ளப்பட்டதுமான 13ஆவது திருத்தத்தை முழுமையாக அமுல்படுத்த வேண்டும். அதற்கு அப்பாலும் சென்று அதிகாரப் பகிர்வை அர்த்தப்படுத்த வேண்டும் என்று பிரதமர் மோடி ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவுடனான முதலாவது சந்திபபிலேயே வலியுறுத்தியுள்ளனர்.

எனவே, இனியும் காலம் தாழ்த்தாது 13ஆவது திருத்தம், அதிகாரப் பகிர்வு என்பவற்றை அரசாங்கம் மீள ஆரம்பிக்க வேண்டும் என்றும் சுட்டிக் காட்டியுள்ளார்.

முன்னாள் பிரதமர் மன்மோகன் சிங்கிற்கும் காங்கிரஸ் கட்சித் தலைமையிலான அரசாங்கத்திற்கும் தாம் கொடுத்த வாக்குறுதிகளை நிறைவேற்றத் தேவையில்லை. அவர்கள் ஆட்சியில் இல்லாதபோது அவர்களுக்கு அளித்த வாக்குறுதிகளும் செயலற்றுப் போய்விட்டது என்ற எண்ணத்திலேயே இலங்கை அரசாங்கம் மகிழ்ச்சியில் இருந்தது. ஆனால், கொடுக்கப்பட்ட வாக்குறுதிகள் மன்மோகன் சிங்கிற்கோ காங்கிரசிற்கோ அல்ல. இந்தியாவிற்கு என்பதனை மோடி நினைவுபடுத்தியுள்ளார்.

13ஆவது திருத்தம் அதற்கு அப்பாலான அதிகாரப்பகிர்வு என்பதனை விட சாதாரண விடயங்களில்கூட நாம் ஒடுக்கப்படுகின்றோம். எமது வட மாகாண முதலமைச்சருக்கான அதிகாரங்கள் என்பதே கேள்விக்குறியாக உள்ளன. முதலமைச்சரின் விருப்புக் கமைய மாகாண சபையின் பிரதம செயலாளர் மற்றும் பிரதி பொலிஸ்மா அதிபரைக்கூட முதலமைச்சரினால் நியமிக்க முடியவில்லை. முதலமைச்சர் சரியான விதத்தில் யாப்பு அதிகாரங்களின்படி இயங்குவதற்குக்கூட இங்கு அனுமதி இல்லை.

இந்த சூழ்நிலைகளையெல்லாம் புரிந்துகொண்ட பின்னரே இந்தியப் பிரதமர் நரேந்திரமோடி ஜனாதிபதிக்கு 13ஆவது திருத்தம் மற்றும் அதிகாரப் பகிர்வு தொடர்பில் வேண்டுகோள் விடுத்துள்ளார்.இந்தியா ஒரு இந்து நாடு என்ற வகையில் இந்தியப் பிரதமர் எமக்கு இழைக்கப்பட்ட அநீதிகளை விளக்கமாக புரிந்து கொண்டுள்ளார் என்பது ஜனாதிபதி மஹிந்தவுடனான முதலாவது சந்திப்பிலேயே உலகிற்கு வெளிப்படுத்தியுள்ளது.

இந்திய வெளியுறவு செயலாளர் சுஜாதா சிங் வெளியிட்டுள்ள ஊடக செய்தி இதனை தெளிவுப்படுத்தியுள்ளது.

எனவே, இனியும் காலம் தாழ்த்தி எம்மை அரசாங்கம் ஏமாற்ற முடியாது. 13ஆவதுஅரசியலமைப்பு திருத்தத்தை அமுல்படுத்தி அதற்கு அப்பாலான அதிகாரப் பகிர்வை நடை முறைப்படுத்துவதற்கான நடவடிக்கைகளை அரசாங்கம் காலம் தாழ்த்தாது உடனடியாக செயற்பட வேண்டும் என்றார் (2)

# இராசி பலன்

30.05.2014

(வைகாசி 16, வெள்ளிக்கிழமை)

சூரிய உதயம் காலை 5.53 மணிக்கு

துதியை பின்னிரவு 2.10 மணிவரை

மிருகசீரிடம் முன்னிரவு 09.11 மணிவரை

இராகு காலம் 10.22 - 11.52 மணிவரை

சுப நேரம் 5.52 - 7.22 மணிவரை

வளவன்

**மேடம்:** சவால்களை சமாளிக்கும் நாள் உடன் பிறப்புகள் வழியில் உள்ளம் மகிழும் சம்பவம் ஒன்று நடைபெறலாம், செய் தொழில் மேன்மையுண்டு, வழிபாட்டில் ஆர்வம் காட்டுவீர்கள்.

**இடபம்:** சுப காரிய பேச்சுக்கள் முடிவாகலாம் வியாபார விருத்தியுண்டு. மனத்தில் இனம் புரியாத கவலைகள் தோன்றி மறையும் தொலைபேசி வழி தகவலால் நன்மையுண்டு.

**மிதுனம்:** ஒருவகையில் சிக்கனமாக இருந்தாலும் மற்றொருவகையில் செலவுகள் ஏற்படலாம் விலையுயர்ந்த பொருட்களை வாங்கும் எண்ணம் உருவாகும் ஆன்மீக சிந்தனை மேலோங்கும் நாள்

**கடகம்:** தொலைபேசி வழியில் கேட்கும் செய்திகளால் உற்சாகம் அடைவீர்கள் மாற்றங்களால் ஏற்றங்கள் உருவாகலாம் காரிய அலைச்சல்கள் அதிகரிக்கும்

**சிம்மம்:** தொழில் வருமானத்தை அதிகரிக்க புதிய வழியை கையாள்வீர்கள் மனமகிழ்ச்சி தரும் செய்திகள் வந்து சேரலாம் முயற்சிகள் எளிதில் கைகூடும்

**கன்னி:** விடியும் பொழுதே காது குளிரும் செய்திகள் வந்து சேரலாம் ஆடம்பர பொருட்கள் வாங்கும் எண்ணம் உருவாகும் ஆலய வழிபாட்டில் ஆர்வம் காட்டுவீர்கள்

**துலாம்:** தேக ஆரோக்கியத்தில் தெளிவு பிறக்கும் நாள் தந்தை வழி உறவில் மனநிறைவான செய்தி ஒன்று வந்து சேரலாம் பயணங்களால் ஆதாயம் உண்டு

**விருச்சிகம்:** கடவுளை வழிபட்டு காரியம் தொடங்க வேண்டிய நாள் எடுத்த காரியங்களை முடிப்பதில் கொஞ்சம் அலைச்சல் ஏற்படலாம். மனக்கிலேசங்கள் கூடும்

**தனுசு:** குடும்பத்தில் அனைவரின் தேவைகளையும் பூர்த்தி செய்து மகிழ்வீர்கள் நீண்ட நாளைய ஆசை ஒன்று நிறைவேறலாம் பயணங்களால் பலனுண்டு நண்பர்களின் சந்திப்புண்டு

**மகரம்:** பிரியமான சிலரின் சந்திப்புகள் இடம் பெறலாம். உடல் நலம் சீராகும் சேமிப்பை அதிகரிக்க முற்படுவீர்கள் பகைவர்கள் விலகுவர் விருந்துகளில் கலந்து மகிழ்வீர்கள்.

**கும்பம்:** தாழ்ந்த சுபாவம் உண்டு புண்ணிய காரியங்களில் ஈடுபாடு காட்டுவீர்கள் வழிபாட்டால் வளர்ச்சி கூடும். எடுத்த காரியங்களை முடிப்பதில் சில தாமதங்கள் ஏற்படலாம்

**மீனம்:** புதிய நபர்களின் சந்திப்புகள் இடம் பெறலாம், அடுத்தவர் நலனில் அதிக அக்கறை காட்டுவீர்கள், தொழில் விருத்தியுண்டு தொலைபேசி வழியில் பொன்னான செய்தி வந்து சேரலாம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கவனிப்பாரின்றிய நிலையில் செல்லமுத்து மைதானம்

## பிரதேச சபை கவனத்தில் எடுக்குமா?

யாழ்.மாவட்ட விளையாட்டு அரங்குகளில் ஒன்றாக விளங்கும் மானிப்பாய் செல்லமுத்து விளையாட்டு அரங்கு தற்போது கவனிப்பாரின்றி காணப்படுவதாக அப்பிரதேச வாசிகளால் கவலை தெரிவிக்கப்படுகிறது.

குறித்த விளையாட்டு அரங்கானது கடந்த காலங்களில் முன்னணி விளையாட்டு வீரர்களையும் கலைஞர்களையும் உருவாக்கி பெருமை கொண்டதாக விளங்கியது அத்துடன் மேற்படி மைதானத்தில் கிரிக்கெட் மற்றும் உதைபந்தாட்ட போட்டி என்பன ஒரே நேரத்தில் இடம் பெறுவதற்கான வசதியும் உள்ளது.

ஆனால் தற்போது குறித்த அரங்கின் கூரைகள் சேதமடைந்து காணப்படுவதுடன் ஆடு, மாடுகளின் இருப்பிடமாகவும் மாறியுள்ளது.

இது தொடர்பாக உரிய அதிகாரிகளுக்கு கோரிக்கை விடப்பட்டும் எந்தவித நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை.

மேற்படி மைதானம் மானிப்பாய் பிரதேச சபையின் கீழுள்ள போதும் இது வரையில் எந்தவித அபிவிருத்தி வேலைகளும் மானிப்பாய் பிரதேச சபையினால் முன்னெடுக்கப்படவில்லை.

எனவே இதனை திருத்தி உரிய வகையில் பராமரிக்க பிரதேச சபை முன்வர வேண்டும். என மக்கள் மானிப்பாய் பிரதேச சபையிடம் கோரிக்கை விடுத்துள்ளனர். (2-23)




# வெடி கொளுத்திய தகராறு வாள்வெட்டில் முடிந்தது

## நால்வர் படுகாயம்

மரணச் சடங்கொன்றில் வெடி கொளுத்துவதில் இரு தரப்பினருக்கிடையில் ஏற்பட்ட மோதல் வாள் வெட்டில் முடிவடைந்ததில் நால்வர் காயமடைந்ததுடன் மூன்று வீட்டுக் கூரைகளுக்கு தீ வைக்கப்பட்டுள்ளது.

இச் சம்பவம் கடந்த செவ்வாய்க் கிழமை வடமராட்சி துன்னாலை கிழக்குப் பகுதியில் உள்ள ஆட்டுப் பட்டித் தெருவில் இடம்பெற்றது.

இது தொடர்பாக மேலும் தெரிய வருவதாவது,

குறித்த பகுதியில் மரணச்சடங்கொன்று இடம் பெற்று சடலம் மாலை மயானத்திற்கு எடுத்துச் செல்லப்பட்ட வேளையிலே இரு தரப்பினருக்கிடையில் வெடி கொளுத்துவது தொடர்பில் மோதல் இடம் பெற்றுள்ளது.

இம் மோதல் இறுதியில் வாள் வெட்டில் முடிவடைந்ததுடன் மூன்று வீடுகளின் கூரைகளும் எரிந்து நாசமாகின.

இதில் ஒரு வீட்டின் கூரை முற்றாக எரிந்துள்ளது என சம்பவ இடத்திற்கு சென்ற நெல்லியடிப் பொலிஸாரும் பருத்தித்துறை பொலிஸாரும் தெரிவித்துள்ளனர்.

இச் சம்பவத்தில் வாள் வெட்டுக்கிலக்கான நால்வரும் மந்திகை ஆதார வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு தற்போது யாழ்.போதனா வைத்தியசாலையில் மேலதிக சிகிச்சை பெற்று வருகின்றனர்.

மேலதிக விசாரணைகளை பொலிஸார் மேற்கொண்டுவருகின்றனர். (2-60)

# காப்பெற் வீதிகள் அமைக்க 100 மில்லியன் ஒதுக்கீடு

(யாழ்ப்பாணம்)

யாழ்.மாநகர சபையின் கீழுள்ள காப்பெற் போடப்படாத வீதிகள் 100 மில்லியன் ரூபா செலவில் காப்பெற் வீதிகளாக மாற்றப்படவுள்ளன என யாழ்.மாநகர சபை முதல்வர் திருமதி யோகேஸ்வரி பற்குணராஜா தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,




யாழ்.மாநகர சபைக்குட்பட்ட பிரதேசங்களில் பெரும்பாலான வீதிகள் காப்பெற் வீதிகளாக மாற்றியமைக்கப்பட்டுள்ளன.

இவ்வருட திட்டத்தின் படி சி.பொன்னம்பலம் வீதி, விக்டோரியா வீதி, கந்தப்ப சேகர வீதி, ஸ்ரான்லி வீதியினையும் கே.கே.எஸ் வீதியினையும் இணைக்கும் வீதி, ஜிம்மா பள்ளி வாசல் வீதி, அத்தியடி, நல்லூர் குறுக்குத் தெரு, கச்சேரி நல்லூர் வீதி, புங்கன் குளம் வீதி ஆகிய வீதிகளே காப்பெற் இடப்பட்டு திருத்தியமைக்கப்படவுள்ளன.

மேலும் இவ்வீதிகள் யாவும் எதிர்வரும் ஜூன் மாதத்திற்குள் காப்பெற் இடப்பட்டு மக்கள் பாவனைக்கு விடப்படும் என்றார். (2-4)

# மஹோற்சவம்

(யாழ்ப்பாணம்)

புங்குடுதீவு-பெருங்காடு-கிராஞ்சிலம்பதி கந்தசாமி கோவில் வருடாந்த மஹோற்சவம் எதிர்வரும் ஜூன் மாதம் 2 ஆம் திகதி திங்கட் கிழமை நண்பகல் 12 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி தொடர்ந்து பதினொரு தினங்கள் நடைபெறும்.

இதற்கமைய எதிர்வரும் 11 ஆம் திகதி புதன்கிழமை முற்பகல் 10 மணிக்கு தேர்த்திருவிழாவும் மறுநாள் வியாழக்கிழமை 11 மணிக்கு தீர்த்தத் திருவிழாவும் நடைபெறும்.

எதிர்வரும் 13 ஆம் திகதி வெள்ளிக்கிழமை பூங்காவனத்திருவிழா இடம்பெறும்.

மேலும் மஹோற்சவ காலங்களில் விசேட உற்சவ தினங்கள் தவிர்ந்த ஏனைய தினங்களில் பகல் திருவிழாவில் முற்பகல் 11 மணிக்கு வசந்த மண்டப பூஜையைத் தொடர்ந்து சுவாமி திருவீதியுலாவும் இரவு திருவிழாவில் 8 மணிக்கு வசந்த மண்டப்பூஜையைத்தொடர்ந்துசுவாமி திருவீதியுலாவும் நடைபெறும். (2)

➤ ➤ ➤ ➤ ➤ ➤

(யாழ்ப்பாணம்)

ஏழாலை அத்தியடி அருள்மிகு விநாயகர் திருக்கோவில் வருடாந்த மஹோற்சவம் எதிர்வரும் ஜூன் மாதம் 3 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை முற்பகல் 10.30 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி தொடர்ந்து பத்து தினங்கள் நடைபெறவுள்ளது.

இதற்கமைய எதிர்வரும் ஜூன் மாதம்10 ஆம் திகதி செவ்வாய்க் கிழமை மாலை 6.30 மணிக்கு சப்பறத்திருவிழாவும் மறுநாள் புதன் கிழமை முற்பகல் 10.30 மணிக்கு தேர்த்திருவிழாவும் எதிர்வரும் 12 ஆம் திகதி வியாழக்கிழமை நண்பகல் 12 மணிக்கு தீர்த்தத்திருவிழாவும் நடைபெறும்.

மேலும் உற்சவ காலங்களில் காலை 8 மணிக்கும் மாலை 4 மணிக்கும் திருவிழாக்கள் ஆரம்பமாகும். (2)

# வாக்காளர் தின விழிப்புணர்வு ஊர்வலம்

யாழ்ப்பாண மாவட்ட தேர்தல்கள் அலுவலகத்தினால் வாக்காளர் தினம் இன்று வெள்ளிக்கிழமை காலை 9 மணிக்கு யாழ்.மாவட்ட அரசாங்க அதிபர் சுந்தரம் அருமைநாயகம் தலைமையில் நடைபெறவுள்ளதாக யாழ்.மாவட்ட உதவித் தேர்தல் ஆணையாளர் பொ.குகநாதன் அறிவித்துள்ளார்.

இந்நிகழ்வானது பொதுமக்கள் தங்களின் பெயர்களை வாக்களிப்பதற்காக தேருநர் இடாப்பில் வருடாந்தம் சேர்த்துக் கொள்வது கட்டாயமானது என்பதை வலியுறுத்துவதற்கான ஒரு நிகழ்வாகும்.

இதற்கமைய இன்று காலை 9 மணிக்கு மாவட்ட செயலக முன்றிலில் ஒன்று கூடல் இடம்பெறும்.

அதனைத் தொடர்ந்து பிரதான தபாலக அலுவலகத்தின் முன்றிலில் இருந்து காங்கேசன்துறை வீதி வழியாக சத்திரச்சந்தி வரை சென்று வைத்தியசாலை வீதி வழியாக பிரதான பேருந்துநிலையத்திற்கு சென்றுபதாகை கட்டுதல் இடம்பெறும்.

அதனைத் தொடர்ந்து வேம்படிச் சந்தி வரை ஊர்வலமாக சென்று விழிப்புணர்வு ஊர்வலம் நிறைவடையும். (2)

# சாலை நிர்வாக முறைகேடுகள் தொடர்பில் டக்ளஸ் ஆராய்வு

(யாழ்ப்பாணம்)

வடக்கு மாகாண ஜனநாயக போக்குவரத்து ஊழியர் சங்கத்தினை அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவும் அவரின் ஒருங்கிணைப்பாளர் கே.வி.குகேந்திரனும் சந்தித்து கலந்துரையாடியுள்ளனர்.

இச் சந்திப்பு நேற்று முன்தினம் யாழ்.ஈ.பி.டி.பி அலுவலகத்தில் நடைபெற்றது.

தொழிலாளர்களின் நீண்ட கால நலனைக் கருத்திற்கொண்டு அவர்களது பாதுகாப்பு மற்றும் சாலைகளுக்கு நிரந்தர கட்டடங்கள் அமைத்துக் கொள்ளுதல், படிமுறை வளர்சியினூடாக வழங்கப்படவேண்டிய பதவி உயர்வுகள் பாரபட்சமாக வழங்கப்படுதல், நிரந்தர நியமனங்கள் வழங்கப்படும்போது சாலை முகாமையாளர்களால் மேற்கொள்ளப்படும் முறைகேடுகள் போன்ற பல்வேறு பட்ட விடயங்கள் ஆராயப்பட்டன.

சாலை நிர்வாகங்களில் நடைபெறும் முறைகேடுகள் சிலவற்றை நிவர்த்தி செய்ய சம்பந்தப்பட்ட துறை சார் அதிகாரிகளுடன் அமைச்சர் தொடர்புகளை மேற்கொண்டு சில பிரச்சினைகளுக்கு உடனடியாக தீர்வு கண்டார்.

அமைக்கப்பட்டுள்ள சங்கத்தினை சீராக செயற்படுத்துவதன் மூலமே அனைத்து வகையான பிரச்சினைகளுக்கும்நிரந்தரதீர்வுகாணமுடியும்.

உங்களது பிரச்சினைகளுக்கு அமைச்சருடாக விரைவில் தீர்வு பெற்றுத்தருவதாகவும் வடமாகாண ஏழு சாலைகளையும் ஒன்றிணைத்து தாய்ச்சங்கம் ஒன்றை உருவாக்க ஏற்பாடு செய்து தரப்படும் என்றும் ஒருங்கிணைப்பாளர் வி.கே. ஜெகன் மேலும் கூறினார்.

இச் சந்திப்பின் போது சம்பந்தப்பட்ட சாலையில் பாதிக்கப்பட்டுள்ள உறுப்பினர்களது தனிப்பட்ட பிரச்சினைகளையும் ஒருங்கிணைப்பாளர் பெற்றுக் கொண்டார்.

வடமாகாணத்திலுள்ள யாழ்ப்பாணம், காரைநகர், பருத்தித்துறை, கிளிநொச்சி, முல்லைத்தீவு, மன்னார், வவுனியா ஆகிய ஏழு போக்குவரத்து சாலைகளினதும் ஜனநாயக போக்குவரத்து ஊழியர் சங்க நிர்வாக உறுப்பினர்கள் மற்றும் பிரதிநிதிகள் கலந்து கொண்டனர். (அ)



வடமாகாண ஆளுநர் நிதியில் இருந்து சாரணர்களால் முன்னெடுக்கப்படவுள்ள வீரதீர செயற்றிட்டம் நேற்றைய தினம் பழைய பூங்காவில் ஆரம்பிக்கப்பட்டது. இந்நிழ்வில் பிரதம விருந்தினர்களாக கலந்து கொண்ட வடமாகாண ஆளுநர் மேஜர் ஜெனரல் ஜி.ஏ.சந்திரசிறி, ஆளுநரின் செயலாளர் இ.இளங்கோவன் ஆகியோர் சாரணர்களினால் அழைத்து வரப்படுவதையும் செயற்றிட்டத்தை ஆரம்பித்து வைப்பதையும் நிகழ்வில் கலந்து கொண்டவர்களையும் படங்களில் காணலாம். (படங்கள்:-என்.குமார்)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# தஞ்சக் கோரிக்கையாளர்கள் இலங்கைக்கு அனுப்பப்படலாம்

## சுவிஸ் அரசாங்கம் தெரிவிப்பு

சுவிட்சர்லாந்தில் தஞ்சக் கோரிக்கை தோல்வியடைந்தவர்களை இலங்கைக்குத் திருப்பியனுப்பும் நடவடிக்கையில் நிலவிய தற்காலிகத் தடை நீக்கப்பட்டுள்ளதாக அதிகாரிகள் உறுதிப்படுத்தியுள்ளனர்.

இலங்கையிலிருந்து வந்து தஞ்சம் கோரி தோல்வியடைந்தவர்கள் தொடர்பான தகவல்களை ஆராய்ந்து வருவதாக மத்திய அரசின் குடியேறிகளுக்கான அலுவலகத்தின் பேச்சாளர் சிலீன் கோல்ப்ராத் தமிழோசைக்குத் தெரிவித்தார். ஆனாலும், திருப்பி அனுப்பப்படுவதற்கு இருந்த தற்காலிகத் தடை நீக்கப்பட்டதன் மூலம், தஞ்சக் கோரிக்கை தோல்வியடைந்த எல்லோருமே இலங்கைக்குத் திருப்பி அனுப்பப்படுவார்கள் என்று கருத முடியாது என்றும் அவர் கூறினார்.

மேலும் இலங்கையின் நிலைமைகள் குறித்து தாங்கள் அறிந்திருப்பதாகவும் தமக்கும் கவலைகள் இருப்பதாகவும் அவர் தெரிவித்தார். இதனிடையே, சுவிட்சர்லாந்தில் இலங்கைத் தஞ்சக் கோரிக்கையாளர்கள் சுமார் 2 ஆயிரம் பேர் வரையில் இருப்பதாக ஜெனீவாவிலுள்ள இலங்கை ஊடகவியலாளரும் மனித உரிமைச் செயற்பாட்டாளருமான சுனந்த தேஷப்பிரிய பிபிசியிடம் கூறினார். இலங்கையின் மனிதவுரிமை நிலவரங்களை விமர்சித்து வருகின்ற சுவிட்சர்லாந்து அரசு, தோல்வியடைந்த தஞ்சக் கோரிக்கையாளர்களை அங்கு திருப்பியனுப்புவது என்பது முரண்பாடான செயற்பாடு என்றும் சுனந்த சுட்டிக்காட்டினார்.

ஆனால், சுவிட்சர்லாந்தில் அதிகரித்து வரும் வெளிநாட்டுக் குடியேறிகள் காரணமாக உள்ளூர் மக்கள் மத்தியில் பெருமளவு எதிர்ப்புகள் உருவாகி வருகின்றமையாலேயே தோல்வியடைந்த தஞ்சக் கோரிக்கையாளர்களை திருப்பியனுப்பும் முடிவுக்கு அரசு தள்ளப்பட்டுள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்தார்.(2)

# குற்றச்சாட்டை நிரூபித்தால் பதவி விலக தயாராகவுள்ளேன்

## ஜனாதிபதி தெரிவித்தாராம்

(கொழும்பு)

இலவசக் கல்வியை ஒடுக்குவதாக சுமத்தப்பட்ட குற்றச்சாட்டு நிரூபிக்கப்பட்டால் பதவி விலகுவதாக ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ அறிவித்திருந்தார் என கல்வி அமைச்சர் பந்துல குணவர்தன தெரிவித்துள்ளார்.

நாட்டின் இலவசக் கல்வி முறைமையை ஒடுக்கும் முயற்சிகளில் இந்த அரசாங்கம் முயற்சித்து வருவதாக எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்ரமசிங்க அண்மையில் குற்றம் சுமத்தியிருந்தார்.

இந்தக் குற்றச்சாட்டுக்கள் நிரூபிக்கப்பட்டால் உடனடியாக பதவியை ராஜினாமா செய்யத் தயார் என ஜனாதிபதி அறிவித்தார் என, கல்வி அமைச்சர் குறிப்பிட்டுள்ளார்.

இலவசக் கல்வி முறைமையை ஒடுக்குவதற்கு மனதளவில் கூட நினைத்ததில்லை என ஜனாதிபதி குறிப்பிட்டதாக, அவர் தெரிவித்துள்ளார். அரசாங்கத் தகவல் திணைக்களத்தில் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

இலங்கையின் இலவசக் கல்வி முறைமையை ஒடுக்குவதற்கு சர்வதேச நாணய நிதியத்துடன் இணைந்து உடன்படிக்கை கைச்சாத்திட்டதாக சுமத்தப்படும் குற்றச்சாட்டுக்கள் நிரூபிக்கப்பட்டால், ஜனாதிபதி பதவியைத் துறக்கத் தயார் என ஜனாதிபதி குறிப்பிட்டுள்ளார்.

மேலும் ரணில் விக்ரமசிங்கவின் இந்தக் குற்றச்சாட்டு ஜனாதிபதியை மிகுந்த வேதனையடையச் செய்துள்ளதாக அமைச்சர் குணவர்தன தெரிவித்துள்ளார்.

சர்வதேச நாணய நிதியத்துடன் செய்து கொள்ளப்பட்ட உடன்படிக்கையின் பிரதியை ரணில் விக்ரமசிங்க ஊடகங்களுக்கு அம்பலப்படுத்தப்பட வேண்டுமென அவர் வலியுறுத்தியுள்ளார்.

ஜனாதிபதி நாட்டின் இளைய தலைமுறையினர் மீது அன்பு கொண்டுள்ளதாக அமைச்சர் பந்துல குணவர்தன தெரிவித்துள்ளார். (2)

# நிறைவேற்று ஜனாதிபதி முறைமை இரத்துச் செய்ய வேண்டும்-ஐ.தே.க.

(கொழும்பு)

நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி முறையை இரத்து செய்வதற்கு ஐக்கிய தேசிய கட்சி தீர்மானம் மேற்கொண்டுள்ளது. ஐக்கிய தேசிய கட்சியின் தலைமைத்துவ சபையில் இந்த தீர்மானம் நேற்று நிறைவேற்றப்பட்டுள்ளது.

தலைமைத்துவ சபையின் தலைவர் கரு ஜெயசூரிய விடுத்துள்ள அறிக்கை ஒன்றில் இந்த விடயம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இலங்கையின் நிறைவேற்று ஜனாதிபதி முறைமை என்பது புற்றுநோயை ஒத்தது. இது இரத்து செய்யப்பட வேண்டும்.

ஏற்கனவே இதனை இரத்து செய்வதற்கான கோரிக்கைகள் இலங்கையில் வலுப்பெற்றுள்ளன.

இந் நிலையில் நிறைவேற்று அதிகார முறைமையை நீக்குமாறு கோர வேண்டியது அனைத்து இலங்கையர்களினதும் கடமை என்றார். (2)


**வாழ்க்கையில் வெறுப்பா?**

பிரச்சினை எதுவானாலும், எம்முடன் தொலைபேசியில் அல்லது நேரில் பேசுங்கள். இரகசியங்களைப் பேணுவோம்.

காலை 9.00-பி.ப.1.00

**கைகொடுக்கும் நண்பர்கள்**

104,4ஆம் குறுக்குத் தெரு, யாழ்ப்பாணம்.

021 222 8117



**கிளிநொச்சியின் இரு பெரும் கல்லூரிகளின் மாபெரும் துடுப்பாட்டப் போட்டி-2014**

**நீலங்களின் சமர்- Battle of Blues**

கிளி/கிளிநொச்சி மத்திய மகா வித்தியாலயம் எதிர் கிளி/ கிளிநொச்சி இந்துக்கல்லூரி

இடம்:- கிளி/ கிளிநொச்சி மத்திய மகா வித்தியாலய விளையாட்டு மைதானம்

காலம்:- 30,31/05/2014

நேரம்:- 30/05/2014/ தொடக்க நிகழ்வு நண்பகல் 12.00 மணி

31/05/2014 இறுதி நாள் நிகழ்வு பி.ப. 4.00 மணி




முன் வரிசை இடமிருந்து வலமாக

இ.செந்தூரன் (பயிற்சியாளர்), திரு.ப.ஜோயல் பியசீலன் (விளையாட்டு முகாமையாளர்), திரு.மு.இரவீந்திரன் (அதிபர்), திரு.ந.நவரஞ்சன் (விளையாட்டுப் பொறுப்பாசிரியர்.), சி.நிலுக்சன் (அணி உதவித்தலைவர்), க.லகிதரன் (அணித் தலைவர்), இ.புதியவன், டொரிக்ஸ் தீபன், கரிகரன், த.விக்டர் புளே[illegible]ன், கே.டனார்த்தன், த.சசிகரன், ந.ரிசாந்தன், சி.லக்சன், இ.குகனேஸ்வரன், பி.பிரதீப், கு.டசிந்தன், வை.ஜெனுப்பிரியன், வி.யுவராஜ்




முன் வரிசை இடமிருந்து வலமாக

திரு.சி.லெனின்(உதவிப்பயிற்றுநர்), திருமதி.க.தர்மகுலசூரியர் (பிரதி அதிபர்), தி.தர்சன், திரு.கி.விக்னராசா (அதிபர்), அ.மயூரன்( அணித்தலைவர்), கி.சிவச்செல்வன் (பொறுப்பாசிரியர்), சோ.கரிதரன், (பயிற்சியாளர்)

பின் வரிசை இடமிருந்து வலமாக

அ.டினேஸ், ச.பானுசன், பு.கிறிஸ்ரோ ரஞ்சித்குமார், வி.பிரவீன்ராஜ், ம.அஜித்ஜெரோம், க. கயூலன், ல.நிர்மலன் ஜெராட், க.கஜேந்திரன், அ.ஜனந்தன், நிக்சன், க.சசிராஜ், யூட்றொபின்சன்,

**இப்போட்டியில் அனைவரையும் கலந்து சிறப்பிக்குமாறு அன்புடன் அழைக்கின்றோம்**

கல்லூரி சமூகம்
கிளி/ கிளிநொச்சி
மத்திய மகா வித்தியாலயம்.

(சி-7501)

கல்லூரி சமூகம்
கிளி/ கிளிநொச்சி
இந்துக் கல்லூரி



**கல்யாண மாலை**

| இவர்களுக்கு மணமகள் தேவை | இவர்களுக்கு மணமகன் தேவை |
|---|---|
| பிறப்பு: 1983 இந்து<br>நட்சத்திரம்: ரேவதி 2<br>கி.பா: 59.25 செவ் 4 இல்<br>உயரம்: 5'6"<br>தகைமை/தொழில்: A/L / நிரந்தர வேலை (UK – PR)<br>தொ.இ: B/1418 | பிறப்பு: 1985 இந்து<br>நட்சத்திரம்: மகம் 4<br>கி.பா: 25 சூரி செவ் 9 இல்<br>உயரம்: 5'2"<br>தகைமை/தொழில்: MBBS / வைத்தியர்<br>தொ.இ: G/2035 |
| பிறப்பு: 1982 இந்து<br>நட்சத்திரம்: உத்தராடம் 1<br>கி.பா: 16 செவ் 8 இல்<br>உயரம்: 5'11"<br>தகைமை/தொழில்: கல்வியியற் கல்லூரி ஆசிரியர்<br>எதிர்பார்ப்பு: சைவபோசனம்<br>தொ.இ: B/1419 | பிறப்பு: 1985 இந்து<br>நட்சத்திரம்: மகம் 1<br>கி.பா: 29 சூரி செவ் 5 இல்<br>உயரம்: 5'4"<br>தகைமை/தொழில்: மருத்துவ விஞ்ஞானம் (UK – Not PR)<br>எதிர்பார்ப்பு: PR உள்ள வரன்<br>தொ.இ: G/2036 |
| பிறப்பு: 1980 இந்து<br>நட்சத்திரம்: சதயம் 4<br>கி.பா: 11 செவ் 12 இல்<br>உயரம்: 5'2"<br>தகைமை/தொழில்: O/L / சாரதி<br>தொ.இ: B/1420 | பிறப்பு: 1975 இந்து<br>நட்சத்திரம்: சுவாதி 4<br>கி.பா: 37.5 செவ் 2 இல்<br>உயரம்: 5'4"<br>தகைமை/தொழில்: BA / நிகழ்ச்சித்திட்ட உதவியாளர்<br>தொ.இ: G/2037 |
| பிறப்பு: 1975 இந்து<br>நட்சத்திரம்: சித்திரை 3<br>கி.பா: 21.25 உயரம்: 5'9"<br>தகைமை/தொழில்: O/L / பாதுகாப்பு உத்தியோகத்தர், வியாபாரம்<br>எதிர்பார்ப்பு: விவாகரத்தானவரும் பரிசீலிக்கப்படும்<br>தொ.இ: B/1429 | பிறப்பு: 1984 இந்து<br>நட்சத்திரம்: ஆயிலியம் 1<br>கி.பா: 31.5<br>உயரம்: 5'3"<br>தகைமை/தொழில்: BA / அபிவிருத்தி உத்தியோகத்தர்<br>தொ.இ: G/2038 |

**கல்யாண மாலை**

(சர்வதேச திருமண சேவை)

இல. 144, பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்

பதிவுக் கட்டணம் ரூபா 1000 மட்டுமே

தொடர்பு:- 021 720 1005

E-mail:- kalyanamalai.jaffna@gmail.com

குறிப்பு: எமது காரியாலயம் காலை 9.00 - 5.00 மணிவரை திறக்கப்படும்.

( [illegible] செவ்வாய்க்கிழமையும் கல்யாணமாலை விடுமுறை தினம் என்பதனையும் அறியத்தருகின்றோம் )


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# க.பொ.த.(உ/த) மாணவர்களுக்கான பரீட்சை தயார்ப்படுத்தல் முகாம்

(மல்லாகம்)

யாழ் கல்விவலயத்தினால் இவ்வாண்டில் க.பொ.த.உயர்தரப் பரீட்சைக்கு தோற்றுகின்ற குறிப்பாக நாடகமும் அரங்கியலும் பாட் மாணவர்களுக்கான பரீட்சைக்கு தயார்ப்படுத்தலுக்கான பாடமுகாம் எதிர்வரும் ஜுன் மாதம் 2 ஆம் திகதி திங்கட்கிழமை தொடக்கம் 6 ஆம் திகதி வெள்ளிக்கிழமை வரை யாழ்ப்பாணம் மத்திய கல்லூரியில் இடம் பெறவுள்ளதாக யாழ் வலயக் கல்விப்பணிப்பாளர் எஸ்.உதயகுமார் அறிவித்துள்ளார்.

இதற்கமைய 2 ஆம் திகதி திங்கட்கிழமை எலிசபெத்காலம் அறிமுகம், ஒதெல்லோ, யூலிய சீசர் (அ.ரவீந்திரன் - ஆசிரியர் சென்ஜோன்ஸ் கல்லூரி), ஐரோப்பிய நாடக வரலாறு 18,19 ஆம் நூற்றாண்டுகளின் சுருக்கம் , ஒரு பாவையின் வீடு (வ.சிவகுமார் - ஆசிரியர் யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரி), நடிப்புப்பயிற்சிகள் (திருமதி சந்திரிக்கா தர்மரட்ணம்-ஆசிரியர் கொக்குவில் இந்துக்கல்லூரி), ஆகிய விடயத் தலைப்புக்களில் நடைபெறவுள்ளன.

மறுநாள் செவ்வாய்க்கிழமை இந்திய அரங்கும் நாட்டிய சாஸ்திரமும் (ரி.ஜெயசுதன் - ஆசிரியர் புத்தூர் சோமஸ்கந்தாக்கல்லூரி), நடிப்புக்கோட்பாடுகள் (செ.சுகந்தன் -ஆசிரியர் கனகரத்தினம் மகாவித்தியாலயம்), மரபு ஆடல், பாடல்கள் ( ஜோன்சன் ராஜ்குமார் - ஆசிரியர் யாழ்ப்பாணம் திருக்குடும்ப கன்னியர் மட பாடசாலை ) ஆகிய விடயத்தலைப்புக்களிலும் எதிர்வரும் 4 ஆம் திகதி புதன் கிழமை சீன, ஜப்பானிய நாடக மரபு (அ.ம.ரவீந்திரன்-ஆசிரியர் சென். ஜோன்ஸ் கல்லூரி) , கிரேக்க நாடக வரலாறு மத்தியகாலம் வரை, அன்ரிக்கனி , நடிப்புப்பயிற்சிகள் (கை.திலகநாதன்- விரிவுரையாளர் - யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற்கல்லூரி) ஆகிய பாடங்களும் மறுநாள் வியாழக்கிழமை தமிழ் நாடக வரலாறு , இலங்கை நவீன நாடக வரலாறு, திருக்குற்றால குறவஞ்சி (திருமதி சந்திரிக்கா தர்மரட்ணம் - ஆசிரியர் கொக்குவில் இந்துக்கல்லூரி), அபசுரம் (செ.சுகந்தன் - ஆசிரியர் கனகரத்தினம் மகாவித்தியாலயம்) , நாடக எழுத்துருவும் நெறியாள்கையும் (எஸ்.ரி.குமரன்-ஆசிரியர் யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி),

6 ஆம் திகதி வெள்ளிக்கிழமை ஈழத்து மரபுவழி நாடகங்கள், அலங்கார ரூபன் (ஜோன்சன் ராஜ்குமார் - ஆசிரியர் யாழ்ப்பாணம் திருக்குடும்ப கன்னியர் மட பாடசாலை), மரபுவழி ஆடல், பாடல்கள், வேட உடை ஒப்பனை (யோ.இக்னேசியஸ் - ஆசிரியர் சென்.பத்றிஸ் கல்லூரி) ஆகிய பாடநெறிகள் விரிவான விளக்கங்களுடன் துறைசார்ந்த வளவாளர்களினால் நடத்தப்படவுள்ளன.

எனவே இப் பாடமுகாமில் இவ்வாண்டு க.பொ.த.உயர்தரப்பரீட்சைக்குத் தோற்றுகின்ற அனைத்து நாடக பாட மாணவர்களையும் தவறாது கலந்து கொள்ளுமாறு வலயக்கல்விப்பணிப்பாளர் மேலும் அறிவித்துள்ளார். (21)

## முன்பள்ளி விளையாட்டுவிழா

(புத்தூர்)

புத்தூர் Little Master's Montesoori விளையாட்டுவிழா இன்று வெள்ளிக்கிழமை பிற்பகல் 1.15 மணிக்கு மேற்படி முன்பள்ளி விளையாட்டுமைதானத்தில் கே.சதீஸ் குமார் தலைமையில் நடைபெறும்.

இந்நிகழ்விற்கு பிரதம விருந்தினராக யாழ்.கல்வி வலய ஆரம்பக்கல்வி உதவிக் கல்விப் பணிபாளர் சண்.தயாளன், சிறப்பு விருந்தினர்களாக யாழ்.மாவட்ட சிறுவர் பராய ஆரம்ப அபிவிருத்தி இணைப்பாளர் ஆர்.அமலன், யாழ்.வலய ஆரம்பக்கல்விஆலோசகர்திருமதிநளினி அகிலதாஸ்ஆகியோர்கலந்துகொண்டு சிறப்பிப்பார்கள். (2)

வலம்புரி விளம்பர தொடர்புகளுக்கு:
021 321 0815,
021 567 1532

# ஜனாதிபதிக்கு அரசியல் ஞானமுண்டு-நிமால்

(கொழும்பு)

ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவிடம் உள்ள பகுத்தறிவு அரசியல் ஞானம் காரணமாக இந்திய பிரதமர் நரேந்திர மோடியுடன் நல்லுறவை மேம்படுத்திக் கொள்ள முடிந்தது என அமைச்சர் நிமால் சிறிபால டி சில்வா தெரிவித்துள்ளார்.

கொழும்பில் நேற்று இடம் பெற்ற ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி ஊடக சந்திப்பில் அவர் இவ்வாறு தெரிவித்தார். அவர் தொடர்ந்து கூறுகையில்,

13 ஆவது திருத்தத்திற்கு மேல் சென்று வடக்கிற்கு அதிகாரம் வழங்குமாறு இந்திய பிரதமர் மோடி ஜனாதிபதியை வலியுறுத்தினாரா என ஊடகவியலாளர்கள் எழுப்பிய கேள்விக்கு பதிலளித்த அமைச்சர், அது இராஜதந்திர சந்திப்பு என்பதால் பதில் கூற முடியாது என்றார். (2)

# சந்தைகளில் நேற்றைய விலை விபரம்


| மரக்கறி வகைகள் | நெல்லியடி | திருநெல்வேலி | சாவகச்சேரி | கிளிநொச்சி |
|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 120 | 100 | 120 | 120 |
| உருளைக்கிழங்கு | 100 | 90 | 90 | 90 |
| பச்சைமிளகாய் | 250 | 200 | 140 | 180 |
| தக்காளி | 200 | 160 | 100 | 140 |
| மரவள்ளிக்கிழங்கு | 40 | 40 | 50 | 40 |
| கோவா | 120 | 100 | 100 | 100 |
| கரட் | 120 | 80 | 140 | 160 |
| பூசணி | 80 | 60 | 70 | 60 |
| புடோல் | 60 | 60 | 90 | 80 |
| வாழைக்காய் | 30 | 40 | 50 | 40 |
| சின்ன வெங்காயம் | 130 | 120 | 130 | 120 |
| பெரிய வெங்காயம் | 90 | 90 | 90 | 90 |
| பாகற்காய் | 160 | 160 | 130 | 120 |
| வெண்டிக்காய் | 70 | 80 | 80 | 80 |
| கருணைக் கிழங்கு | 60 | 50 | 50 | 80 |
| பயற்றங்காய் | 40 | 50 | 100 | 50 |
| லீக்ஸ் | 70 | 80 | 100 | 80 |
| பீற்றூட் | 70 | 100 | 80 | 120 |
| கறிமிளகாய் | 120 | 130 | 110 | 160 |
| முருங்கைக்காய் | 60-90 | 100 | — | 100 |
| போஞ்சி | 180 | 180 | 160 | 200 |
| கத்தரிதம்புள்ள | — | 80 | — | 100 |
| கீரை - 1 பிடி | 10 | 30 | 25 | 25 |
| தேசிக்காய் | 80-120 | 140 | 120 | 100 |
| தேங்காய் (ஒன்று) | 15-40 | 30 | 40 | 25-30 |
| இராசவள்ளி | 90 | 100 | — | 100 |

# facebook (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 29


யோகிஸ் தனீஸ்




பாரதி நகுலசிறி





தீபன் சற்குணம்




சுலக்ஷன் ரதன்




சாருஷா வினித்




வசந் வசந்தன்




நீங்கள் பார்த்த ஃபேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valam.puri.16 எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள். அவை உங்கள் பெயர்களுடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஆலய திருவிழாக்கள்

(மல்லாவி)

முல்லைத்தீவு மாவட்டத்திலுள்ள நான்கு பிரசித்தி பெற்ற ஆலயங்களின் திருவிழாக்கள் ஆரம்பமாகவுள்ளன.

இதற்கமைய கல்லிருப்பு கண்ணகை அம்மன் ஆலயத்திருவிழா எதிர்வரும் 2 ஆம் திகதி திங்கட்கிழமையும் வன்னிவிளாங்குளம் அம்மன் ஆலயத்தின் திருவிழா எதிர்வரும் 6 ஆம் திகதி வெள்ளிக்கிழமையும் இடம்பெறவுள்ளன.

அத்தோடு வற்றாப்பளை கண்ணகை அம்மன் ஆலயத்திருவிழா எதிர்வரும் 9 ஆம் திகதி திங்கட்கிழமையும் புதூர் நாகதம்பிரான் ஆலயத்திருவிழா எதிர்வரும் 23 ஆம் திகதி திங்கட்கிழமையும் நடைபெறவுள்ளன.

இவ்ஆலயங்களுக்கு வரும் பக்தர்களின் நலனைக் கருத்திற் கொண்டு பாதுகாப்பு ஏற்பாடுகளை முல்லை. மாவட்ட பொலிஸ் அத்தியட்சகர், ஏனைய தேவைகளை மாவட்ட அரசாங்க அதிபர், பிரதேச செயலர்கள், ஆலயபரிபாலனசபையினர் ஆகியோர் முன்னெடுத்து வருகின்றனர். (9-15)

## விடைகளை அனுப்புங்கள்

வலம்புரி பத்திரிகையில் கடந்த 11 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை பிரசுரமாகிய பூநகரியின் புகழ் மாலைத் தொகுப்பில் கேட்கப்பட்ட கேள்விகளுக்குரிய விடைகளை ஜுன் மாதம் 3 ஆம் திகதி செவ்வாய்க்கிழமைக்கு முன்னதாக கிடைக்கக் கூடியவாறு அனுப்பி வைக்குமாறு கேட்கப்பட்டுள்ளது.

இது தொடர்பான மேலதிக தொடர்புகளுக்கு நடராஜா திருஞானபவம் பூநகரியின் புகழ்மாலை பாடலாசிரியர்

Tamilair @ hotmail. com

என்ற முகவரியுடன் தொடர்பு கொள்ளுமாறு கேட்கப்பட்டுள்ளது. (2)




## நியமன பத்திரங்கள் வழங்கப்படவுள்ளன

(மல்லாவி)

மத்திய சுற்றாடல் அதிகார சபையின் வடக்கு மாகாண அலுவலகத்தினால் மாவட்ட சுற்றாடல் முன்னோடி ஆலோசகர் வலயம் மற்றும் கோட்டம் ஆகியவற்றிற்கான ஆணையாளர்கள் போன்ற பதவிகளுக்கான நியமனப்பத்திரங்கள் வழங்கும் நிகழ்வு எதிர்வரும் 3 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை முற்பகல் 10 மணிக்கு யாழ்.மாவட்ட செயலக கேட்போர்கூட மண்டபத்தில் நடைபெறவுள்ளதாக மத்திய சுற்றாடல் அதிகார சபையின் வடமாகாண அலுவலக பிரதிப்பணிப்பாளர் அறிவித்துள்ளார்.

இதன்படி வடமாகாணத்திலுள்ள 12 கல்வி வலயங்களுக்கும் வலைய ஆணையாளர்கள் நியமிக்கப்படவுள்ளதோடு அதன் கீழுள்ள கோட்டங்களுக்கு கோட்ட ஆணையாளர்களும் நியமிக்கப்படவுள்ளனர்.

மாவட்ட ரீதியில் யாழ்.மாவட்டத்திற்கு மாத்திரமே மாவட்ட ஆலோசகர் நியமிக்கப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (9-15)

# வவு.பாரதிபுரம் மக்களை வெளியேறுமாறு மிரட்டல்



(குருமன்காடு)

வவுனியா பாரதிபுரம் கிராமத்தில் வாழும் மக்களை உடனடியாக வெளியேற்றுமாறு இராணுவத்தின் துணையுடன் அடாவடித்தனம் புரிந்துள்ளமை தொடர்பில் தனக்கு மக்களால் முறையிடப்பட்டுள்ளதாக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சிவசக்தி ஆனந்தன தெரிவித்துள்ளார்.

இது குறித்து அவர் மேலும் தெரிவிக்கையில்,

மிகவும் வறிய நிலையிலுள்ள ஐம்பது குடும்பங்களைச் சேர்ந்த மக்கள் பாரதிபுரம் கிராமத்தில் வாழ்ந்து வருகின்றனர். குறித்த கிராமதிலுள்ள தமிழ் மக்களை அங்கிருந்து வெளியேற்றும் முயற்சியில் அமைச்சர் றிசாத பதியுதீனும் அவருடைய கையாட்களும் கடந்தகாலங்களிலும் செயற்பட்டு வந்துள்ளனர்.

அண்மையில் இராணுவத்தின் சிறப்பு அதிரடிப்படையினரின் துணையுடன் பாகிஸ்தான் நாட்டவர்களுடன் பாரதிபுரம் கிராமத்துக்குச் சென்ற றிசாத் பதியுதீன் அந்த மக்களை அங்கிருந்து உடனடியாக வெளியேறுமாறும் தாம் தொழிற்சாலை ஒன்றை அமைக்கவுள்ளதாகவும் தெரிவித்திருக்கின்றாரர.

அதற்கு பாரதிபுரம் மக்கள் தமக்கு இருப்பதற்கு மாற்றிடம் இல்லை என்றும் தாம் அங்கிருந்து வேறு எங்கும் செல்ல முடியாது என்றும் உறுதியாகத் தெரிவித்திருக்கின்றனர்.

அதன் போது, குறித்த காணி வன இலாகாவுக்குச் சொந்தமானது என்றும் இந்தக் காணியில் எவரும் குடியிருக்க அனுமதிக்க முடியாது என்றும் தெரிவித்த அமை சசர் அந்த மக்களுடைய பெயர் விபரங் களை பெற்றுக்கொண்டதுடன் அவர்களை புகைப்படமும் எடுத்துச் சென்றிருப்பதாக மக்கள் கவலையுடன் தெரிவிக்கின்றனர்.

கடந்த காலங்களில் முல்லைத்தீவு, வவுனியா, மன்னார் ஆகிய மாவட்டங்களில் பல இடங்களில் வன இலாகாவுக்குச் சொந்தமான காணிகளை விடுவித்து தமக்கு விருப்பமானவர்களை இதே அமைச்சர் குடியேற்றியுள்ளார். அந்த மக்களுக்கு அவ்வாறான வாய்ப்புக்களை ஏற்படுத்திக் கொடுத்த அவர் ஒரு அமைச்சர் என்ற வகையில் பாரதி புரம் மக்களுக்கும் அவ்வாறான ஒரு ஏற்பாட்டினை செய்து கொடுப்பதே கடமையாகும்.

இன்னமும் பெருமளவான மக்கள் மீள்குடியேறாத நிலையில் வாழ்ந்து வருகின்றனர். அந்த மக்களை மீள்குடியேற்றம் செய்வது தொடர்பிலான ஆரோக்கியமான நடவடிக்கை எதனையும் மேற்கொள்ளாத நிலையில் அமைச்சர் ஒருவர் தொழிற்சாலை அமைப்பதற்காக மக்களை நடுத்தெருவிற்கு விரட்டும் நடவடிக்கையினை வன்மையாகக் கணடிக்கிறேன் என்றார். (9-250)

## அமைச்சரின் தலையீட்டினால் கி.அ.சங்க நிர்வாகத் தெரிவு

(மன்னார்)


மன்னார்மாந்தைமேற்குபிரதேசசெயலர்பிரிவிற்குட்பட்ட இலுப்பைக்கடவை கிராம அபிவிருத்தி சங்கத்தின் புதிய நிர்வாகத் தெரிவு நீண்ட காலத்தின் பின்னர் வடமாகாண மீன்பிடி போக்குவரத்து அமைச்சர் பா.டெனீஸ்வரனின் தலையீட்டினால் இடம்பெற்றுள்ளது.

இலுப்பைக் கடவை கிராம அபிவிருத்தி சங்கத்தின் பழைய நிர்வாகமே நீண்ட காலமாக இருந்து வந்த நிலையில் போக்குவரத்து அமைச்சரின் தலையீட்டையடுத்து கடந்த ஞாயிற்றுக்கிழமை புதிய நிர்வாகத் தெரிவு இடம்பெற்றுள்ளது.

அங்கு அமைச்சர் உரையாற்றுகையில்,

பத்து நாட்களுக்குள் பழைய நிர்வாக சபையானது தமது கணக்கறிக்கையை புதிய நிர்வாக சபையிடம் கையளிக்க வேண்டும் என் வலியுறுத்தியதுடன் கிராமங்களின் அபிவிருத்தியின் உயிர் நாடியாகத் திகழ்வது கிராம அபிவிருத்தி சங்கங்களே என்பதனால் சட்ட வரைபிற்கேற்ப ஒவ்வொரு மாதமும் ஒன்று கூடலும் மூன்று மாதத்திற்கு ஒரு தடவை பொதுக்கூட்டமும் இடம்பெற வேண்டும்.

எனது பன்முகப்படுத்தப்பட்ட நிதியிலிருந்து இலுப்பைக் கடவை கிராமத்துக்கு அரைக்கும் ஆலை ஒன்றை தருவதற்கு எண்ணியிருந்தேன். ஆனால் அவ்விடயத்தை வேறு ஒரு அமைப்பு உங்களுக்கு வழங்குவதால் மக்கள் தங்களது தேவைக்கேற்ப கிராம மட்டத்தில் பயன்பெறக் கூடிய ஏதாவது திட்டத்தை முன்வைத்தால் அந்நிதியை அத்திட்டத்திற்கு வழங்கலாம் என்றும் கூறினார். (9-4)



தேசிய மின் மற்றும் இலத்திரனியல் கழிவு முகாமைத்துவ வாரத்தையொட்டி கிளிநொச்சி மாவட்டத்திலுள்ள இலத்திரனியல் கழிவுகளை சேகரிக்கும் நடவடிக்கை கரைச்சிப் பிரதேச சபை வளாகத்தில் ஆரம்பிக்கப்பட்டபோது... (படம்:-சிவநகர் செய்தியாளர்)

## பச்சிலைப்பள்ளியில் நடமாடும் சேவை

(கிளிநொச்சி)

தேசிய மொழிகள் மற்றும் சமூக ஒருமைப்பாட்டு அமைச்சர் கிளிநொச்சி மாவட்ட செயலகம், பச்சிலைப்பள்ளி பிரதேச செயலகம் ஆகி யவை இணைந்து நடத்தும் சட்ட ஆவணங்களைப் பெற்றுக் கொள்வதற்கான நட மாடும் சேவ பச்சிலைப்பள்ளி பிரதேச செயலர் பிரிவில் எதிர்வரும் 2 ஆம் திகதி திங்கட்கிழமை முதல் நடைபெறவுள்ளதாக பிரதேச செயலர் ப.ஜெயராணி அறிவித்துள்ளார்.

இதன்படி எதிர்வரும் 2 ஆம் திகதி திங்கட்கிழமை அல்லிப்பளை, புலோப்பளை, புலோப்பளை மேற்கு, கச்சார் வெளி ஆகிய கிராம சேவையாளர் பிரிவுகளைச் சோந்தவர்களுக்கு புலோப்பளை மேற்கு பொது நோக்கு மண்டபத்திலும் மறுநாள் 3 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை பளை நகரம் தர்மக்கேணி, முல்லையடி, தம்பகாமம், சோறன்பற்று, மாசார் ஆகிய கிராம சேவையாளர் பிரிவுகளுக்கு பச்சிலைப்பள்ளி பிரதேச செயலகத்திலும் நடைபெறவுள்ளது.

அத்தோடு எதிர்வரும் 5 ஆம் திகதி வியாழக்கிழமை அரசர் கேணி, இத்தாவில், வேம்பொடுகேணி ஆகிய கிராம சேவகர் பிரிவுகளுக்கு வேம்பொடு கேணி சி.சி.த.க.பாடசாலையிலும் மறுநாள் 6 ஆம் திகதி வெள்ளிக்கிழமை கிளாலி, முகமாலை ஆகிய கிராம சேவையாளர் பிரிவுகளுக்கு முகமாலை கிராம சேவகர் அலுவலகத்திலும் 7 ஆம் திகதி சனிக்கிழமை இயக்கச்சி, கோவில் வயல், முகாவில் ஆகிய கிராம சேவகர் பிரிவுகளுக்கு இயக்கச்சி பாடசாலையிலும் இடம்பெறவுள்ளது.

இந் நடமாடும் சேவையினூடாக பிறப்பு, இறப்பு, விவாக சான்றிதழ்கள், காலங்கடந்த பிறப்பு, இறப்பு பதிவு செய்தல் , முதியோர் அடையாள அட்டை மற்றும் 16 வயதிற்கு மேற்பட்ட அனைவரும் புதிய, தொலைந்த மற்றும் திருத்தத்துக்கான தேசிய அடையாளஅட்டைக்கானசேவைகளை பெற்றுக் கொள்ள முடியும்.

அத்தோடு நடமாடும் சேவையில் புகைப்படம் எடுத்தல், முத்திரைகள், பொலிஸ் அறிக்கை போன்றன இலவசமாக வழங்குவதற்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

எனவே, இச் சேவையை பச்சிலைப்பள்ளி பிரதேச செயலக பிரிவிற்குட்பட்ட ம்க்கள் அனைவரும் உரிய ஆவணங்களுடன் பங்குபற்றி பயன்பெறுமாறு அவர் மேலும் அறிவித்துள்ளார். (9-254)

## வர்த்தக நிலையங்கள் திடீர் சோதனை

(மல்லாவி)

மாங்குளம் நகரப் பகுதியிலுள்ள வர்த்தக நிலையங்களில் மேற்கொள்ளப்பட்ட திடீர் சோதனையின் போது வர்த்தகர்கள் சிலர் வசமாக மாட்டியுள்ளனர்.

கடந்த செவ்வாய்க்கிழமை வவுனியாவிலிருந்து வருகை தந்த விலைக் கட்டுப்பாட்டு அதிகாரிகளினால் மாங்குளம் நகரப்பகுதியிலுள்ள வர்த்தக நிலையங்கள் திடீர் சோதனைக்குட்படுத்தப்பட்டன.

இதன்போது வியாபார நிலையங்களில் விலைப்பட்டியல் காட்சிப்படுத்தப்படாமை, அதிகூடிய விலையில் பொருட்களை விற்பனை செய்தமை, காலாவதியான பொருட்களை விற்பனை செய்தமை ஆகிய குற்றச்சாட்டுக்களின் கீழ் 10 இற்கும் மேற்பட்டோர் பிடிபட்டுள்ளனர்.

இவர்கள் எதிர்வரும் 4 ஆம் திகதி புதன்கிழமை முல்லைத்தீவு மாவட்ட நீதிமன்றில் ஆஜர்படுத்தப்படவுள்ளனர். (9-15)

## மீனவ ஓய்வு மண்டபம் அமைக்குக

(மல்லாவி)

முல்லை. மாவட்டத்தில் இடம்பெற்ற இறுதி யுத்தத்தின் போது மிக மோசமாக பாதிப்பை எதிர்கொண்ட புதுமாத்தளன் பகுதியில் கடற்றொழிலாளர்களுக்கான ஓய்வு மண்டபம் ஒன்றை அமைக்குமாறு மீனவ சங்கங்கள் முல்லை.மாவட்ட அரச அதிபரிடம் கோரிக்கை விடுத்துள்ளனர்.

யுத்தத்தினால் தொழில் உபகரணங்கள் உட்பட அனைத்தையும் இழந்து வாழ்ந்து வரும் இம் மக்கள் மீள்குடியேற்றப்பட்டு 4 வருடங்கள் கடந்துவிட்டன.

இந்நிலையில் சுமார் 350 இற்கும் மேற்பட்ட குடும்பங்கள் கடற்றொழிலையே மேற்கொண்டு வருகின்றன.

இவர்களுக்கு ஓய்வு மண்டமொன்று கடற்கரைப்பகுதியில் அமைத்துக் கொடுக்கப்படாமையினால் மழை, வெயில் போன்றவற்றினால் பல்வேறு இடையூறுகளை எதிர்நோக்கி வருகின்றனர்.

எனவே, கடற்றொழிலாளர்களின் நலன் கருத்தி ஓய்வுமண்டபம் ஒன்றை கடற்கரைப் பகுதியில் அமைக்குமாறு மீனவ சங்கங்கள் கோரிக்கை விடுத்துள்ளன. (9-15)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org



# சிறுவர் அரங்கம்

819

## பாலுவும் பூதமும்!

**பா**லு, அன்று பள்ளிக்கு வரவில்லை. நண்பர்கள் சபிதா, சுரேஷ், மனோஜ் மூவரும் பாலுவைக் காண வீட்டுக்குச் சென்றார்கள். பாலு போர்வையை இழுத்துப் போர்த்திக்கொண்டு படுத்திருந்தான்.

பாலு படு சுட்டிதான். ஆனால், பேய், பிசாசு, கரப்பான் பூச்சி, பல்லி, நாய் என்றால் மிகவும் பயம். வீட்டுக்கு வந்த பாலுவின் நண்பர்களுக்கு லெமன் ஜூஸ், சிப்ஸைக் கொடுத்தார் பாலுவின் அம்மா.

சுரேஷ் பாலுவை பார்த்து, "எப்படி உனக்கு காய்ச்சல் வந்தது?" என்று கேட்டான்.

"நேற்று இரவு ஒரு பேய்ப் படம் பார்த்தேன். பயந்து போய்..." என்று இழுத்தான் பாலு.

"உனக்குத்தான் பயம் இருக்கே. அப்புறம் ஏன் பார்த்தே? நாளைக்கு மேத்ஸ் டெஸ்ட் இருக்கு. நல்லா படிச்சுட்டு வா" என்றாள் சபிதா.

நண்பர்கள் சென்றதும் பாலு கணக்குப் புத்தகத்தை எடுத்தான். அவனுக்கு தூக்கம் வந்ததே தவிர மேத்ஸ் வரவில்லை. தூங்கிய படி மேஜையின் மீது விழுந்தான்.

அப்போது அலுமாரியில் இருந்து ஒரு புத்தகம் கீழே விழுந்தது. எடுத்துப் பார்த்தான்.


பாலுவும் பூதமும் என்றிருந்தது. இது எங்கிருந்து வந்தது? என்று எண்ணி தன் பெயர் இருப்பதைக் கண்டு படிக்கும் ஆவலில் புத்தகத்தைத் திறந்தான். என்ன ஆச்சரியம்? அவன்

பேய்ப் படம் பார்த்தது; காய்ச்சலில் படுத்துக் கிடந்தது; நண்பர்கள் வந்தது என எல்லாமே அதில் இருந்தது. வியப்புடன் மேலும் படிக்கத் தொடங்கினான்.

அதில் பாலு மைதானத்தில் இருந்து வீடு திரும்பும்போது ஒரு பூதத்தைச் சந்திப்பதாகவும் தனது நண்பனாக பூதம் மாறுவதாகவும் இருந்தது. அந்தப் பூதத்தை நள்ளிரவில் தன் நண்பர்களுக்கு அறிமுகப்படுத்துகிறான். பயந்தோடிய நண்பர்கள்... "இனிமேல் இவன்கூட சேரக்கூடாது" என்கிறார்கள். பாலு நண்பர்கள் இல்லாமல் தவிக்கிறான். பாலு புத்தகத்தை மூடினான். இதெல்லாம் நடக்குமா? என்ற சந்தேகம் அவன் மனதில் எழுந்தது. மறுநாள் வேண்டுமென்றே மைதானத்துக்குச் சென்றான்.

பாதையில் ஒரு கல் இருந்தது. புத்தகத்தில் வருவது போன்ற கல். அந்தக் கல் ஓரளவுக்கு பெரியதாக இருந்தது. அதை சிரமப்பட்டு விலக்கியதும் அந்தப்பூதம் வெளியே வந்தது. பாலு சற்றே மூர்ச்சையாகி மீண்டான். இருவரும் நண்பர்கள் ஆனார்கள்.

பூதத்தை செல்லக்குட்டி... ஜு பூதம் என்று அழைத்தால் போதும். அவன் முன்னே வந்து "என்ன வேண்டும்?" என்று கேட்கும். பாலுவும் பரீட்சையில் நூற்றுக்கு 100 வாங்கனும். ஐஸ்கிரீம் வேணும் ... இப்படி தனது ஆசைகளை பூர்த்திசெய்து கொள்வான்.



ஒருநாள் மைதானத்தில் பூதத்துடன் பேசிக் கொண்டிருக்கும் போது அவனைப் பின் தொடர்ந்து வந்த நண்பர்கள் சூழ்ந்து கொண்டார்கள்.

"உனக்கு என்னடா ஆச்சு. இப்போ எல்லாம் சரியா விளையாடவே வர்றதில்லை. இங்கே தனியா உட்கார்ந்து பேசிட்டிருக்கே?" என்று கேட்டான் மனோஜ்.

பூதம் அவர்கள்கண்ணுக்குத் தெரியவில்லை என்று புரிந்தது. அதை நண்பர்களுக்கு அறிமுகப்படுத்தும் நாள் இது என்பதும் புரிந்தது. பூதத்தை எல்லோருக்கும் தெரியும்படி வரவைத்து அறிமுகம் செய்தான். புத்தகத்தில் படித்த படியே நண்பர்கள் ஓட்டம் பிடித்தனர்.

நண்பர்கள் இல்லாமல் பாலு தவித்த தவிப்பை வார்த்தைகளால் சொல்ல முடியாது. என்னதான் பூதம் அவனோடு விளையாடினாலும் நண்பர்கள் போல இல்லை.

பூதமும் பாலுவை உலகின் பல இடங்களுக்கும் அழைத்துச் சென்றது.

சஹாரா பாலைவனம், பசிஃபிக் பெருங்கடல், அமெரிக்கா என ஒரு ரவுண்டு அடித்துப் பார்த்தது. ஆனாலும் அவனுடைய நண்பர்களின் ஏக்கம் போகவில்லை.

அப்போது பூதம், "பாலு, ஒருவனுக்கு எவ்வளவுதான் வசதியும் நினைத்ததைச் செய்யும் திறமையும் இருந்தாலும் நண்பர்கள் இல்லாவிட்டால் மகிழ்ச்சி இருக்காது என்பது புரிந்தது.


நான் உன்னுடன் இருந்தால் அவர்கள் வரமாட்டார்கள். எனவே, நான் சென்று விடுகிறேன்.

உன்னை மறக்கவே மாட்டேன் என்று சொல்லிவிட்டு மறைந்தது. பூதம் இருந்த இடத்தில் இப்போது ஒரு பொம்மை இருந்தது. பாலு அதை சிறிது நேரம் அமைதியாக பார்த்தான்.

அதை அலுமாரியில் வைக்கும்போது அந்தப்புத்தகம் கண்ணில் பட்டது.

அந்தப் புத்தகத்தின் கடைசிப் பக்கத்தைப் படிக்காதது நினைவுக்கு வந்தது. எடுத்துத் திறந்தான்.

பூதம் பொம்மையாக மாறுவதும் அப்போது வாசலில் நண்பர்களின் குரல் கேட்பது போலவும் அதில் இருந்தது.



"பாலு..." என்று வாசலில் குரல் வர உற்சாகமாக ஓடினான் நண்பர்களை நோக்கி.

☆☆☆☆☆☆☆☆☆☆☆

## 05.2014 30 இன்றைய நாளின் முன்னைய பதிவுகள்

- 1431 - நூறாண்டுகள் போர்: பிரெஞ்சு வீராங்கனை 19 வயது ஜோன் ஒஃப் ஆர்க் ரோவென் என்ற இடத்தில் ஆங்கிலேயர்களைப் பெரும்பான்மையாகக் கொண்ட நீதிமன்றத்தினால் உயிருடன் தவைக்கப்பட்டு மரணதண்டனைக்குட்படுத்தப்பட்டாள்.
- 1539 - தங்கம் கண்டுபிடிக்கும் நோக்கில் ஹெர்னாண்டோ டி சோட்டோ 600 படையினருடன் புளோரிடாவை அடைந்தான்.
- 1588 - 30,000 பேர்களுடன் ஸ்பானிய ஆர்மாடா என்ற 130 ஸ்பானியப் போர்க்கப்பல்களின் கடைசிக் கப்பல் ஆங்கிலக் கால்வாயை நோக்கிய பயணத்தை லிஸ்பனிலிருந்து ஆரம்பித்தது.
- 1635 - முப்பதாண்டுப் போர்: பிராக் அமைதி உடன்பாடு எட்டப்பட்டது.
- 1845 - திரினிடாட் டொபாகோவுக்கு முதல் தொகுதி இந்தியர்கள் வந்திறங்கினர்.
- 1913 - முதலாம் பால்க்கன் போர்: லண்டன் உடன்பாடு, 1913 எட்டப்பட்டு போர் முடிவுக்கு வந்தது. அல்பேனியா தனி நாடாகியது.
- 1942 - இரண்டாம் உலகப் போர்: 1000 பிரித்தானிய போர் விமானங்கள் ஜேர்மனியின் கொலோன நகரில் 90-நிமிடங்கள் குண்டுமாரி பொழிந்தன.
- 1966 - முன்னாள் கொங்கோ பிரதமர் எவரீஸ்டே கிம்பா மற்றும் பல அரசியல் தலைவர்கள் பகிரங்கமாகத் தூக்கிலிடப்பட்டார்கள்.
- 1971 - செவ்வாய்க் கோளின் 70 விழுக்காட்டைப் படம் பிடிப்பதற்காகவும் அதன் வளிமண்டலத்தை ஆராயவும் என மரைனர் 9 விண்ணுக்கு ஏவப்பட்டது.
- 1981 - வங்காள தேசத்தில் இடம்பெற்ற இராணுவப் புரட்சியின்போது ஜனாதிபதி சியாவுர் ரகுமான் இராணுவத்தினரால் சுட்டுக் கொல்லப்பட்டார்.
- 1987 - கோவா தனி மாநிலமாகியது.
- 2003 - எயார் பிரான்சின் கொன்கோர்ட் விமானம் தனது கடைசிப் பயணத்தை ஆரம்பித்தது.

பிறப்புகள்

- 1899 - மணிக்கொடி சீனிவாசன், தமிழ், ஆங்கிலப் பத்திரிகையாளர் (இ. 1975)
- 1931 - சுந்தர ராமசாமி, நவீன தமிழ் இலக்கியத்தின் எழுத்தாளர் (இ. 2005)
- 1934 - அலெக்சி லியோனொவ், சோவியத்ஃரஷ்யாவின விண்வெளி வீரர்

இறப்புகள்

- 1431 - ஜோன் ஆஃப் ஆர்க், பிரெஞ்சு வீராங்கனை (பி. 1412)
- 1960 - போரிஸ் பாஸ்ரர்நாக், ரஷ்ய எழுத்தாளர், நோபல பரிசு பெற்றவர் (பி. 1890)
- 1973 - மோகன் குமாரமங்கலம், இந்திய அரசியல்வாதி (பி.1916)
- 1981 - சியாவுர் ரகுமான், வங்காளதேச ஜனாதிபதி (பி. 1936)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இந்தக் குளத்தில் கல்லெறிந்தவர்கள்

**56**

பறக்க முடியாமல் என் சிறகுகள் கனக்கும் போதெல்லாம் கீழ்க்காணும் நான்கில் ஒன்றை நாடும் என் ம்னசு.

**மனைவியின் மடி**
**அல்லது**
**சோககீதம்**
**அல்லது**
**நதிக்கரை**
**அல்லது**
**நண்பர்களின் தோள்.**

எனக்குத் தோள் கொடுத்துவரும் நண்பர்களின் தொகை அதிகம்.

எனக்கு மீசை முளைக்காத காலத்திலிருந்தே நான் முகம் புதைத்துக் கொள்ளத் தோள் கொடுத்து வந்த தோழர்களில் தலையாயவர் அண்ணன் தாயுமானவர்.

எப்போதெல்லாம் என் இதயம் வண்டல் வண்டலாய் வெடித்து விடுகிறதோ, எப்போதெல்லாம் என் தனிமை வெறுமைகளால் நிரப்பப்படுகிறதோ எப்போதெல்லாம் ஓசையற்ற தீவில் ஒதுங்கிவிட வேண்டுமென்று உயிர் தவிக்கிறதோ அப்போதெல்லாம் தாயுமானவருக்குத் தந்தி கொடுக்க வேண்டுமென்றுதான் அடிமனசு அடித்துக் கொள்கிறது.

இலக்கியம்- மது- நண்பர்கள் இம் மூன்றிலும் பழையவை சிறந்தவை என்பார்கள்.

இதில் முதல் அனுபவத்தையும் மூன்றாம் அனுபவத்தையும் உளப்பூர்வமாய் உணர்ந்திருக்கிறேன்.

என்னைப் பொறுத்தவரையில் இறந்த கால எருக்களில் நிகழ்காலம் பயிராகிறது.

இப்போதும்கூட மனப்பறவை பழைய திசையிலேயே பறக்கிறது.

தாயுமானவர் அப்போது வடுகபட்டி கிளை நூலகத்தில் நூலகர்.

அரிவாள் கலாசாரத்திலிருந்து நான் அறிவுக் கலாசாரத்திற்குத் தாவக் காரணமானவர் தாயுமானவர்.

கண்கள் பஞ்சடைத்தவனுக்குக் கர்ணன் வீட்டுக்கு வழி சொன்னவனைப் போல அறிவுக்கு தாகம் எடுக்கத் தொடங்கிய அந்தப் பிஞ்சு நாட்களில் என்னை நூற்கடல் என்னும் பாற்கடலுக்குள் தள்ளி விட்டவர் தாயுமானவர்.




அந்த நூலகம் மட்டும் இல்லாவிட்டால், இன்று என் வார்த்தைகளுக்குப் பின்னால் ஓடிவரும் ஒரு லட்சம் உள்ளங்களே:

எனது குரல் வராக நதியின் தென் கரையில் தொடங்கி வடகரையை அடையுமுன்னே ஆற்றுக்குள் மூழ்கி அழிந்திருக்கும்; எனது பெயர், வடுகபட்டியின் பிறப்பு-இறப்புப் பேரேட்டில் மட்டுமே பதிவாகியிருக்கும்.

அந்த நூலகம் என் இரண்டாவது பள்ளிக்கூடம்.

வயிற்றைப் பட்டினி போட்டு விட்டு என் மூளையை நிரப்பிக் கொண்ட மூலஸ்தானம்.

அதுதான் நான் பூமி உருண்டையை இடம் வலம் பார்த்த இடம்.

ஒரு நூலகர் என்பவர் வாசகருக்கு நூல்களின் வாசனை காட்ட வேண்டும்.

தன் மனைவியை யாருக்கும் அறிமுகப்படுத்த விரும்பாத ஒரு கணவனைப் போல சில நூலகர்கள் நூல்களின் பக்கம் வாசகனை அண்டவே விடுவதில்லை.

"அந்த நூல்கள் எல்லாம் அடுக்கி வைக்கப்பட்டிருக்கும் பிணங்கள்; தொடக்கூடாது; தூரத்தில் நின்று அழுதுவிட்டுப் போங்கள்" என்று சில நூலகர்கள் வெட்டியான் வேலை பார்ப்பார்கள்.



தாயுமானவர் அப்படியில்லை.

அவருக்கு ஒவ்வொரு நூல் முகமும் அறிமுகம்.

ஒவ்வொரு நூலின் முதுகில் பொறித்த எண் வைத்தே முக விலாசம் சொல்வார்.

"திறந்திருக்கும் பூக்கள் இவை; தேனெடுத்துக் கொள்ளுங்கள் தும்பிகளே!" என்கிற பாவனையில் வெளிச்சமாய் உடையணிந்து வெள்ளையாய்ச் சிரித்திருப்பார்.

அவர் அந்த நூலகத்தின் கற்புள்ள புத்தகங்களுக்காக மட்டுமே கவலைப்படுவார்.

அவர் அன்று செய்ததில் எனக்குப் பிடித்தது நூல்களை எண்களால் வரிசைப்படுத்தாமல் எண்ணங்களால் வரிசைப்படுத்தியதுதான்.

'ஆலயம் தொழுவது சாலவும் நன்று என்பதற்கு இணையடியாக நூலகம் செல்வது சாலவும் நன்று' என்று எழுதி வைத்தார்.

-வைரமுத்து- (தொடரும்)

# உங்கள் பிறந்த எண் 03 இல் கூட்டெண் 07 இன் பலன்கள்

**17**

### தோற்றம்

குருவுடன் கேது இணைந்த ஆதிக்கப் பலன் இவர்களுக்கு. மிக உயரமாக இருப்பர். அழகாகவும் இருப்பர். முடி நிறைய இருக்கும். முன் வழுக்கை விழும். உருண்டைத் தலை. அகன்ற முகம், மேடான பரந்த நெற்றியுடன் இருப்பர். கண்கள் நன்கு அமைந்து இருக்கும். மாநிறமாக இருப்பர். சதையற்ற முகமும் ஒல்லியான உடலும் இருக்கும். உறுதியான உடல் பெற்றிருப்பர்.

### குணம்

இவர்கள் மிகக் கண்ணியமாக நடப்பர். தூய்மையுடன் இருப்பர். பேச்சு மிக நல்லதாகவே இருக்கும். அச்சமற்று செயல்புரிவர். கணக்குப் போட்டு என்ன செய்தால் என்ன வரும் என்று அறிந்தே ஒன்றில் ஈடுபடுவர். முன்பின் சிந்தியாமல் எதையும் செய்ய மாட்டார். பிறர் பாதிக்கப்படாதிருக்க வேண்டும் என்ற எண்ணம் உள்ளவர். சுத்தமான ஆடை. நற்பேச்சு, கண்ணியமான நடத்தையோடு போதும் என்ற மனத்துடன் இருப்பதைக் கொண்டு வாழ்க்கை நடத்துவர். மத சங்கதிகளில் மிகவும் பற்றுடையவர். பார்ப்பவர் அப்பாவி என்பர்.

ஆனால் தன்மானம் மிக்கவர். தம் கருத்தோடு மாறுபட்டால் அவசியமானால் கடைசி வரை போராடாமல் விட மாட்டார். இவர்கள் எதற்கும் தம் கொள்கையை, சுதந்திரத்தை விட்டுத் தர மாட்டார். போலியாக நடக்க மாட்டார். குழப்பம், சந்தேகம் இவர்களுக்கு இருப்பதில்லை. சகிப்புத்தன்மை, மனிதநேயம் மிக்கவர். மதிப்பு இல்லையெனில் மகா கோபம் வரும். வைராக்கியமும் நிறைய உள்ளவர். ஆனால் நேர்மையுள்ளவர்.

பேச்சு வல்லமையை, யோக, வேதாந்தம் மாதிரி விடயங்களைப் பரப்பவே பயன்படுத்துவார். மிகவும் பக்குவத்தைச் செயலில் எதிர்பார்ப்பார். இல்லையெனில் ஏனோதானோ என வேலை செய்தால் கோபிப்பார். பிறர் தவறைச் சுட்டிக் காட்டுவர். குரு அருளால் சின்ன வயதில் ஒழுக்கமும், நல்ல குடும்ப வாழ்க்கையும் இருக்கும். சீக்கிரமே வேலை கிடைக்கும். மண வாழ்க்கையில் புகுவர். காதல் செய்தால் தோற்றுப் போகும். பிறரை எக்காரணத்தைக் கொண்டும் மட்டம்தட்ட மாட்டார்.

விளையாட்டைவிடப் படிப்பே இவருக்குப் பிடித்தது. ஆழ்ந்த உணர்வுமிக்க வாழ்க்கை இளமையிலேயே கிடைக்கும். தோல்விகளும் வாழ்வில் தடைகளும் ஏற்படும். உலக வாழ்க்கையில் விரக்தி ஏற்படும். நடுவயதில் வாழ்க்கை கெடும். மண வாழ்வு கெடலாம். மனைவியைப் பிரிவதோ, இழப்பதோ நடக்கலாம். ஆன்மிகம் இழுக்கும்.

மன உற்சாகம் இருக்கும்போது நிறையப் பேசும் இவர்கள் சோர்ந்து போனால் மௌனமாக இருந்து விடுவர். செல்வ இழப்பு, வேலை போதல் நேரும். நண்பர்களே அதிகம் இரார். ஆகவே வெளி உதவி இவருக்கு மிகக் குறைவு.

திறமை வெளிப்படாமல் வருமானம் குறைய உடல் பாதிப்பாலும் திணறுவர். நல்ல ரசிகரான இவர் கடவுள் மீதும் கோபிப்பார். தம்முடனிருப்பவரிடம் அடிப்பபோல பேசுவர். ஆனால்சாதுவே இவர்கள். பெரும் பகுதி வாழ்க்கையில் இவர்கள் தனிமையிலேயே இருப்பர்.

நல்ல ரசிகரான இவர்கள் [illegible] அதிகம் விரும்பு[illegible] இவர்களின் மனம் பல வகையில் வாழ்க்கையை எண்ணங்களால் மானசீகமாக அனுபவித்துச் சுகம் காணும். பொழுது போக்கை விரும்புவர். இசைப் பிரியராக இருப்பர். கலைகள் பற்றிப் பேசுவர். காவியம், ஓவியம் கைவரப் பெற்றுப் புகழடைவார். ஆன்மிக நூலை எழுதுவார். மனம் பற்றி நன்கு அறிந்திருப்பார். தெய்வானுக்கிரகம் பெற்றிருப்பார்.

ஆரம்பித்த வேலையிலிருந்து விலகவே மாட்டார். ஆனால் உதவிகள் கிடைக்காமல் சிரமப்படுவார். ஞான சங்கதிகளைப் படிப்பதிலும் கேட்பதிலும் ஆசையுள்ளவர். மிக நுட்பமான அபூர்வ சங்கதிகளில் மனத்தைச் செலுத்துவார். இவரிடம் அபூர்வ ஆற்றலும் அமைந்திருக்கும்.

### குடும்பம்

முன் வாழ்க்கை வசதியாக இருந்ததுபோல பிற்பகுதி வாழ்க்கை வசதியாக இருக்காது. வறுமையுடன் நோய்களும் படுத்தும். மண வாழ்வில் தடை, சோகம் வரும். காதல் தோல்விபோல ஏதாவது ஒன்று மனத்தில் பெருங்குறையாக வாழ்க்கை முழுவதும் இருக்கும்.

அழகான மனைவியே பிரச்சினையாவதும் உண்டு. மகா கோபக்காரனாதலால் குடும்பம் சண்டை சச்சரவு என நகரும். வறுமையும் நோயும்கூட வருத்தும். இவர்களைப் பிள்ளைகளும் மனைவியும் வெறுத்திடுவர். தனிமையில் வாழும்படி தள்ளப்படுவர். உழைப்பிற்கேற்ற பலன் இருக்காது. தொழிலில் தேக்கம், பணி நீக்கம் இவருக்கு நடக்கும். வாழ்க்கையில் மகிழ்ச்சியை விடத் துக்கமே அதிகமாகும்.

### தொழில்

[illegible]த்திற்கு அதிகம் உழைக்க [illegible]வர். சிலருக்கு மனைவி சம்



பாதித்து குடும்பத்தை நடத்துவார். அபாரமான எழுத்துத் திறமை இருக்கும். தம்மை விசித்திர சக்தியுள்ளவராக நம்புவார். சரியான ஆன்மிக ஞானம் இவருக்கு உண்டு.

சொந்தத் தொழிலும் செய்வர். சரியாக நடக்காது. சோதிடம், ஆன்மிகம் இவருக்கு நன்கு வரும். இரசாயனம், மருந்து தயாரிப்பதோ, விற்பதோ செய்யலாம்.

உண்மையை அப்பட்டமாகப் பேசி முன்னுக்கு வர முடியாமல் போவார். கர்மாவைத் தொலைக்கவே இவர்கள் பிரியப்படுவதால் அதிகம் சோகமாகவே வாழ்வர். வேத சாஸ்திர இதிகாசங்களைச் சார்ந்த ஆன்மிக நூலெழுதிச் சமுதாயத்திற்கு நல்லது செய்வர். கடல் கடந்து சென்று கூடப் போதிப்பர்.

### நோய்

வெப்பம் மிகுந்தும், சர்க்கரை, மூலம் நோய்கள் வரும். வாயுத் தொல்லையும் தோல் வியாதிகளும் உண்டாகும். மூட்டுகள், அடிமுதுகு வலி வரும். வாத ஜுரம் வரும். ஜலம் சம்பந்தப்பட்ட கோளாறும் உண்டாகும். வாத பாதிப்பால் கை, கால்கள் முடங்கலாம்.

(தொடரும்)

-கணித்தவர்-ஸ்வாமி-

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## யாழ்ப்பாண விஞ்ஞான சங்கத்தின் பிரிவு A வழங்கும்...

# இரகசிய விலங்கியல் (Crypto Zoology)

"இருக்கு ஆனா இல்லை" இது ஒரு தமிழ் திரைப்படத்தில் பேசப்பட்ட பிரபலமான வசனம்.

இங்கு நாம் பார்க்கப்போகும் விலங்குகளும் கிட்டத்தட்ட அதே மாதிரியான தன்மை கொண்டவையே ஆகும்.


பொதுவாக "கிரிப்டோ" என்பது இரகசியமான என்று பொருள்படும். "கிரிப்டோ" (crypto) zoology (crypto zoology) என்பது இரகசியமான விலங்குகள் பற்றிய கல்வி என்று அர்த்தப்படும்.

இங்கு இரகசியம் எனப்படுவது அந்த விலங்குகளின் இருப்பு பற்றியதாகும். இநத விலங்குகள் "இருக்கு அல்லது இல்லை என்பதே" இந்தத் துறையின் கோட்பாடாக உள்ளது.

இது பழங்காலப் பேய்க்கதைகளைப் போல சுவாரசியம் கொண்ட ஒரு துறை. பேய்களுக்குப் பதிலாக இங்கு விலங்குகள்.

இவற்றிலும் சில பேய்கள் போலவே உருவகிக்கப்பட்டிருப்பது தனிக் கதை.

பேய்கள் மற்றும் ஆவிகளின் உலகம் எவ்வளவு அலாதியான சுவாரசியம் கொண்ட கிறு கிறுப்பைத் தருமோ அதே அளவு விறு விறுப்பானது இந்தத் துறை.




இது ஒரு போலி விஞ்ஞானம் (pseudoscience) என்று பலர் கருதுகிறார்கள். இது ஓரளவு உண்மையும் கூட.

ஏனெனில் இங்கு பல கருத்துகளுக்கு அல்லது கருதுகோள்களுக்கு அடிப் படையான science protocols பயன்படுவது இல்லை.

ஓரிரு தனிப்பட்ட அவதானிப்புகளும செம்மைபடுத்தப்படாத தேடல்களுமே பொதுவாக இந்த வகை ஆராய்ச்சிகளில் முகக்கிய பங்கு வகிக்கின்றன.


ஆனாலும் பல மனிதர்கள் தங்கள் தூக்கத்தை தொலைத்து இந்த இரகசியமான விலங்குகளைக்காண பல மைல்கள் பிரயாணம் செய்கிறார்கள்.

இந்தத்துறை பலரையும் கவர்ந்து இழுக்க இதில் கிடைக்கும் சுவாரசியங்களே காரணம் ஆகும்.

பொதுவாக இந்த வகை விலங்குகள் அல்லது புதிரான அங்கிகளின் இருப்பு உலகம் முழுவதும் எல்லா மூலைகளிலும் இருக்கும். அது ஏதாவாது புராண காலக் கதைகளை அடிப்படையாகக் கொண்டது.

இந்தப் பத்தியில் இவ்வாறான சுவாரசியமான விலங்குகளைப் பற்றி பார்ப் போம்.

### Loch Ness Monster



ஸ்காட் லாண்ட் நாட்டின் மலைப் பகுதிகளில் வாழும் ஒரு நீர் வாழ் உயிரினம் ஆக இது சித்திரிக்கப்படுகிறது.

1933 களில் இதன் இருப்பு பற்றி முதலில் ஊகங்கள் வெளியிடப்பட்டது.

அதன் பின் பல அவதானிப்புகளும் சில புகைப்படங்களும் வெகு சில ஒளிப்பட ஆதாரங்களும் வெளியிடப்பட்டன.

இந்த அங்கி ஒரு நீண்ட கழுத்துடைய நீந்தும் தன்மை கொண்ட, நீருக்குள் பல மணி நேரம் மூழ்கி கிடக்கும் தன்மை கொண்ட,

அநேகமாக ஒரு ஊர்வன அங்கியின் அமைப்பு கொண்ட விலங்காக உருவகப்படுத்தப்படுகின்றது.

முதலில் ஒரு பகுதி நேர பத்திரிகைக்காரரால் அறியப்பட்டு The courier பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்ட இந்த விலங்கு பற்றிய தகவல்கள் பின்பு பலரால் பல விதமாக கூறப்பட்டது.

சில பல புகைப்படங்கள் எடுக்கப்பட்டாலும் அவை ஒன்று கலங்கிய தன்மை கொண்டதாக இருந்தன அல்லது இவற்றின் நம்பகத்தன்மை கேள்விக்குள்ளாக் கப்பட்டன.



படம்: Loch Ness

இந்த வகை புகைப்படங்களில் மிகவும் பிரபலமானது Surgeon's photo ஆகும்.

இதுவே இந்த வகை விலங்கின் முதலாவது புகைப்படமாக அறியப்படுகின்றது.


Dr.Wilson என்பவரால் எடுக்கப்பட்ட இந்தப் புகைப்படம் 1954இல் பிரசுரிக்கப்பட்டது.

ஒரு வித்தியாசமான உருவத்தைக் கண்ட அவர் ஐந்து புகைப் படங்கள் எடுத்ததாகவும் அதில் இரண்டு மட்டுமே தெளிவானதாக இருந்ததாகவும் கூறப்பட்டது.

அந்த இரண்டிலும ஒன்று தெளிவின்மை காரணமாக நிராகரிக்கப்பட்டது.

ஒரு புகைப் படம் இன்றளவும் ஒரு பேசு பொருளாய் உள்ளது.

1975இல் இந்த புகைப்படம் போலி



Surgeon's photograph

யானது என Sunday telegraph பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டது.

பல ஆய்வாளர்கள் இதன் நம்பகத் தன்மை பற்றி கேள்வி எழுப்பினார்கள்.

இந்தப் புகைப்படம் ஒரு யானையின் தும்பிக்கை என்றும், ஒரு பறவை நீருக்குள் குதிக்கும் தருணம் என்றும் பலரால் விளக்கம் கூறப்பட்டது.

சிலர் இந்தப் புகைப்படமே போலியாக எடுக்கப்பட்ட புனைவு என்று கூறினார்கள்.

இதற்கு ஆதாரமாக இந்த புகைப்படத்தின் வெட்டப்படாத (uncropped) பகுதியிலும் இதன் நெகடிவ் (negative) இலும் காணப்படும் ஒரு வகை சிறிய நீர் அலைகள் (ripples) ஏதாவது ஒரு சிறிய மிதக்கும் உபகரணம் ஒன்றினால் ஏற்பட்டது எனவும் அது ஒந்த மாதிரியை (model) இழுத்து வந்த படகினுடையது என்றும் கூறினார்கள்.


எது எவ்வாறாயினும் இந்தப் புகைப் படம் crypto zoologists இடம் ஒரு நம்பிக்கையையும் அதிர்வையும் ஏற்படுத்தியது உண்மை.

2014 ஏப்ரல் மாதத்தில் apple map தளத்தில் loch ness பகுதியில் ஒரு உருவம் தெரிவதாகவும் அது இந்த விலங்குதான் என்றும் கூறப்பட்டு பின் விவாதங்கள் தொடர்கின்றன.

என்ன புதிராகவே இருப்பினும் ஒரு விலங்கியல் மாணவனின் அல்லது ஆய்வாளரின் பார்வையில் இந்த புதிர் விலங்கிற்கு விடை காண முயற்சிப் போமானால் பின் வரும் சாத்தியங்களைக் கூறலாம்:

1. இது ஒரு அழிந்து போனதாகக் கருதப்படும்டைனோசர் (Dinosaur) வகையைச் சேர்ந்த ஒரு விலங்கு.

Plesiosaurus எனப்படும் நீர் வாழ் அங்கி கிட்டத்தட்ட இதே தோற்றம் கொண்டது. அழிந்து போனதாகக் கருத்தப்படும் இந்த வகை இன்னும் உயிரோடு இருக்கும சாத்தியம் பற்றி ஆராய வேண்டி உள்ளது.



Plesiosaurus

2. இது ஒரு தோற்றப்பிழை. இங்கு கூறப்படும் அனைத்து அவதானிப்புகளும் வேறு ஏதோ ஒரு பொருளை அல்லது சாதாரண உயிரினத்தை loch ness monster ஆக சித்திரிக்கின்றன. இது பொதுவானது. ஒரு இடத்தில் பேய் இருப்பதாக ஒருவர் கூறினால் பலரும் அதனை அவதானித்ததாக கூறுவர். ஒன்று அவர்கள் பொய் சொல்வார்கள் அல்லது வேறு ஏதோ ஒரு பொருளை பேயாகக் காண்பார்கள்.

3. இது ஒரு புதிர். இது புதிராகவே இருக்கும். சில விடயங்கள் புதிராகவே இருப்பது பல வேளைகளில் சுவாரசியத்தை அதிகரிக்கின்றது.

**க.கஜபதி**
**விரிவுரையாளர் (தகுதிகாண்)**
**விலங்கியல்துறை,**
**யாழ்.பல்கலைக்கழகம்.**

இதுவும் ஒரு புதிராகவே இருந்து புதிராகவே முடியலாம். இதுவே இந்த அங்கியின் தலைஎழுத்தாகக் கூட இருக்கலாம்.

## வாரத்திற்கு ஒரு புதிர்! 110

Intelligent evolution என்ற கொள்கையை முன்வைத்த விஞ்ஞானி யார்?

**புதிர் 110 இற்கான விடைகளை 09.06.2014 இற்கு முன்னர் கிடைக்கக்கூடியதாக அனுப்ப வேண்டிய முகவரி:**

**திரு.க.கஜபதி**
ஆசிரியர் பிரிவுA
யாழ்ப்பாண விஞ்ஞான சங்கம்,
விரிவுரையாளர், விலங்கியல் துறை,
யாழ்.பல்கலைக்கழகம்.
**P.D.BOX** 57, திருநெல்வேலி.

சரியான விடையை அனுப்பும் அதிர்ஷ்டசாலிக்கு
ரூபா 250/- பணப்பரிசு வழங்கப்படும்.
இப் பணப்பரிசினை யாழ்.பல்கலைக்கழக தாவரவியல் துறை சிரேஷ்ட விரிவுரையாளர் திரு.A.C.தவரஞ்சித்திடம் நேரில் சென்று பெற்றுக் கொள்ளலாம்.

**பரிசுக்கு அனுசரணை வழங்குவோர்:**
மக்கள் வங்கி,
யாழ். பல்கலைக்கழகம்.

**புதிர் 109 க்கான 250/-பரிசு பெறும் அதிர்ஷ்டசாலி**

அப்றோவா அற்புதச் சந்திரன்
இல: 111,பருத்தித்துறை வீதி, நல்லூர்.

**புதிர் 109க்கான கேள்வியும் விடையும்:**

Becquerel (Bq) என்பது எதனை அளக்கும் அளவீடு?
Radio activity

### யாழ்ப்பாண விஞ்ஞான சங்கம் புதிர் இல. 110

சரியான விடை :-..............................
முழுப்பெயர்:-..............................
முகவரி:-..............................
தொ.பே. இல:..............................
கையொப்பம்:..............................

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வடமாகாணத்தின் கல்வி அடைவு நிலைமையை மேம்படுத்துவதற்கான செயற்றிட்டம்



அம்பலவாணர்-சண்முகலிங்கம்
முதுகலைமாணி (பொருளியல்)

## ஓர் ஆய்வுக் கண்ணோட்டம்

அண்மையில் வடமாகாணக் கல்வியமைச்சினால் நிகழ்த்தப்பட்ட கல்வி ஆலோசனை மீளாய்வு செயலமர்வின் உள்நோக்கங்களையும் ஒட்டியதாக மேற்படி தலையங்கத்தில் கற்றல்-கற்பித்தல் செயற்பாட்டின் முப்பத்தைந்து வருடப் பட்டறிவின் வெளிப்பாடாக கல்வியியல் சார் ஆலோசனைகளையும் வழிகாட்டல்களையும் பொருத்தமான சூழ்நிலையில் குறிப்பிட்டு எழுதுவது கட்டுரை ஆசிரியரின் நோக்கமாகும்.

கற்றல்-கற்பித்தல் செய்முறையில் தொழில்பிரிப்பும் சிறப்புத் தேர்ச்சியும் என்ற தலைப்பில் எனது செயற்றிட்டத்தை முன்வைக்கின்றேன். (The Division of work and specialization on teaching-learning processes)

**செயற்றிட்டத்தின் நோக்கம்**

❋பாடசாலையின் பார்வையில்

1) க.பொ.த (சா/த), உ/த) கற்கை நெறிகளில் நூறுவீதம் (100%) சித்தியடைவு

2)பாடசாலை மட்டத்தில் நூறு வீதமாக மாணவர் வரவை பதிவு செய்தல் (100%).

3)பாடசாலைக்கு உள்ளேயும் வெளியேயும் அதி சிறந்த ஒழுக்க விழுமியத்தைப் பேணல்.

4)மாணவர்கள் மற்றும் ஆசிரிய வளங்களின் பலம், பலவீனம் என்பவற்றை இனங்கண்டு பலத்தை மேம்படுத்தலும் பலவீனத்தை நீக்கலும்

5)மாணவர்களை பொருத்தமான ஆசிரிய வளத்தினூடாக இலகுவாக வழிநடத்துதல் ஆகும்.

❋ஆசிரியர்களின் பார்வையில்

1)கற்றல்-கற்பித்தல் செய்முறையில் ஆசிரியர்கள் மனவிருப்புடன், விரும்பிய பாடத்துறையில் ஈடுபட்டு ஆத்ம திருப்தியை அடைதல்.

2) மாணவர்களின் பலத்தையும் பலவீனத்தையும் இனங்கண்டு கொள்ளல்.

3)அதற்கு பொருத்தான கற்பித்தல்நுட்ப முறைகளைக் கையாண்டு வழிகாட்டல்.

4)மாணவர்களின் ஒழுக்கத்தை எந்தச் சந்தர்பத்திலும் பேணுதல்.

5)பாடப்புலமையில் தொழிற்பிரிவும் சிறப்புத் தேர்ச்சியும் உருவாகுதல்.

6)பாடத்திட்டத்தினை குறித்த கால அட்டவணைக்குள்ளே நிறைவு செய்தல்.

7)ஆசிரியரது வரவீனம் மாணவர்களின் கற்றல் வாய்ப்பை பாதிக்காது. காரணம் சமகாலத்தில் பதிலாசிரியர்கள் கடமையாற்றுதல் நிகழ்தல்.

8.ஆசிரியளமணதுபுலமைத்துவப் போட்டியூடாக மேன்மை யடையும்.

9.எல்லா ஆசிரியர்களும், எல்லா மாணவர்களுக்கும் கற்பிப்பதால் எல்லா மாணவர்களாலும் மதிக்கப்படுவர்.

10.ஆசிரியர்கள், மாணவர்கள் மற்றும் பெற்றோர் ஆகியோருக்கிடையில் முக்கோணச்சந்திப்பும் புரிந்துணர்வும் கள நிலைமை களும் பரிசீலிக்கப்படும்.

❋ மாணவரது பார்வையில்

1. ஒரே பாடத்தின் பல அலகுகளை வெவ்வேறு ஆசிரியர்களிடம் கற்கும் வாய்ப்பு ஏற்படுவதால் வேறுபட்ட கற்பித்தல் நுட்பமுறையினால் நிறைவானமனத்திருப்தியைப்பெறுவர்.

2. மாணவர்கள்-முழுமையாக (காலை8மணி-பிற்பகல்2மணி வரை) கற்றல் செய்முறையில் ஈடுபடுவர்.

3.மாணவர்கள் தமது சிறந்த இலக்கை (100% சித்தியை) அடை வர்.

4.மாணவர்கள் சிறந்த மேற்பார்வை அணியின் கீழ் வளர்த்தெடுக்கப்படுவார்கள்.

5. மாணவர்கள் சுய விருப்புடன் கற்க பாடசாலைக்கு சமுகமளிப்பதால் வரவீனம் படிப்படியாக குறைந்து வரவு 100% இலக்கை அடையும்.

6.மாணவர்களுடைய ஒழுக்க விழுமியம் பாடசாலைக்கு உள்ளேயும் வெளியேயும் உயர்ந்த நிலையில் பேணப்படும். காரணம் எல்லா ஆசிரியர்களும் எல்லா மாணவர்களும் ஒருவரை ஒருவர் புரிந்து கொள்ளும் வாய்ப்பு ஏற்படுவதனாலாகும்.

7.இதனால் மாணவர்கள் தமது இடர்களை எந்தவொரு ஆசிரியருக்கும் சிநேகிதமான முறையில் வெளிப்படுத்தி தீர்வு காணமுடியும்.

8.இதனால் மாணவர்கள் முழு ஆர்வத்துடன் கற்றல் நடவடிக்கைகளில் ஈடுபடுவர்.

9.பொருத்தமான விளையாட்டு திறனை வளர்த்துக் கொள்ள வாய்ப்பு ஏற்படும்.

❋ பெற்றோர் பார்வையில்

1.மாணவர்கள், பெற்றோர்களுக்கும் ஆசிரியர்களுக்கும் கீழ்ப்படிந்து நடப்பார்கள்.

2.பெற்றோர் தமது பிள்ளைகள் தொடர்பான கற்றல்-கற்பித்தல் செயற்பாடு மற்றும் ஒழுக்க நடத்தைக் கோலங்களை வகுப்பாசிரியர்,பாட ஆசிரியர்களை சந்தித்து கருத்துப் பரிமாற வாய்ப்பு உண்டு.

3.பெற்றோர், பிள்ளைகளால் ஏற்படக்கூடிய மன அழுத்தத்திலிருந்து விடுதலை பெற (free from the Mental Stress) முடியும்.

4.பெற்றோர் தமது பிள்ளைகளை நல்ல முறையில் பேணி வளர்க்க முடியும்.

5.பெற்றோர்கள் ஆசிரியர்களுடனும் பாடசாலை நிர்வாகத்தினருடனும் ஒத்துழைப்பு நல்கி திறம்பட செயற்பட முடியும்.

**புதிய கற்றல்- கற்பித்தல் செய்முறைத் திட்டத்தின் படிமுறை ஒழுங்குகள்**

1. ஒன்றுக்கு மேற்பட்ட சமாந்தர வகுப்புக்கள் உள்ள பாடசாலைகளில்

★ குறித்த பாடத்திற்குரிய ஆசிரிய வளத்தை குறித்த தர வகுப் புகளுக்கு முழுமையாக ஒதுக்குதல். (உ+ம்) க.பொ.த.உ/த) பிரிவில் ஐந்து சமாந்தர வகுப்புக்கள் உள்ளன எனவும் ஐந்து பாட ஆசிரியர்கள் இருப்பின் ஐந்து பேரையும் ஐந்து வகுப்புகளுக்கும் பாட அலகுகளை கற்பிப்பதற்கு நியமித்தல்.

2.பாடவேளையை நேர அட்டவணைப்படுத்துவதற்கு இலகுவாக குறித்த பாடத்தை குறித்த வகுப்புக்கு ஒதுக்கும் போது. ஒன்றுக்கு மேற்பட்ட சமாந்தர வகுப்புக்கள் ஆயின் ஒரே நேரத்தில் குறித்த அலகை அந்த சமாந்தர வகுப்புக்களுக்கு கற்பிக்க அட்டவணைப்படுத்தல். இதனால்-நேரசூசிகையில் ஏற்படக்கூடிய தவறுகள் நீங்கும். (உ+ம்) க.பொ.த. உ/த) கணித பிரிவில் 1 ஆம் தவணைக்குரிய பாட அலகுகளை கற்பிப்பதற்கு ஐந்து வகுப்புக்களும் 5 ஆசிரிய வளமும் இருப்பின்

| சமாந்தர வகுப்புக்கள் / பாட அலகு | G 12 A | G12 B | G12C | G12D | G12E | |
|---|---|---|---|---|---|---|
| 1ம் அலகு | அ | ஆ | இ | ஈ | உ | (ஆசிரியர்கள்) |
| 2ம் அலகு | உ | அ | ஆ | இ | ஈ | (ஆசிரியர்கள்) |
| 3ம் அலகு | ஈ | உ | அ | ஆ | இ | (ஆசிரியர்கள்) |
| 4ம் அலகு | இ | ஈ | உ | அ | ஆ | (ஆசிரியர்கள்) |
| 5ம் அலகு | ஆ | இ | ஈ | உ | அ | (ஆசிரியர்கள்) |

❋ஒவ்வொரு அலகும் கற்பித்த பின்னர், அலகு அடிப்படையில் சமாந்தர வகுப்புக்களுக்கு அலகு பரீட்சை நடத்தி மாணவர்களின் அடைவை பரிசீலனை செய்தல்.

❋உயர்ந்த புள்ளியைப் பெற்ற முதல் பத்து (Top Ten) மாணவர்களுக்கு பரிசு, சான்றிதழ் வழங்கல். ஆகக் குறைந்த புள்ளிகளைப் பெற்ற (40இற்கு குறைவாக) மாணவர்களுக்கு பரிகார கற்றல், கற்பித்தல் செய்வதுடன் தொடர்ச்சியாக கண்காணித்தலும்.

❋இவ்வாறு ஒவ்வொரு தவணைக்கும் பாட அலகுகளையும் ஆசிரிய வளத்தையும் சிறந்த சுழற்சி முறையில் ஒதுக்கீடு செய்வதன் மூலம் எல்லா ஆசிரியர்- மாணவர் அறிமுகத்தையும்நல்லுறவையும்பேணுதல் மூலம் உயர்ந்த கல்வித் தரத்தைப் பேண முடியும்.

3.ஒரு சமாந்தர வகுப்புக்கள் இல்லாது ஒரு துறைக்கு, ஒரு வகுப்பு மட்டும் உள்ள பாடசாலைகளில் குறித்த பாடத்தைக் கற்பிக்கும் ஒன்றுக்கு மேற்பட்ட ஆசிரிய வளங்கள் உள்ள நிலையில் குறித்த பாடத்திற்குரிய பாடவேளையை ஒன்றுக்கு மேற்பட்ட ஆசிரிய வளங்களுக்கு பகிர்ந்தளிப்பதன் மூலம் உத்தமமான பெறுபேற்றை அடைய முடியும். ஆசிரிய வளமும் உத்தமமாக பயன்படுத்தப்படும். ஒரு பாடத்திற்கு 3 ஆசிரியர்கள் இருப்பின் (உ+ம்)

கணிதபாடம் G12 (1ம் தவணை) (ஆசிரியர்வளம்)

1ம் தவணை { அலகு 1 அ; அலகு 2 ஆ; அலகு 3 இ

அலகு ஒன்று கற்பித்து முடிந்ததும் அலகுப் பரீட்சையை நடத்தி மாணவரது பெறுபேறுகளை மதீப்பீடு செய்து உயர்ந்த புள்ளிகளைப் பெற்ற மாணவர்கள் பாராட்டப்படல், குறைந்த புள்ளிகளைப் பெற்ற மாணவர்களுக்கு பரிகாரக் கற்பித்தலை முன்னெடுத்தல்.

4.ஒரே பாடவேளையில் சமாந்தர வகுப்புக்களில் ஒரே அலகு கற்பிக்கப்படும் போது பாடவேளை முடிந்த பின்பு மாணவர்களின் குறிப்பு கொப்பிகள் ஓய்வு வேளையில் அதே பாட ஆசிரியர்களால் திருத்தப்பட்டு மாணவருக்கு வழங்கல். இந்நிலையில் குறித்த பாடஆசிரிய வளங்கள் ஒன்றாக அமர்ந்து கலந்துரையாடி மாணவர்களின் மதிப்பீட்டு நிலையை பகுப்பாய்வு செய்தல்.

5.ஆசிரிய குழாமிற்கிடையே தரவட்டசெயற்பாடும். (Quality Circle) அனுபவ பகிர்வும் மேற்கொள்ளப்படுதல் (Sharing Experiances)

6.வருடாந்தம் பாடதினம் கொண்டாடப்படுதல் (உ+ம்) கணித தினம், விஞ்ஞான தினம், சமூக விஞ்ஞான தினம் என்பன கொண்டாடப்படுதல்.

7.தவணைக்குரிய மாணவர்களது அடைவு மட்டம் மாதாந்தம்/ தவணை முறையில் அதிபருக்கு அறிக்கையிடல்-தொடர்ந்தும் குறித்த பாடத்தில் பலவீனமாக (சித்தியடையாது) உள்ள மாணவர்களை பாடதுறையை மாற்றுவதற்கு ஆலோசனை வழங்கலும் வழிகாட்டலும்.

8.பாட அலகுகளையும் பாட வேளைகளையும் பாட ஆசிரியர்களையும் பங்கீடு செய்யும் கடமைகளை பகுதித் தலைவரும் பாட இணைப்பாளரும் மேற்கொள்ளல். அலகு பரீட்சையை தொடர்ந்தும் நடத்துதல். எல்லா பாட ஆசிரியர்களிடமிருந்தும் வினாக்கள், விடைகள்.

9.முக்கிய பாட நெறிகளுக்குரிய பாடங்களை காலை நேரத்திலும் ஏனைய பாடங்களை இடைவேளைக்கு பின்பும் 7ஆம் 8ஆம் வேளைகளுக்கும் ஒதுக்கீடு செய்தல். (உ+ம்) கணிதத்துறை, உயிரியல் துறை, வர்த்தகத்துறை என்பவற்றிக்குரிய பிரதான பாடங்களை காலை வேளையில் கற்பித்தல்.

அதேபோல சா.தரத்திற்குரிய 1 ஆம் அட்டையிலுள்ள 6 பாடங்களையும் காலையில் 4 பாட வேளைகளுக்கும் 2 பாடங்களை 7ம், 8ம் பாடவேளைக்குமாக ஒதுக்குதல்.

10. உயர்தர பிரிவு மாணவர்களுக்கு 7ம், 8ம் பாடவேளைகளை பல்வேறு வகை விளையாட்டுக்களுக்கு ஒதுக்கீடு செய்தல்.

(உ+ம்) உள்ளக விளையாட்டுக்களான சதுரங்கம் (Chess), பூப்பந்தாட்டம் (Batmintan), மேசைப்பந்து (Table Tenis), கரம் அடித்தல் (Carum), (Scrabble) ஆகியவற்றையும் வெளியக விளையாட்டுக்களான மட்டைப்பந்தாட்டம், கரப்பந்தாட்டம், கூடைப்பந் தாட்டம், எல்லே, கபடி ஆகியவற்றையும் விளையாட ஏற்புடைய வளங்களை ஒதுக்கீடு செய்தல்.

மேற்குறித்த செயலொழுங்கின்படி செயற்படும்போது பௌதீக வளங்களும் ஆசிரிய வளங்களும், மாணவ வளங்களும் சிறப்புத் தேர்ச்சி பெற்று சிறந்த கல்வி அறிவு, திறன்/தேர்ச்சி, மனப்பாங்கு என்பவற்றுடன் கல்வி இலக்கையும், வாழ்க்கை இலக்கையும் எய்த முடியும். மேற்படி கல்வி செயற்றிட்டத்தை நன்கு ஆராய்ந்து இதன் பலாபலன்களை அனைவரும் பெறுவதற்கு பொருத்தமாக கல்விமான்கள், பேராசிரியர்கள், விரிவுரையாளர்கள், அதிபர்கள், ஆசிரியர்கள், மாணவர்கள், பெற்றோர்கள் மற்றும் நிறுவனங்களும் தத்தம் விமர் சனங்களையும் ஆக்க பூர்வமான கருத்துக்களையும் கூறி இச் செயற்றிட்டம் முதலில் வடக்கு மாகாண மட்டத்தில் பின்பற்றப்படுவதற்கு உதவுமாறும் அன்புடன் கேட்டுக் கொள்கின்றேன்.

"முயலும்வெல்லும், ஆமையும் வெல்லும் ஆனால் முயலாமை ஒருபோதும் வெல்லாது"

"உலக நிலைமை பற்றி சிந்திப்போம், உள்ளக நிலைமைக் கேற்ப செயற்படுவோம்"

'Think Globally, Act Locally'

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# மோடியின் "இந்திய மொடல்" என்ன?


காந்திக்கு வணக்கம் செலுத்திவிட்டு குடியரசுத்தலைவர் மாளிகையில் நடைபெற்ற பிரமாண்டமான பதவியேற்பு விழாவில் இந்திய திருநாட்டின் 15ஆவது பிரதமராக பதவியேற்றுள்ளார் நரேந்திரமோடி. சார்க் நாட்டுத் தலைவர்கள் புடைசூழ நடைபெற்ற பதவியேற்பு விழா அரங்கத்தில் பாகிஸ்தான் நவாஷ் ஷெரிப்பும் இலங்கை ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவும் அனைவரது கண்ணையும் கவர்ந்தவர்கள். முன்னால் பிரதமர் மன்மோகன்சிங் நவாஷ் ஷெரிப்பிற்கு அருகிலும் பா.ஜ.கவின் இரும்பு மனிதர் என்று முன்பொருகாலத்தில் வர்ணிக்கப்பட்ட அத்வாணி ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவிற்கு அருகிலும் அமர்ந்திருந்தார்கள்.

இந்தியக் குடியரசுத் தலைவர் பிராணப் முகர்ஜி செய்து வைக்கும் முதல் பிரதமர் பதவிப்பிரமாண நிகழ்ச்சி இது. மோடி பிரதமராவதைப் பார்த்த மக்கள் மகிழ்ச்சிக் கடலில் மூழ்கியிருந்த நேரம் என்றால் அது 26 மே மாதம் மாலை ஆறு மணிதான். சிவபெருமானுக்கு உகந்த பிரதோஷ வேளையில் பதவிப்பிரமான நிகழ்ச்சிகள் தொடங்கியது. அப்போதுதான் மக்கள் எதிர்பார்த்த நரேந்திரமோடி, "நரேந்திரமோடியாகிய நான்" என்று கூறி பதவிப் பிரமாணமும் ரகசிய காப்புப் பிரமாணமும் எடுத்துக்கொண்டார். அவருடன் சேர்த்து 45 அமைச்சர்கள். அவர்களில் 23 பேர் கேபினெட் அமைச்சர்கள். மற்றவர்கள் மத்திய இணை அமைச்சர்கள். வளர்ச்சி, வலிமையான பாரதம் என்ற முழக்கத்துடன் நாட்டிற்கு பிரகாசமான எதிர்காலத்தை உருவாக்கப் பாடுபடுவோம் என்று பத்வியேற்றவுடன் இந்திய மக்க்ளுக்கு த்னது பிரதமர் அலுவலக இணைய தளத்தின் மூலம் முதல் வாழ்த்துச் செய்தியை விடுத்துள்ளார் மோடி.

நரேந்திரமோடிக்கு பதவிப்பிரமாணம் முடிந்தவுடன் அவரது டீமில் உள்ள மிக முக்கிய தலைவர்கள் கேபினெட் அமைச்சர்களாக பதவிப் பிரமாணம் செய்து கொண்டார்கள். அவர்களில் முதலில்பதவிப் பிரமாணத்திற்கு அழைக்கப்பட்டவர் ராஜ்நாத் சிங். அடுத்து அருண் ஜேட்லி. மூன்றாவது வெங்கய்யா நாயுடு. இவர்களில் அருண்ஜெட்லி நடந்து முடிந்த தேர்தலில் பஞ்சாப் மாநிலத்தில் போட்டியிட்டு தோற்றார். ஆனால் ராஜ்ய சபை எம்.பி.யாக ஏற்கனவே இருப்பதாலும் மோடியின் தளகர்த்தா என்ற அடிப்படையிலும் அவருக்கு அமைச்சர் பாக்கியம் கிடைத்திருக்கிறது. பா.ஜ.கட்சித் தலைவர்களாக இருந்தவர்களில் மூவர் மோடி தலைமையில் இப்போது அமைச்சராகியிருக்கிறார்கள். ஆந்திர மாநிலத்தைச் சேர்ந்த வெங்கய்யா நாயுடு, மஹாராஷ்டிரா மாநிலத்தைச் சேர்ந்த நிதின் கட்கரி, உத்தரபிரதேசத்தைச் சேர்ந்த ராஜ்நாத் சிங் ஆகியோர்தான் அவர்கள். இம்மூவரில் ராஜ்நாத் சிங் தற்போது பா.ஜ.க. தலைவராக இருக்கிறார். மற்ற இருவரும் ஏற்கனவே தலைவர்களாக இருந்து விலகிக் கொண்டவர்கள். மோடி பிரதமர் வேட்பாளராக அறிவிக்கப்பட்டபோதும், பிறகு அவர் சீனியர்களை ஓரங்கட்டிய போதும் மோடிக்கு ஏட்டிக்குப் போட்டி அரசியல் செய்தவர்தான் சுஸ்மா சுவராஜ். அவர் அமைச்சராக பதவியேற்றுள்ளதுதான் அனைவரையும் வியக்க வைத்த விடயம். தன் எதிர்ப்பாளர்களையும் அரவணைத்துச் செல்ல விரும்புகிறார் மோடி என்பதற்கு உதாரணம்!

கர்நாடக மாநிலத்தில் மோடியின் நம்பிக்கைக்குரியவர் எடியூரப்பா. அங்கு பிரிந்துகிடந்த பா.ஜ.கவை மோடி சொல்லித்தான் ஒருங்கிணைத்தார் எடியூரப்பா. அதன் பிறகு அங்கு நடைபெற்ற தேர்தலில் 17 எம்.பிக்களைக் கைப்பற்றிக் கொடுத்தார் எடியூரப்பா. அதனால் அவருடைய விசுவாசிகளான சதானந்த கவுடா, தவாங்கரே ஆகியோருக்கு அமைச்சர் பதவி வழங்கியிருக்கிறார் மோடி. எடியூரப்பாவை பேலன்ஸ் பண்ணுவதற்கு அனந்தகுமாரும் அமைச்சராகியுள்ளார். இது எதிர்காலத்தில் கர்நாடக பா.ஜ.கவிற்குள் பவர் பாலிடிக்ஸிற்கு வழி வகுக்கும். மோடி அமைச்சரவைக்கு முஸ்லிம் முகமும் கொடுக்கப்பட்டிருக்கிறது. முன்னாள் ராஜ்ய சபை துணைத் தலைவராக இருந்த நஜ்மா ஹெப்துல்லாவிற்கு அமைச்சர் பத்வி வழங்கப்பட்டுள்ளது. பா.ஜ.கவில் உள்ளவர்கள் தவிர, நாடு முழுவதும் தெரிந்த தலித் தலைவர் என்ற முறையில் கூட்டணிக் கட்சியைச் சார்ந்த ராம் விலாஸ் பாஸ்வான் அமைச்சராகியிருக்கிறார். தன்னுடன் முதலில் கூட்டணி வைத்ததற்கு இந்த நன்றிக்கடனை செலுத்தியிருக்கிறார் மோடி. பாபர் மசூதி இடிப்பு வழக்கில் உள்ள உமாபாரதி அமைச்சராகியிருக்கிறார் என்பது மட்டுமே ஒட்டு மொத்த அமைச்சரவையிலும் உள்ள திருஷ்டிப் பொட்டு மாதிரி. மற்றபடி நரேந்திரமோடி அப்பழுக்கற்ற அமைச்சரவை ஒன்றை உருவாக்கியிருக்கிறார் என்றுதான் பாராட்ட வேண்டும். வாக்களித்த மக்களுக்கு நம்பிக்கையூட்டும் விதத்தில் அமைச்சரவையை கொடுத்துள்ளார்.

இந்திய அரசியல் சட்டப்படி மத்திய அமைச்சரவையில் நாடாளுமன்ற உறுப்பினர்களின் எண்ணிக்கையில் 15 சதவீதத்திற்கு மேல் அமைச்சர்களின் எண்ணிக்கை இருக்க முடியாது. அதனடிப்படையில் பார்த்தால் ஏறக்குறைய 80 அமைச்சர்களை நியமிக்கலாம். ஆனால், மோடிக்கு இப்போது கூட்டணிக் கட்சிகளின் தொல்லை இல்லை. அவருக்கே தனி மெஜாரிட்டி இருக்கிறது. தனி மெஜாரிட்டி கிடைத்தாலும் கூட்டணிக் கட்சிகளுடன் இணைந்தே அரசு அமைப்பேன் என்று தேர்தலுக்கு முன்பு வாக்குறுதி கொடுத்தார் மோடி. அந்த வாக்குறுதியை நிறைவேற்றவே இப்போது கூட்டணிக் கட்சிகளுக்கு சாம்பிளுக்கு சில அமைச்சர் பதவிகளைக் கொடுத்துள்ளார். கூட்டணிக் கட்சிகளின் நிர்ப்பந்தம் இல்லை என்பதால் இந்தமுறை பல இலாகாக்களை இணைத்து அமைச்சர்களின் எண்ணிக்கையை 45 இற்குள் சுருக்கியுள்ளார். குறைந்த எண்ணிக்கையில் அமைச்சரவை, மக்களுக்கு நிறைந்த சேவை என்ற மோடியின் முழக்கத்திற்கு ஏற்றவாறு அமைச்சரவையின் எண்ணிக்கை அமைந்துள்ளது. மக்கள் அளித்த ஒரு கட்சி ஆட்சி முறைக்கான தீர்ப்பு அமைச்சரவை உருவாக்கத்தில் மோடிக்கு இந்த சுதந்திரத்தைக் கொடுத்திருக்கிறது.



தமிழகத்திற்கு மத்திய இணை அமைச்சர் பதவி மட்டும் வழங்கப்பட்டுள்ளது. தமிழகத்தில் புதிய கூட்டணியை அமைக்க பொன். ராதாகிருஸ்ணன் அரும்பாடுபட்டார். ஆளுக்கொரு பக்கமாக இழுத்த ராமதாஸையும் விஜயகாந்த்தையும் இணைத்து கூட்டணித் தேரை ஓட்டுவதற்குள் படு கஷ்டப்பட்டார். தமிழகத்தில் வீசிய ஜெயலலிதா புயலில் அவர் மட்டும் பா.ஜ.கவிலிருந்து வெற்றி பெற்றார். கன்னியாகுமரி தொகுதியில் போட்டியிட்டு வெற்றி பெற்ற பொன்.ராதாகிருஸ்ணனுக்கு அனைவரும் கேபினெட் அமைச்சர் பதவி எதிர்பார்த்தார்கள். ஆனால், கிடைத்ததோ இணை அமைச்சர் பதவிதான். மற்றபடி பா.ஜ.கவின் செய்தி தொடர்பாளர் நிர்மலா சீத்தாராமனுக்கும் மத்திய இணை அமைச்சர் பதவி கிடைத்துள்ளது. ஆனால், இவர் தமிழக கணக்கில் வருகிறாரா அல்லது அகில இந்திய பா.ஜ.கவின் கணக்கில் வருகிறாரா என்பது புலப்படவில்லை. தெலுங்கு தேசத்தின் சார்பில் அசோக் கஜபதி ராஜு கேபினெட் அமைச்சராகியிருக்கிறார். அதே நேரத்தில் மோடி அமைச்சரவையிலும் காந்தி ஃபமிலிக்கு பிரதிநித்துவம் கிடைத்திருக்கிறது. சஞ்சய் காந்தியின் மனைவி மேனகா காந்திக்கு கேபினெட் அந்தஸ்து கொடுக்கப்பட்டு, அவர் பதவிப் பிரமாணம் செய்து கொண்டபோது அவரது மகன் வருண்காந்தி புன்னகை தவழும் முகத்துடன் தன் அம்மா பதவிப் பிரமாணத்தைப் பார்த்து ரசித்துக் கொண்டிருந்தார். ராகுல் காந்தியை எதிர்த்துப் போட்டியிட்டு தோல்வியடைந்த ஸ்ருதி ஈரானிக்கு கேபினெட் அமைச்சர் பதவி. எதிர்பார்த்த அமைச்சரவை லிஸ்ட் வெளிவந்து விட்டது.

இவர்களில் யாருக்கு என்ன இலாகா என்பது ஒரு புறமிருக்க, ராஜ்நாத் சிங்கிற்கு உள்துறை வழங்கப்படுகிறது. உத்தரபிரதேசம் போன்ற மிகப்பெரும் மாநிலத்திலிருந்து ஒருவர் உள்துறை அமைச்சராகிறார். அருண் ஜேட்லி நிதியமைச்சர் மற்றும் பாதுகாப்புத்துறை வழங்கப்பட்டுள்ளது. இவ்விரண்டு துறைகளுமே ஹெவியான இலாகாக்கள். நாட்டின் பொருளாதாரமும் பாதுகாப்பும்தான் மோடி தேர்தலில் காங்கிரஸின் மீது வைத்த குற்றச்சாட்டு. அந்த சுமை இப்போது அருண் ஜெட்லி தலையில் வந்து இறங்கியிருக்கிறது. ரவி சங்கர் பிரசாத் சட்ட இலாகா. அத்துடன் போனஸாக தொலைத்தொடர்புத்துறை வழங்கப்பட்டுள்ளது. இந்த துறையில்தான் தி.மு.கவின் சுமத்தப்பட்ட 2ஜி ஸ்பெக்ட்ரம் விவகாரம் இருக்கிறது. பிரதமரையும் ப.சிதம்பரம் போன்றவர்களையும் விசாரிக்க வேண்டும் என்று நீண்ட நாள் வலியுறுத்தி வருபவர்கள் ரவிசங்கர் பிரசாத், அருண் ஜெட்லி போன்றோர்தான். அவர்களின் கையிலேயே சம்பந்தப்பட்ட இலாகாக்கள் இந்த முறை கிடைத்துள்ளது.

வெளியுறவு இலாகா சுஸ்மா சுவராஜுக்கு கொடுக்கப்பட்டுள்ளது. இலங்கைத் தமிழர் பிரச்சினையினை தமிழக கோணத்தில் பார்க்காத பா.ஜ.க. தலைவர்களில் சுஸ்மா சுவராஜ் மிக முக்கியமானவர். ஏற்கனவே தி.மு.க. அழுத்தம் கொடுத்து, ஐக்கிய முற்போக்குக் கூட்டணி அரசு இலங்கையைக் கண்டிக்கும் தீர்மானம் ஒன்றை இந்திய நாடாளுமன்றத்தில் கொண்டு வரலாமா என்று ஆலோசிக்க ஒரு கூட்டம் கூட்டியது. இப்படியொரு கூட்டத்தை ஏன் கூட்டினீர்கள் என்று அன்றைய நாடாளுமன்ற விவகாரக் குழு அமைச்சர் கமல்நாத்திடம் சண்டை போட்டவர் சுஸ்மா சுவராஜ். போர் முடிந்தவுடன் இலங்கை வந்த இந்தியக் குழுவில் இடம்பெற்றிருந்த முக்கிய தலைவர் சுஸ்மா சுவராஜ். இந்தப் பின்னணியில் இலங்கைத் தமிழர் பிரச்சினையில் காங்கிரஸ் தலைமையிலான வெளியுறவு அமைச்சகம் எடுத்த நடவடிக்கைகளைக் கூட சுஸ்மா சுவராஜ் தலைமையிலான வெளியுறவுத்துறை அமைச்சகம் எடுக்குமா என்பது கேள்விக்குறியாகவே இருக்கிறது. இலங்கைத் தமிழர் பிரச்சினை பல வெளியுறவுக் கொள்கைகளில் ஒன்றாகவே எடுத்துக்கொள்ளக்கூடிய சூழ்நிலை ஏற்பட்டிருக்கிறது. குறிப்பாக தமிழகத்தின் கட்சிகளின் ஆதரவு பா.ஜ.க. ஆட்சிக்குத் தேவையில்லை என்ற நிலையில் அதிரடி மாற்றங்கள் எதுவும் இலங்கைத் தமிழர் பிரச்சினையில் நடந்துவிடப் போவதில்லை. பதவியேற்பு விழா அன்றே கறுப்புக் கொடி காட்டி, இது மகிழ்ச்சிகரமானதும் துக்ககரமானதுமான நாள் என்று ம.தி.மு.க. பொதுச்செயலாளர் வைகோ டெல்லியிலேயே பேட்டி கொடுத்துள்ளார். பதவிப் பிரமாணத்தில் பங்கேற்க வேண்டியவர் கறுப்புக் கொடி காட்டி கைதானார் என்பது இந்தப் பின்னணியில் தான்!

புதிய பிரதமர் நரேந்திரமோடியின் முன்பு இருக்கும் முக்கிய சவால் பொருளாதாரத்தில் நாட்டை முன்னேற்றுவதுதான். அடுத்த அண்டை நாடுகளால் அடிக்கடி ஏற்பட்ட தொந்தரவுகளை நிறுத்துவது. அதன் ஒரு அங்கமாகத்தான் சார்க் நாடுகளின் தலைவர்களை அழைத்துள்ளார் மோடி. விலைவாசி உயர்வு, ஊழல் போன்றவற்றை கட்டுப்படுத்தி காங்கிரஸை விட வித்தியாசமான ஒரு அரசாங்கத்தை எப்படி மோடி கொடுக்கப் போகிறார் என்பதை இந்திய மக்கள் ஆவலுடன் எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறார்கள். பாகிஸ்தானுடன் அவரது உறவுதான் மோடியின் எதிர்கால அரசியலை தீர்மானிக்கும் சக்தியாக இருக்கும். அடிக்கடி வாஜ்பாஜைப் புகழும் மோடி அவரை ரோல் மாடலாக எடுத்துக் கொள்ளவே முனைப்புக் காட்டுவார் என்பது தெரிகிறது.

பா.ஜ.க. நாடாளுமன்றக் கட்சித் தலைவராக மோடி தேர்வு செய்யப்பட்டவுடன் இந்திய நாடாளுமன்ற மைய மண்டபத்தில் நின்று பேசிய மோடி, வாஜ்பாய் இந்த தருணத்தில் இங்கே இருந்திருந்தால் இன்னும் மகிழ்ந்திருப்பேன் என்று உருக்கமாகச் சொன்னது அவரது உள்ளக்கிடக்கை. கட்சிக்குள் அத்வானி, முரளி மனோகர் ஜோசி போன்ற பழம்பெரும் தலைவர்கள் ஒதுங்கி விட்டார்கள். அவர்கள் எந்தப் பதவிக்காக லீடர்ஸ் இன்வெயிட்டிங் என்பது இதுவரை தெளிவாகவில்லை. படுதோல்வியடைந்த காங்கிரஸ் கட்சியின் சார்பில் சோனியாவும், ராகுலும் பங்கேற்றது அரசியல் நாகரிகத்தின் உச்சக்கட்டம். இந்தியா புதுப் பாதையை நோக்கி பீறுநடை போடவிருக்கிறது. குஜராத் மொடல் என்ற கோஷத்தை வைத்து ஆட்சியைப் பிடித்த நரேந்திரமோடியின் இந்திய மொடல் என்ன? ஜனநாயக பூங்காவில் மிதந்து கொண்டிருக்கும் ஒட்டுமொத்த இந்தியாவே உற்றுக் கவனித்துக் கொண்டிருக்கிறது.

-எம்.காசிநாதன்-

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஐ.நா. விதிமுறைகளில் மாற்றங்கள் அவசியம்

## அரசாங்கம் கோரிக்கை

(கொழும்பு)

ஐக்கிய நாடுகள் அமைப்பின் விதிமுறைகளில் மாற்றங்கள் செய்யப்பட வேண்டுமென இலங்கை அரசாங்கம் கோரிக்கை விடுத்துள்ளது. மலேசியாவில் அண்மையில் கைது செய்யப்பட்டு நாடு கடத்தப்பட்ட தமிழீழ விடுதலைப் புலி உறுப்பினர்களுக்கு ஐக்கிய நாடுகள் அகதிகளுக்கான முகவர் நிறுவனம். அகதி அந்தஸ்து வழங்கியிருந்ததாகத் தெரிவிக்கப்படுகிறது.

இவ்விடயம் தொடர்பில் வெளியிட்டுள்ள செய்திக் குறிப்பில்,

பயங்கரவாத நடவடிக்கைகளுடன் தொடர்புடைய நபர்களுக்கு ஐக்கிய நாடுகள் அமைப்பு எவ்வாறு அகதி அந்தஸ்து வழங்குகின்றது என்பது தெளிவாகவில்லை என்பதுடன் அகதிகளின் விண்ணப்பங்கள் தொடர்பில் இலங்கை அரசாங்கத்திடம் ஐக்கிய நாடுகள் அமைப்பு எவ்வித ஆலோசனையும் நடத்தவில்லை.

ஐக்கிய நாடுகள் அமைப்பு அகதி அந்தஸ்து வழங்குவதற்கு முன்னதாக சில முக்கியமான விடயங்களை ஆராய்ந்து பார்க்க வேண்டும். அத்துடன் தற்போதைய நடைமுறைகளில் மாற்றம் கொண்டு வரப்பட வேண்டும்.

ஐக்கிய நாடுகள் அமைப்பின் பாதுகாப்பின் கீழ் பெரும் எண்ணிக்கையிலான புலி உறுப்பினர்கள் அடைக்கலம் பெற்றுக் கொண்டு வெளிநாடுகளில் வாழ்ந்து வருகின்றனர். ஐக்கிய நாடுகள் அமைப்பினை பயன்படுத்தி எவரும் குற்றச் செயல்கள் மோசடிகளில் ஈடுபட அனுமதியளிக்க முடியாது.

நாடு கடத்தப்பட்டவர்கள் அப்பாவிகள் என்றால் அது குறித்த சாட்சியங்களை மனிதவுரிமை கண்காணிப்பகம் உள்ளிட்ட தன்னார்வ தொண்டு நிறுவனங்கள் சமர்ப்பிக்க வேண்டும். கைது செய்யப்பட்ட மூவரும் சட்டவிரோதமான முறையில் மலேசியாவிற்குள் பிரவேசித்தவர்கள் என தெரிவிக்கப்படுகிறது. யுத்த நிறைவின் பின்னர் பிரித்தானியா அவுஸ்திரேலியா போன்ற நாடுகளிலிருந்து போலியாக புகலிடம் கோரிய ஆயிரத்திற்கும் மேற்பட்ட புகலிடக் கோரிக்கையாளர்கள் நாடு கடத்தப்பட்டுள்ளதாக அச்செய்திக் குறிப்பில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (2)

# எதிர்கால தலைமுறைக்காக சுற்றாடலை பாதுகாக்க வேண்டும்

## அமைச்சர் யாப்பா தெரிவிப்பு



(கொழும்பு)

சுற்றாடலை பாதுகாப்பதற்கு இணைவாக நிலையான எரிசக்தி பாவனைக்கான பொறிமுறை உருவாக்கப்பட வேண்டுமென பெற்றோலியக் கைத்தொழில் அமைச்சர் அநுரபிரியதர்சன யாப்பா தெரிவித்துள்ளார்.

தெற்காசிய ஓசோன் அதிகாரிகளின் வலையமைப்பு மாநாட்டில் ஆரம்ப அமர்வில் தலைமை வகித்து அமைச்சர் உரையாற்றினார். கொழும்பு கிரேன்ட் ஒரியன்டல் ஹோட்டலில் இன்றுவரை இம்மாநாடு நடைபெறும்.

எமது முன்னோர்கள் சுற்றாடல் வளங்களைப் பயன்படுத்தும் போது பொருளாதார நன்மைகளைக் கருத்திற் கொள்ளவில்லை. வளப் பயன்பாட்டில் நிலையான முறையில் அவர்கள் செயற்பட்டனர்.

ஏகாதிபத்தியவாதிகளின் வருகையோடு வர்த்தக மய செயற்பாடுகள் ஆரம்பமானதுடன் சுற்றாடலுக்கான அச்சுறுத்தலும் அதிகமானது. காலநிலை மாற்றங்கள், சீதோஷ்ன நிலை மாற்றங்கள், இயற்கை அனர்த்தங்கள் என்றெல்லாம் உருவாகின.

நாடு என்ற வகையில் இலங்கை ஆரம்பம் முதல் சர்வதேச சுற்றாடல் கொள்கைகளுக்கு இணங்கிச் செயற்படும் நாடாகும். எதிர்கால தலைமுறைக்காக சுற்றாடலை பாதுகாக்கும் தலையான பொறுப்பு எமக்கு உண்டு என்றும் அமைச்சர் தொடர்ந்து தெரிவித்தார்.

ஐ.நா. சுற்றாடல் வேலைத்திட்டம், அபிவிருத்தி நிதியம் பிரதிநிதிகளும் ஜப்பான், அவுஸ்திரேலியா உட்பட இருபது ஆசிய வலய நாடுகளின் பிரதிநிதிகளும் சுற்றாடல் செயற்பாட்டாளர்களும் இம் மாநாட்டில் பங்குபற்றினர். (2)

# வடக்கின் பிரதேசங்களுக்கு நீர் வழங்கத்திட்டம்

## நீர் முகாமைத்துவ அமைச்சு தெரிவிப்பு

(கொழும்பு)

வடமத்திய மாகாண நீர்ப்பாசனத்திட்டத்தின் மூலம் வடக்கின் பல்வேறு பிரதேசங்களுக்கும் நீர் வழங்க திட்டமிடப்பட்டுள்ளதுடன். ஆயிரம் சிறு குளங்கள் மூலம் 33 ஆயிரம் ஹெக்டேயர் பயிர்ச்செய்கைக்கு நீர்ப்பாசனம் வழங்கவும் நடவடிக்கை எடுத்துள்ளதாக நீர்ப்பாசனம் மற்றும் நீர் முகாமைத்துவ அமைச்சின் செயலாளர் ஜவன் டி சில்வா தெரிவித்துள்ளார்.

நீர்ப்பாசன நீர் முகாமைத்துவ அமைச்சின் செயற்பாடுகள் தொடர்பில் ஊடகவியலாளர்களுக்குத் தெளிவுபடுத்தும் செய்தியாளர் மாநாடு நேற்று முன்தினம் தகவல் ஊடகத் துறை அமைச்சில் நடைபெற்றது.

இம் மாநாட்டில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

40 வருடங்களுக்கு முன்பு இச் செயற்திட்டம் திட்டமிடப்பட்டிருந்த போதும் யுத்தம் காரணமாக இது நடைமுறைப்படுத்தப் படாமற் போயுள்ளது எனத் தெரிவித்த அவர் வட மத்திய மாகாண நீர்ப்பாசனத் திட்டத்தின் மூலம் இரண்டு கட்டங்களாக இத்திட்டம் முன்னெடுக்கப்படவுள்ளது என்றார்.

மேலும் அரசாங்கம் 10 வருட திட்டத்தின் கீழ் 62 பாரிய நீர்ப்பாசனத் திட்டங்களை நடைமுறைப்படுத்தியுள்ளது.

கடந்த காலங்களில் 15 வருடங்களுக்கு நீர்ப்பாசனத் திட்டம் என்ற பேச்சுக்கே இடமில்லை என செயற்பட்ட தலைவர்கள் நாட்டை ஆட்சி செய்தனர்.

இதனால் 15 வருடங்கள் இத்துறை கைவிடப்பட்ட நிலையிலேயே இருந்தது.

தற்போது விவசாயத்தையும் நீர்ப்பாசனத்தையும் அக்கறையுடன் நோக்குகின்ற தலைமைத்துவம் இந்த நாட்டில் உள்ளது. ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் தலைமையிலான அரசாங்கத்திலேயே பாரிய நீர்ப்பாசனத் திட்டங்கள் அனைத்தும் நடைமுறைப்படுத்தப்பட்டு வருகின்றன என்றார். (2)

# இன்று ஒரு தகவல்

## அகத்தூய்மை

''எப்போதும் தூய்மையாக இருப்பது தான் நல்லது'' என்று ஒருவர் சொன்னார்.

''நான் அப்படித்தான் சேர் இருக்கிறேன் ! தினமும் மூன்று வேளை சோப்பு போட்டு குளிக்கின்றேன்'' என்றார் இன்னொருவர்.

''உடல் மட்டும் சுத்தமாக இருந்தால் போதாது சேர்! மனமும் நலமாக இருக்கவேண்டும்'' என்றார்.

''மனதை சுத்தப்படுத்துவதற்கு என்ன சோப் போடலாம்?'' என்று கேட்டார் இவர்.

''ஆன்மீகம்'' என்ற சோப்புதான் அதற்கு பொருத்தமானது. ஆன்மாவை மேம்படுத்துவதற்கு ஒரு முயற்சிதான் ஆன்மீகம்.

அந்த முயற்சியை அடைய என்ன செய்ய வேண்டும்?

மனதினுள் அடைந்துகிடக்கும் வேண்டாத விருந்தாளிகளை வெளியேற்ற வேண்டும். முக்கியம் "பொறாமை" என்றவரை அதிரடியாக வெளியேற்ற வேண்டும்.

இவர் நமது மனதினுள் குடியிருக்கும் வரைக்கும் நிம்மதியாக இருக்கமுடியாது.

ஒரு குருநாதர் இருந்தார். அவரிடம் இரு சீடர்கள் இருந்தார்கள். இந்த இருவரும் ஆரம்பத்தில் ஒருவருக்கொருவர் நல்ல முறையில் தான் பழகிக் கொண்டிருந்தார்கள்.

காலம் கடந்த நிலையில் இந்த இருவரில் ஒருவரது மனதினுள் "பொறாமை" என்ற விருந்தாளி அமர்ந்துகொண்டது.

குருநாதரிடம் தான் நல்ல பெயர் பெறவேண்டும். தன் நண்பன் கெட்ட பெயர் கேட்கவேண்டும் என்றொரு நப்பாசை ஏற்பட்டது.

என்ன செய்யலாம் என யோசித்தான்?

ஒரு நாள் விடியற்காலையிலே எழுந்து நேராக குருவிடம் சென்று அவர் முன்னால் நின்று, "குருவே என்னைப் பாருங்கள். நான் எவ்வளவு விரைவாக எழுந்து குளித்து உங்களது வணக்கத்திற்காக காத்து நிற்கிறேன். ஆனால் இவன் இன்னமும் கண்விழிக்கவில்லை. தூங்கிக் கொண்டே விடியா முகத்துடன் இருக்கின்றான்" என்று கூறினான்.

குருநாதர் நிமிர்ந்து பார்த்து விட்டு கூறினார்.

" அப்படியா?" அப்படியென்றால் நீயும் அவனை மாதிரியே தூங்கியிருந்தால் நன்றாக இருந்திருக்குமே என மிகவும் பொறுமையாகச் சொன்னார்.

"என்ன இது – நான் எவ்வளவு தீவிரமான ஒரு விடயத்தை சொல்கின்றேன். நமது குருநாதர் மிகவும் பொறுமையாக இப்படிச் சொல்கிறாரே" என்று மனதினுள் நினைத்தான்.

ஆச்சரியமாக அவரைப் பார்த்தான். அதற்கு குருநாதர் "ஆமாமப்பா... நீயும் தூங்கிக் கொண்டு இருந்திருந்தால், மற்றவர்களை பற்றி குறை சொல்வதற்கு இங்கே முன்வந்திருக்கமாட்டாய் அதனால் தான் அப்படிச் சொன்னேன்?" என்று கூறினார்.

சீடன் யோசிக்க ஆரம்பித்தான். அப்போதுதான் அர்த்தம் புரிந்தது.

" பொறாமை" என்ற விருந்தாளியை மனதிலே இருந்து விரட்டியடித்தான். இப்போது தனது மனம் சுத்தமாக இருப்பதை உணர்ந்து கொண்டான்.

*தென்கச்சி கோ சுவாமிநாதன்*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ராகுல் எதிர்க்கட்சி தலைவராக வேண்டும்

## திக் விஜய் சிங் வலியுறுத்து



(புதுடில்லி)

பாராளுமன்றத்தில் ராகுல் காந்தி எதிர்க்கட்சி தலைவராக செயற்படவேண்டும் என இளைஞர் காங்கிரசார் நேற்று முன்தினம் வலியுறுத்திய நிலையில் தற்போது அக்கட்சியின் முக்கிய தலைவரான திக் விஜய் சிங்கும் அதே கருத்தை வலியுறுத்தியுள்ளார்.

காங்கிரஸ் கட்சியின் தலைவராக செயற்படப்போகும் ராகுல், நாடாளுமன்ற எதிர்க்கட்சி தலைவர் பதவியையும் ஏற்றுக்கொள்வது தான் பொருத்தமானதாக இருக்கும் என திக் விஜய் சிங் கூறியுள்ளார்.

அக்கட்சியின் சார்பில் யாரை எதிர்க்கட்சி தலைவராக நியமிக்கலாம் என்று தீவிரமாக ஆலோசித்து வரும் நிலையில் திக் விஜய்யின் கருத்து மிக முக்கியமானதாக கருதப்படுகிறது.

# சோமாலியாவில் 2 இலட்சம் குழந்தைகள் உணவின்றி இறக்கும் அபாயம் - யுனிசெவ்

(சோமாலியா)

ஆபிரிக்க நாடான சோமாலியாவுக்கு ஐக்கிய நாடுகள் அமைப்பு வழங்கி வரும் நிதியுதவி குறைக்கப்பட்டுள்ளதால் இந்த ஆண்டில் இரண்டு இலட்சம் குழந்தைகள் இறக்கும் என யுனிசெப் தெரிவித்துள்ளது.

உள்நாட்டு தீவிரவாதம், வறட்சி, வெள்ளம் போன்றவற்றால் தொடர்ச்சியாக பாதிக்கப்பட்டுள்ள சோமாலியாவில் 70 சதவீதம் பெண்கள் மற்றும் குழந்தைகளுக்கு ஐக்கிய நாடுகள் அமைப்பின் ஒரு அங்கமான யுனிசெப் உணவு வழங்கி வருகிறது.

முந்தைய ஆண்டுகள் போல் இல்லாமல் இந்த ஆண்டில் சோமாலியாவுக்கு மிகக் குறைந்த அளவே உணவு மற்றும் மருந்து பொருட்களுக்காக நிதி ஒதுக்கப்பட்டுள்ளதால் இந்த ஆண்டில் தட்டுப்பாடு ஏற்பட்டு மருந்துகள், உணவுப்பொருட்கள் போதுமான அளவில் வழங்க முடியாத நிலை ஏற்பட்டுள்ளது.

இதுவரை 10 சதவீத நிதி தான் அளிக்கப்பட்டுள்ளதால் நிலைமை அங்கே மோசமாக உள்ளது.

இது குறித்து சோமாலியாவில் யுனிசெப் அமைப்பின் செய்தித் தொடர்பாளர் கிறிஸ் டோப் பவுலிரெக் கூறியதாவது.

உடனடியாக போதுமான நிதி கிடைக்காவிட்டால் பச்சிளம் குழந்தைகள், தாய்மார்கள் மற்றும் பெண்களுக்கு மருத்துவ உதவிகள், அத்தியாவசிய சத்துணவுகள் வழங்க முடியாத நிலை ஏற்படும்.



இதனால் இந்த ஆண்டில், இரண்டு இலட்சம் குழந்தைகள் பலியாகக் கூடும்.

ஏற்கனவே, 5 வயதுக்கு குறைந்த 50 ஆயிரம் குழந்தைகள் சத்து குறைபாட்டால் அவதிப்படுகின்றனர்.

வயிற்றுப் போக்கிற்கான மருந்து, நிமோனியா காய்ச்சல் தடுப்பு மருந்து, நோய் எதிர்ப்பு மருந்துகள், ஆறு இலட்சம் குழந்தைகளுக்கு கொடுக்கப்படுகிறது.

நிதி இல்லாததால், அந்த சேவை, எந்நேரத்திலும் நிறுத்தப்படும் அபாயம் ஏற்பட்டுள்ளது.

கர்ப்பிணி பெண்கள், 2.8 இலட்சம் பேருக்கு, பிரசவத்திற்கு முந்தைய மருத்துவ பரிசோதனைகள் செய்யப்படவில்லை.

நிதி குறைப்பால், யுனிசெப் அமைப்பிலும் பணியாளர்கள் பற்றாக்குறை ஏற்பட்டுள்ளது இவ்வாறு அவர் கூறினார்.

# ஈராக்கில் குண்டுவெடிப்பு

## 63 பேர் பலி!



ஈராக் நாட்டில் பல்வேறு பகுதிகளில் வெடிகுண்டுகள் வெடித்ததில் 63 பேர் பலியாகியுள்ளனர்.

ஈராக்கில் பாராளுமன்ற தேர்தல் முடிவுக்கு பின் ஆட்சியமைப்பது தொடர்பான பேச்சுவார்த்தையில் அரசியல் கட்சிகள் தீவிரம் காட்டியுள்ள நிலையில் இந்த தாக்குதல் நடைபெற்றுள்ளது.

கார்களில் வெடிகுண்டுகளை நிரப்பியும், துப்பாக்கி சூடு நடத்தியும், தற்கொலை வெடிகுண்டு தாக்குதலும் நடத்தப்பட்டுள்ளது.

அல்கொய்தா தீவிரவாதிகளின் ஆதிக்கம் நிறைந்த மொசூல், பாக்தாத் சுற்றுப்புற பகுதிகளில் தற்கொலை தீவிரவாதிகள் வெடிகுண்டுகளை நிரப்பிய கார்களை வெடிக்க செய்துள்ளனர்.

இந்த தாக்குதல்களில் 63 பேர் பலியாகியுள்ளனர். பலர் காயம் அடைந்துள்ளனர் என்று தகவல்கள் தெரிவித்துள்ளன.



அமெரிக்காவின் வெள்ளை மாளிகையில் நடந்த அறிவியல் கருத்தரங்கில் கலந்து கொண்ட மாணவ, மாணவிகள் மத்தியில் ஜனாதிபதி ஒபாமா பேசுவதனை படத்தில் காணலாம்.

# தீவிபத்தில் தாயுடன் 5 குழந்தைகள் பலி

பிலிப்பைன்ஸ் நாட்டில் தற்காலிக குடியிருப்பில் வாழ்ந்து வந்த தாயும் அவரது 5 பிள்ளைகளும் தீ விபத்தில் சிக்கி பலியாகியுள்ளனர்.



பிலிப்பைன்ஸ் நாட்டின் மத்திய பகுதியில் கடந்த ஆண்டு ஏற்பட்ட பயங்கர சூறாவளி காற்றில் பல வீடுகள் சேதம் அடைந்தன.

இதில் வீடுகளை இழந்தவர்களுக்காக சான்ஜோஸ் மாவட்டத்தில் டென்ட் சிட்டி என்ற இடத்தில் தற்காலிக குடியிருப்பு அமைக்கப்பட்டது.

இங்கு பலர் கூடாரம் அமைத்து குடியிருந்து வருகிறார்கள்.

இங்குள்ள ஒரு கூடாரத்தில் நேற்று முன்தினம் திடீரென தீவிபத்து ஏற்பட்டது. தீயணைப்பு வீரர்கள் போராடி தீயை அணைத்தனர்.

இருப்பினும் இந்த விபத்தில் ஒரு பெண்ணும், அவரது 5 குழந்தைகளும் உடல் கருகி பரிதாபமாக உயிரிழந்தனர்.

கூடாரத்தில் வைத்திருந்த மண்ணெண்ணெய் விளக்கில் இருந்து தீப்பொறி பட்டு கூடாரத்தில் தீப்பிடித்து எரிந்ததாக மீட்பு குழு அதிகாரி தெரிவித்தார்.

# நைஜீரியாவில் பயங்கரவாத தாக்குதல்

## 33 பேர் உயிரிழப்பு

(கனோ)

நைஜீரியா நாட்டில் பயங்கரவாதிகள் கடந்த புதன்கிழமை நடத்திய தாக்குதலில், 33 பேர் பலியாகினர்.



யோப் மாகாணம் புனியாடி என்னுமிடத்தில் உள்ள இராணுவ சோதனை சாவடி மற்றும் பொலிஸ் நிலையத்தின் மீது கடந்த புதன் கிழமை இந்த தாக்குதல் சம்பவங்கள் நடைபெற்றுள்ளன.

இராணுவ வீரர்கள் போன்று உடையணிந்து கொண்டு வாகனங்களில் வந்த பயங்கரவாதிகள் அங்கிருந்தவர்கள் மீது துப்பாக்கியால் சுட்டனர். இதில் 18 இராணுவத்தினரும், 15 பொலிசாரும் உயிரிழந்தனர்.

அதனைத் தொடர்ந்து அங்குள்ள அரசு அதிகாரிகளின் வீடுகள் உள்ளிட்ட கட்டடங்களுக்கு தீவைத்து விட்டு பயங்கரவாதிகள் தப்பிச் சென்று விட்டனர்.

இந்தத் தாக்குதலை போகோ ஹராம் பயங்கரவாதிகள் நடத்தியிருக்கலாம் என நைஜீரிய அதிகாரிகள் சந்தேகிக்கின்றனர்.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# தேசிய இளைஞர் சேவை மன்ற இளைஞர் தின விழா இன்று

(தனங்கிளப்பு)

தேசிய இளைஞர் சேவை மன்றத்தின் இவ்வாண்டிற்கான இளைஞர் தின விழா இன்று வெள்ளிக்கிழமை பிற்பகல் 2.30 மணிக்கு புத்தூர் சோமஸ்கந்த கல்லூரி மண்டபத்தில் யாழ். மாவட்ட இளைஞர் கழக சம்மேளனத்தின் தலைவர் எஸ்.விஜிதரன் தலைமையில் இடம்பெறும்.

இந் நிகழ்விற்கு பிரதம விருந்தினராக யாழ்.மாவட்ட அரசாங்க அதிபர் சுந்தரம் அருமைநாயகம் கலந்து கொண்டு சிறப்பிக்கவுள்ளார். கௌரவ விருந்தினர்களாக கொழும்பு மகரகம தேசிய இளைஞர் சேவை மன்றத்தின் செயலாளர் சமன்குமாரரண வீரா, தேசிய இளைஞர் சேவை மன்றத்தின் வடமாகாண பணிப்பாளர் சரச்சந்திரபால மற்றும் முன்னாள் பணிப்பாளர் திருமதி சி.விமலேஸ்வரி ஆகியோரும், சிறப்பு விருந்தினர்களாக வலி.கிழக்கு கோப்பாய் பிரதேச செயலர் ம.பிரதீபன் மற்றும் யாழ். தேசிய இளைஞர் சேவை மன்ற உதவிப் பணிப்பாளர் ஐ.தபேந்திரன் ஆகியோர் கலந்து கொண்டு சிறப்பிக்கவுள்ளனர்.

இவ் இளைஞர் தின விழாவில் யாழ்.மாவட்டத்தின் ஒவ்வொரு பிரதேசங்களில் இருந்தும் சிறந்த இளைஞர்கள் தெரிவு செய்யப்பட்டு கௌரவிக்கப்படவுள்ளனர். கடந்த ஆண்டிற்கான முன்னோடி இளைஞர் கழக சம்மேளனங்களாக சாவகச்சேரி, சண்டிலிப்பாய், கரவெட்டி, காரைநகர், உடுவில் ஆகிய பிரதேசங்களில் இருந்து தெரிவு செய்யப்பட்ட சம்மேளன கழகங்களுக்கு விருதுகளும் வழங்கப் படவுள்ளன. (அ-37)

# பிரிவுத்துயர் பகிர்வு



**திருமதி இராசையா செல்லம்மா**

கோப்பாய் காளி கோயிலடியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட இராசையா செல்லம்மா நேற்று முன்தினம் புதன் கிழமை அன்று காலமானார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று முற்பகல் 11 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் இளக்காடு இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும்.



**பத்மநாதன் ரவீந்திரநாத்**

திருநெல்வேலியைப் பிறப்பிடமாகவும் கனடாவை வசிப்பிடமாகவும் கொண்ட பத்மநாதன் ரவீந்திரநாத் (வைத்திய கலாநிதி கடந்த 25 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை அன்று காலமானார். அன்னாரின் இறுதிக் கிரியைகள் நாளை மறுதினம் ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணிக்கு Highland Funeral Home & Cremation Centre-Scarborough Chapel 3280 Sheppard Ave EScarborough,ON M1T 3K3 Canada என்னும் முகவரியில் நடைபெற்று பின்னர் பூதவுடல் தகனம் செய்யப்படும்.



**திருமதி தெய்வேந்திரம் பபி ரஞ்சினி**

யாழ்.அச்சுவேலியைப் பிறப்பிடமாகவும் ஜேர்மனி Haltern ஐ வசிப்பிடமாகவும் கொண்ட தெய்வேந்திரம் பபி ரஞ்சினி கடந்த 26 ஆம் திகதி திங்கட்கிழமை அன்று காலமானார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் நாளை மறுதினம் ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணிக்கு Sunder Friedhof, SundernstraBe 132,45721 Haltern, Germany என்னும் முகவரியில் நடைபெறும்.



**செல்லையா தவராசா (சிற்பஆச்சாரி)**

வவுனியா கோயில் புதுக்குளத்தை பிறப்பிடமாக்வும் மதவுவைத்த குளத்தை வசிப்பிடமாகவும் கொண்ட செல்லையா தவராசா (சிற்ப ஆச்சாரி) கடந்த 27 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை அன்று காலமானார். அன்னாரின் இறுதிக் கிரியைகள் நேற்று வியாழக்கிழமை அன்னாரின் இல்லத்தில் நடைபெற்றது.

# மலேசிய அரசின் செயல் வருத்தமளிக்கின்றது

## ஐ.நா.முகவர் நிறுவனம் கவலை

மலேசியாவிலிருந்து இலங்கைப் புகலிடக் கோரிக்கையாளர்கள் நாடு கடத்தப்பட்டமை குறித்து ஐக்கிய நாடுகள் அமைப்பு கவனம் செலுத்தி வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்பினை மீள ஒருங்கிணைப்பதற்கு முயற்சித்ததாக குற்றம் சுமத்தி மூன்று இலங்கைப் புகலிடக் கோரிக்கையாளர்களை மலேசியா அண்மையில் இலங்கைக்கு நாடு கடத்தியிருந்தது.

பிரசாரப் பணிகளுக்காக குறித்த சந்தேக நபர்கள் நிதி திரட்டியதாகத் தெரிவிக்கப்படுகிறது.

சந்தேக நபர்களை நாடு கடத்தும் பணிகளை காலம் தாமதிக்குமாறு ஐக்கிய நாடுகள் அமைப்பின் அகதிகளுக்கான முகவர் நிறுவனம் மலேசிய அரசாங்கத்திடம் கோரியிருந்தது.

புகலிடக் கோரிக்கையாளர்களின் பாதுகாப்பு குறித்து மதிப்பீடு செய்ய சந்தர்ப்பம் அளிக்காது துரித கதியில் நாடு கடத்தப்பட்டுள்ளதாக முகவர் நிறுவனம் சுட்டிக்காட்டியுள்ளது.

மேலும் மலேசிய அரசாங்கத்தின் இந்த நடவடிக்கை வருத்தமளிக்கும் வகையில் அமைந்துள்ளதாகத் தெரிவித்துள்ளது. (2)

# இனப் பிரச்சினைக்குத் தீர்வு எட்ட நகர்வுகளை மேற்கொள்ளுங்கள்

## அனந்தி மோடிக்கு கடிதம்

(யாழ்ப்பாணம்)

இராணுவ அடக்குமுறைகளுக்கு இலங்கைத் தமிழர்கள் உள்ளனர். இங்கு தொடரும் தமிழர்கள் மீதான வன்முறையை தடுப்பதற்கு இந்திய தேசத்தின் புதிய பிரதமர் நரேந்திர மோடிதமிழர்கள்மீதுகரிசனைகொள்ள வேண்டுமென வடக்கு மாகாண சபை உறுப்பினர் திருமதி அனந்தி சசிதரன் தெரிவித்துள்ளார்.

இந்தியாவின் 15 ஆவது பிரதமராக பதவியேற்றுள்ள நரேந்திர மோடிக்கு அனுப்பிவைத்துள்ள வாழ்த்துச் செய்தியிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

மேலும் வாழ்த்துச் செய்தியில் குறிப்பிடப்பட்டுள்ளதாவது, இந்தியாவிற்கும் இலங்கைத் தமிழ் மக்களுக்குமான உறவு ஒரு தொன்மையான வரலாற்றைக் கொண்டது. இன, மத அடிப்படையிலான இறுக்கமான உறவு நிலவிவந்துள்ளது.

அவ்வகையில் தங்கள் ஆட்சியில் இந்தியாவுக்கும் இலங்கை வாழ் தமிழ் மக்களுக்கும் இடையேயான உறவு மேலும் மேலும் வலுவடையும் என்ற திடமான நம்பிக்கை எமக்கு உண்டு.

எமது நியாயமான உரிமைக் கோரிக்கைகள் வெற்றி பெறவும் எமக்கு இழைக்கப்பட்ட மனிதகுல விரோத நடவடிக்கைகளுக்கு நீதி கிடைக்கவும் தாங்கள் எல்லாவித நடவடிக்கைகளையும் எடுப்பீர்கள் என்பதில் எமக்கு எதுவித சந்தேகமுமில்லை.

இங்கு தமிழ் மக்கள் மீதான ஒடுக்கு முறைகள் தொடர்ந்து கொண்டே உள்ளன. வடக்கு, கிழக்கில் இயல்பு வாழ்க்கை என்பது நிரந்தரமாகவே பறிக்கப்பட்டுவிட்டது.

நாம் தொடர்ந்தும் இராணுவ ஒடுக்கு முறைகளுக்குள்ளேயே வாழ்ந்து வருகின்றோம்.

எமது நிலங்கள் பாதுகாப்பு, அபிவிருத்தி போன்ற காரணங்கள் கூறப்பட்டு பறிக்கப்படுகின்றன.

அங்கு சிங்களவர் குடியேற்றப்படுகின்றனர். கடலில் நாங்கள் சுதந்திரமாகத் தொழில் செய்ய முடியாதவாறு நெருக்கடிகள் ஏற்படுத்தப்பட்டு வருகின்றன.

எமது தொன்மை வாய்ந்த ஆலயங்கள் புனரமைப்பு செய்யப்படுவது கூட இன வாதிகளால் தடுக்கப்படுகிறது. எமது ஆலயங்கள் நாளாந்தம் உடைக்கப்படுகின்றன.

போரில் இறந்த எமது மக்களுக்கு அஞ்சலி செலுத்தவும் கூட நாம் அனுமதிக்கப்படவில்லை.

இப்படியான ஒடுக்குமுறையிலிருந்து எம்மை விடுவிக்க சர்வசேதத்துடன் இணைந்து இந்தியா காத்திரமான பங்கை வகிக்கும் என நாம் எதிர்பார்க்கின்றோம்.

இந்தியாவின் பாதுகாப்பு இலங்கைத் தமிழ் மக்களின் பிரச்சினையை தீர்வு செய்யும் ஒரு நேர்கோட்டில் நிற்பவை என்பதை நாம் சுட்டிக்காட்ட விரும்புகின்றோம்.

எனவே நரேந்திர மோடி அவர்களின் அரசு, இலங்கையில் தேசிய இனப்பிரச்சினைக்கு நிரந்தரமான ஒரு தீர்வை எட்டும் வகையில் நகர்வுகளை மேற்கொள்ள வேண்டும் எனக் கோருகின்றேன் என அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (2-4)

# வாகனங்களின் ஒலியை கட்டுப்படுத்த சட்டம்

(கொழும்பு)

வாகன ஒலியெழுப்பிகளின் மூலம் எழுப்பப்படும் ஒலியை கட்டுப்படுத்த பொலிஸ் போக்குவரத்து பிரிவினர் கடும் நடவடிக்கை எடுக்கவுள்ளதாக பொலிஸ் ஊடகப்பேச்சாளரும் சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகருமான அஜித் ரோஹண தெரிவித்துள்ளார்

ஒலி எழுப்பிகளை விபத்துக்களை தவிர்ப்பதற்காகவும், மற்றொரு வாகனத்தை முந்திச் செல்லும் போது தேவையான இடத்தை பெற்றுக் கொள்வதற்காகவுமே பயன்படுத்த வேண்டும்.

எனினும் அடுத்த பேருந்து வண்டி சாரதிக்கு வணக்கம் சொல்லவும், நலம் விசாரிக்கவும், தரிப்பிடங்களில் பயணிகளை ஏற்றவும் மற்றைய வாகனத்தை விட தன்னிடம் ஒலி எழுப்பக் கூடிய ஒலி எழுப்பிகள் உள்ளது என்பதை காட்டுவதற்காகவே பயன்படுத்துகிறனர்.

மேலும் பல்வேறு விதமான ஒலியை எழுப்பக்கூடிய, விதம் விதமான ஒலி எழுப்பிகளை பயன்படுத்துகிறார்கள்.

இனி அவ்வாறில்லாமல் அங்கீகரிக்கப்பட்ட 105 டெசிபல் அலகைக கொண்டதாக ஒலி எழுப்ப வேண்டும் என்ற சட்டத்துக்கு அமைய நடவடிக்கை எடுக்கப்படும் என அவர் குறிப்பிட்டுள்ளார். (2)

# பொதுக்கூட்டம்

(பருத்தித்துறை)

வடமராட்சி வடக்கு கால்நடை வளர்ப்போர் கூட்டுறவுச் சங்க வருடாந்த பொதுக்கூட்டம் நாளை சனிக்கிழமை காலை 10 மணிக்கு கூட்டுறவுச்சங்க தலைவர் சு.ஜனார்த்தனன் தலைமையில் இடம்பெறவுள்ளது.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ் . கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர் வி.கே.அருந்தவநாதன் கலந்து கொண்டு சிறப்பிக்கவுள்ளார்.

கௌரவ விருந்தினராக வடக்கு மாகாண கால்நடை உற்பத்தி சுகாதாரத்திணைக்கள மாகாணப் பணிப்பாளர் வைத்திய கலாநிதி சி.வசீகரன் கலந்து சிறப்பிக்கவுள்ளார். (2-10)





சுன்னாகம் றோட்டறிக்கழகத்தின் சுருதி 07 நூல்வெளியீட்டு விழா சுன்னாகம் கதிரமலை சிவன் கோவில் மண்டபத்தில் அண்மையில் நடைபெற்றது. இந்நிகழ்வில் நூல்வெளியீடு இடம் பெறுவதையும் கலந்து கொண்டவர்களையும் படங்களில் காணலாம்.

(படங்கள்: மானிப்பாய் செய்தியாளர்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மலேசியாவை சர்வதேச நாடுகள் முன்னுதாரணமாக கொள்ள வேண்டும்

## இராணுவப் பேச்சாளர் வலியுறுத்து

(கொழும்பு)

மலேசியாவை ஏனைய உலக நாடுகள் முன்னுதாரணமாக கொள்ள வேண்டுமென இராணுவம் வலியுறுத்தியுள்ளது.

மலேசியாவைப் போன்றே உலகின் ஏனைய நாடுகளும் பயங்கரவாதத்தை இல்லாதொழிக்க ஒத்துழைப்பு வழங்க வேண்டுமென இராணுவப் பேச்சாளர் நவான் வணிகசூரிய தெரிவித்துள்ளார்.

இவ்விடயம் தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்.

மலேசியாவைப் போன்று ஏனைய நாடுகளும் அர்ப்பணிப்புடன் பயங்கரவாத ஒழிப்பு நடவடிக்கைகளுக்கு ஒத்துழைப்பு வழங்கினால் இந்தப் பூமியிலிருந்து பயங்கரவாதத்தை இல்லாதொழிக்க முடியும். மலேசியாவில் செயற்பட்டு வந்த மூன்று தமிழீழ விடுதலைப்புலி உறுப்பினர்களை கைது செய்தமைக்கு நன்றி பாராட்டுகிறோம்.

தமிழீழ விடுதலைப்புலி உறுப்பினர்களை கைது செய்வதற்கு உலகின் ஏனைய நாடுகளும் ஒத்துழைப்பு வழங்க வேண்டும்.

பயங்கரவாதிகளை இல்லாதொழிப்பதற்கு மலேசியா முதல் தடவை ஒத்துழைப்பு வழங்கவில்லை எனவும், ஏற்கனவே பல தடவைகள் இவ்வாறு ஒத்துழைப்பு வழங்கியுள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

தமிழீழ விடுதலைப் புலிகளின் முன்னாள் சர்வதேச விவகாரப் பொறுப்பாளர் குமரன் பத்மநாதன் எனப்படும் கே.பி.யை கைது செய்ய மலேசியா ஒத்துழைப்பு வழங்கியிருந்தமை குறிப்பிடத்தக்கது. (2)

# அனல்மின் நிலைய பணிகளை தீவிரப்படுத்துமாறு ஜனாதிபதி பணிப்பு

இந்தியாவின் நிதியுதவியுடன் மேற்கொள்ளப்படும் திருகோண மலை சம்பூர் அனல் நிலைய மின்சார திட்டத்தின் பணிகளை தீவிரப்படுத்துமாறு ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ உத்தரவிட்டுள்ளார்.

இந்திய பிரதமர் நரேந்திர மோடியின் சத்தியப்பிரமாண நிகழ்வுக்கு சென்று திரும்பிய நிலையி லேயே ஜனாதிபதி இந்த உத்த ரவை பிறப்பித்துள்ளார்.

தமது 512 மில்லியன் டொலர்கள் நிதியுதவியில் சம்பூரில் அனல் மின்சார திட்டம் ஆரம்பிக்கப்பட வுள்ளதாக இந்தியா கடந்த ஒக் டோபர் மாதத்தில் அறிவித்தது.

எனினும் அந்த பணிகள் உரிய முறையில் நடைமுறைப்படுத்த ப்படவில்லை. இந்நிலையில் இன்று குறித்த அனல் மின்சார திட்டத்தை தீவிரமாக முன்னெடுக்குமாறு ஜனாதிபதி ராஜபக்ஷ, மின் சக்தி எரிபொருள்துறை அமைச்சுக்கு உத்தரவிட்டுள்ளார்.

250 மெகாவோட்ஸ் மின்சார த்தை உற்பத்தி செய்யவுள்ள இந்த அனல் மின்சார நிலையம் 2018 ஆம் ஆண்டளவில் தமது பணி களை ஆரம்பிக்கவுள்ளது. (2)


## 31 ஆம் நாள் நினைவும் வீட்டுக்கிருத்திய அழைப்பும்

அமரர் வைரவி ஆறுமுகம்

(உடுப்பிட்டி லக்ஷ்மி சலூன் உரிமையாளர்)



தோற்றம் 10.01.1942 மறைவு 02.05.2014

கடந்த 02.05.2014 இறைபதம் எய்திய எமது குடும்பத் தலைவர் அமரர் வைரவி ஆறுமுகம் அவர்களின் பிரிவுச் செய்தி அறிந்து உடன் வந்து ஆறுதல் சொல்லியும் அன்னாரின் இறுதிக் கிரியைகளில் கலந்து கொண்டும் சகல வழிகளிலும் ஒத்தாசை புரிந்து அவரின் பிரிவுத் துயரில் பங்கு கொண்டவர்களுக்கும் தொலைபேசி மூலம் ஆறுதல் கூறியவர்களுக்கும் எம் நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றோம். அன்னாரின் அந்தியேட்டி கிரியைகள் 01.06. 2014 ஞாயிற்றுக்கிழமை அதிகாலை 5.00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெறும். அதனைத் தொடர்ந்து நண்பகல் 11.00 மணியளவில் நடைபெறும் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் மதிய போசனத்திலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம். அழைப்பு கிடைக்கப் பெறாதவர்கள் இந்த அழைப்பை தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக் கொள்ளுமாறு வேண்டிக் கொள்கின்றோம்.

வீரப்பதிராயன், கரணவாய் தெற்கு. (சி-7507)

இங்ஙனம் குடும்பத்தினர்.



## சேவை நலன் பாராட்டு



திருமதி நா. விஜயகாந்தன்

BA. (Hons), Dip.in.Edu,M.Phil. SLTS I

எமது பாடசாலையில் சேவையாற்றி 31.05.2014 இல் தனது 27 ஆவது வருட சேவையில் ஓய்வு பெற்றுச் செல்லும் ஆசிரியரை ஓய்வு காலத்தில் தனது குடும்பத்தாருடன் மகிழ்வுடனும் ஆரோக்கியத்துடனும் இன்புற்று வாழ இறைவனை வேண்டி வாழ்த்துகின்றோம். (6511)

வாழ்த்துவோர்: ஆசிரியர் நலன்புரிக் கழகம் யா/கோப்பாய் மகா வித்தியாலயம்.





அன்புளநீர் அகமெல்லாம் பொங்கப் பொங்க அறமெழுந்து பெருஞ் சேவை ஆற்ற ஆற்றத் தொண்டு செய்பல அன்பர் தோன்றத் தோன்றத் தோற்று சுவைச் சோறாக உண்ண உண்ணக் கண்டுவரும் அடியார்கள் ஆர்ப்ப ஆர்ப்ப கடி அமுதசுரபியினாள் ஊட்ட ஊட்ட கொண்டு பசி தீர்த்தவர்கள் கோடி கோடி கோடானு காலமெல்லாம் வாழி வாழி.

## நயினாதீவு- ஸ்ரீ நாகபூஷணி அமுதசுரபி அன்னதான சபை

Regd.No.S.236 ஆரம்பம்-1960 (வரைவுள்ளது)

நயினாதீவு அருள்மிகு ஸ்ரீ நாகபூஷணி அம்பாளின் திருவருளினால் 1960 ஆம் ஆண்டு ஆரம்பிக்கப் பெற்ற நயினாதீவு ஸ்ரீ நாகபூஷணி அமுதசுரபி அன்னதான சபை அமுதசுரபி என்னும் பெயர் தாங்கிய மணிமண்டபத்தின் கண்ணே ஆண்டு தோறும் பல்லாயிரக்கணக்கான அடியார்களுக்கு சிறந்த முறையில் அன்னதானத் தொண்டினைச் செய்து வருகின்றது. இவ்வாண்டுடன் 55 ஆவது ஆண்டில் பிரவேசிப்பதில் மனமகிழ்வெய்துகிறோம்.

அம்பாளின் திருப்பதியிலே நடைபெறும் இத்தொண்டு சிறந்த சேவையெனக் கருதி தருமசீலர்களாகிய வர்த்தகப் பெருமக்கள், விவசாயப் பெருமக்கள், தொழிலாளப் பெருமக்கள் மற்றும் அம்பிகை அடியார்கள் அன்பர்கள் அனைவரும் மனமுவந்து பணம் பொருள் உதவி செய்து வருவதுடன் ஆக்கமும் ஊக்கமும் தந்து அன்னதான சபையின் சேவையைப் பாராட்டியும் வருகின்றனர்.

அம்பாளின் திருவருளால் பணிக்கப் பெற்ற இச்சேவையைச் சிறந்த முறையில் செய்து அல்லும் பகலும் அயராது உழைக்கின்ற சபை நிர்வாகிகளுக்கும், உறுப்பினர்களுக்கும், நற்சேவைத் தொண்டர்களுக்கும். அமுதசுரபி மண்டபத்திற்கு வந்து பணி செய்யும் அடியார்களுக்கும், தத்தம் கடமைகளைத் திறமையாகச் செய்த, செய்கின்ற சேவையாளர்களுக்கும் அன்னதான தொண்டினை நேரடியாகக் கண்டும், கேட்டும் ஆசியுரை வழங்கிய அன்பர்களுக்கும் எல்லாவற்றுக்கும் மேலாக ஆண்டாண்டு தோறும் அன்னதானம் சிறப்பாக நடைபெற பணம் , பொருள் முதலியவற்றை மனமுவந்து உதவி வரும் தர்ம சீலர்களுக்கும் எல்லாம் வல்ல ஸ்ரீ நாகபூஷணி அம்பாளின் திருவருள் கிடைக்கும் வண்ணம் பிரார்த்தித்துச் சபையின் மனமுவந்த, பணிவார்ந்த வணக்கத்தை தெரிவித்துக் கொள்கின்றோம்.

ஜய ஆண்டு ஆனி 14 ஆம் நாள் 28.06.2014 சனிக்கிழமை அம்பாளின் மஹோற்சவம் கொடியேற்றத் திருவிழாவுடன் ஆரம்பமாகி ஆனித்திங்கள் 23 ஆம் நாள் 07.07.2014 திங்கட்கிழமை மஞ்சத் திருவிழாவும் ஆனித்திங்கள் 26 ஆம் நாள் 10.07.2014 வியாழக்கிழமை சப்பறத்திருவிழாவும் ஆனித்திங்கள் 27 ஆம் நாள் 11.07.2014 வெள்ளிக் கிழமை தேர்த்திருவிழாவும் ஆனித்திங்கள் 28 ஆம் நாள் 12.07.2014 சனிக்கிழமை தீர்த்தத் திருவிழாவும் ஆனித்திங்கள் 29 ஆம் நாள் 13.07.2014 ஞாயிற்றுக்கிழமை தெப்பத் திருவிழாவும் நடைபெற இருப்பதால் அம்பாளைத் தரிசிக்க வரும் அடியார்களுக்குச் சிறந்த முறையில் பதினாறு (16) நாட்களும் இரவும் பகலும் அன்னதானம் வழங்கச் சபை தீர்மானம் செய்துள்ளது. ஆகவே தருமசீலர்களாகிய தங்களிடம் அன்னதான சபையால் நியமிக்கப்பட்ட தொண்டர்கள் வருவார்கள் அவர்களிடம் வழமைபோல் நீங்கள் உதவும் பணம், பொருள் முதலியவற்றைக் கொடுத்துச் சபையின் பற்றுச் சீட்டைப் பெற்றுக் கொள்ளும் படி கேட்டுக் கொள்ளுகின்றோம்.

நேரடியாகப் பணம் கொடுக்க விரும்புவோர் Amuthasurabhi, Commercial Bank, கண. இல. 1247985001 Peoples Park கட்டடம்; Pettah, அல்லது B.O.C இற்கு இல. 7687836, ஊர்காவற்றுறை கிளை வேலணை என்னும் விலாசத்திற்கு அனுப்பும் படி தாழ்மையுடன் கேட்டுக் கொள்கின்றோம். பணம், பொருள் என்பவற்றை வழங்குவதாயின் *திரு. சி.சிவகுமார், வெற்றிலை மார்க்கட், யாழ்ப்பாணம்* என்ற முகவரியிலும் ஒப்படைக்கலாம் என்பதையும் தெரிவிக்கின்றோம். *திருநெல்வேலி தேனு களஞ்சியத் (மாற்கற் உட்புறம்)* திலும் பொருள் பணம் வழங்கலாம் என்பதனையும் அறியத்தருகின்றோம்.

அம்பிகையின் திருப்பதியிலே அடியார்கள் தங்கி நின்று தரிசிப்பதற்கான நவீன வசதிகளுடன் கூடிய அமுதசுரபி அன்னபூரணி இறைபயணிகள் இல்லம் அமைக்கப்பெற்றுள்ளதென்பதை மன மகிழ்வுடன் அறியத் தருகின்றோம்.

அமுதசுரபி மண்டபம்
நயினாதீவு -02.
தொ.பே.021 3213575

ம.அம்பிகைபாகன்
செயலாளர்

"மண்ணிற் பிறந்தார் பெறும் பயன் மதிசூடும் அண்ணலார் அடியார்தமை அமுது செய்வித்தல்"

(சி-7008)


Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

கால் ஒரு பாவி கழுத்தொரு மாபாவி
கோலி இழுக்க கொடும்பாவி வெட்டினானோ!
சோமசுந்தரப் புலவர்

வலம்புரி
T.P : 021 567 1530
website : www.valampurii.lk

## வேள்வி நடத்தும் பக்தர்களே! நாம் மாமிசம் புசிப்பதில்லை

வேள்வி நடத்தும் எமது அருமைப் பக்தர்களுக்கு இக் கடிதத்தின் கீழ் கையொப்பம் இடும் வைரவர், காளி, வீரபத்திரர், ஐயனார் ஆகியோர் கூட்டாக இணைந்து எழுதும் அன்பு மடல் இது.

முதலில் உங்களின் பக்திக்கும் தாளாத அன்புக்கும் எங்கள் நன்றிகள் உரித்தாகட்டும்.

உங்கள் அன்பின் வெளிப்பாடுகண்டு நாம் அகமகிழ்ந்தாலும் எங்கள் பெயரால் நீங்கள் வெட்டுகின்ற கடாக்களும் சேவல்களும் படுகின்ற வேதனை கண்டு, நாங்கள் கண்ணீர் விடாத நாளில்லை.

நீங்கள் அன்பாக வளர்த்த கடாக்களின் கழுத்தை வாளால் வெட்டும்போது, உங்களில் ஒருவரை வெட்டுவதுபோல நீங்கள் உணரவில்லையா?

அதோ எங்கள் முன் நீங்கள் வெட்டிச் சரித்த ஆட்டுக் கடா மலைபோல வீழ்ந்து கிடக்கிறது. ஒருகணம் அதன் வாழ்வை நினைத்துப் பாருங்கள்.

ஆட்டுக் குட்டியாக அது துள்ளித் திரிந்தபோது நீங்கள் அதனைக் கட்டி அணைத்துத் தூக்கி முத்தமிட்ட அந்த அன்பு இருக்கிறதே அது எல்லை கடந்த இன்பமயமானது.

நீங்கள் ஆட்டுக்குட்டி மீது காட்டிய பாசத்தின்போது உங்கள் மீது நாங்கள் காட்டிய கருணையே கருணை.

இத்துணை செல்லமாக பெயர் சூட்டி வளர்த்த ஆட்டுக் கடாவை ஏன்தான் ஒரு வெட்டில் வீழ்த்துகிறீர்கள்?

அன்புக்குரிய பக்தர்களே! நீங்கள் சைவ சமயத்தவர்கள். சைவம் என்றால் என்ன? சைவத்தின் எதிர்க்கருத்து அசைவம். இந்த உலகில் சமயங்களுக்கு எதிர்ப்பொருள் உண்டா? கிறிஸ்தவத்துக்கு, பௌத்தத்திற்கு, இஸ்லாமியத்திற்கு என எந்தவொரு சமயத்திற்குமே எதிர்ச் சொல் கிடையாது. ஆனால் சைவத்திற்கு மட்டுமே அசைவம் என்ற எதிர்ப்பொருள் உண்டு.

அப்படியானால் மாமிசம் புசிக்காத, கொலைகள் புரியாத, மற்றுயிர்க்குத் தீங்கு இழைக்காத தன்மையே சைவமாகும். ஆக, மாமிசம் புசிக்கின்ற எவரும் சைவசமயியாகமாட்டார்கள்.

நிலைமை இதுவாக இருக்கையில், நேர்த்திக் கடன் என்ற பெயரில் நடத்தப்படும் வேள்வியில் ஆயிரக்கணக்கான கடாக்களை வெட்டிச் சரித்து எங்களுக்குப் படைப்பது மகா பாவச் செயல்.

அறியாமை காரணமாகவும் எங்கள் மீது நீங்கள் கொண்ட அளவு கடந்த பக்தி காரணமாகவும் நீங்கள் இத்தவறைத் தொடர்ந்து செய்கிறீர்கள். இது உடனடியாக நிறுத்தப்பட வேண்டும்.

ஆடு வளர்ப்பு உங்கள் பொருளாதாரத்தில் முக்கிய பங்கு வகிக்கக்கூடிய ஒரு தொழில் முயற்சி. வேள்வி என்ற பெயரால் ஒரு சில மணித்தியாலங்களில் நல்லினக் கடாக்களை வெட்டிச் சரிப்பதானது உங்கள் தொழில் முயற்சியை வெட்டிச்சரிப்பது போன்றது.

எனவே நாங்கள் மாமிசம் உண்ணாத காத்தல் கடவுளர்கள். உங்கள் அன்பு ஒன்றே போதும். எங்கள் காவலும் கருணையும் உங்கள் மீது என்றும் நிலைக்கும்.

ஆகையால் எமதருமைப் பக்தர்களே! வேள்வியில் மிருகபலி வேண்டவே வேண்டாம் எனக் கேட்டுக் கொள்கிறோம்.

அன்பே சிவம்

# இளைய தலைமுறையினரிடமிருந்து புகைத்தல் பழக்கத்தை ஒழிப்போம்

## சைவமகாசபை வலியுறுத்து

(யாழ்ப்பாணம்)

மது மற்றும் போதைப்பொருள் ஒழிப்பு மையத்தினால் மேற்கொள்ளப்பட்ட ஆய்வின் அடிப்படையில் புகைத்தலில் முதலிடத்திலுள்ள யாழ்ப்பாண மாவட்டத்தில் விழிப்புணர்வு நடவடிக்கை தொடர்ச்சியாக மேற்கொள்ளப்படுவது அத்தியாவசியமானது என இலங்கை சைவ மகா சபை வலியுறுத்தியுள்ளது.

உலகளாவிய ரீதியில் புகைத்தல் எதிர்ப்பு தினம் நாளை அனுஷ்டிக்கப்படவுள்ளது.

இந்நிலையில் குறித்த சபை வெளியிட்டுள்ள செய்திக் குறிப்பில் கூறப்பட்டுள்ள விடயங்கள் வருமாறு,

இளைய தலைமுறையினரின் எதிர்காலத்தை நாசமாக்கும் புகைத்தல் கொடிய பழக்கத்தை இல்லாது ஒழிப்பதில் எமது சபையின் இளையோர் அமைப்பான சிவ தொண்டர் அமைப்பு பல்வேறு நடவடிக்கைகளை அரச திணைக்களங்கள், பாடசாலைகள், தொண்டு நிறுவனங்களுடன் இணைந்து மேற்கொண்டு வருகின்றது.

அந்த ரீதியில் வட மாகாண கல்வித் திணைக்களத்துடன் இணைந்து இன்று வெள்ளிக்கிழமை பாடசாலைகளில் காலைப் பிரார்த்தனைகளில் பாடசாலை சிவ தொண்டர் அணிகளினால் புகைத்தல் விழிப்புணர்வு கருத்துரைகள் வழங்கப்படவுள்ளன.

மேலும் இன்று வட மாகாண வியாபார நிறுவனங்களில் புகைத்தல் தொடர்பான பொருட்களை விற்பனை செய்யாமல் நிறுத்தி விழிப்புணர்வு நடவடிக்கைக்கு வலுச் சேர்க்குமாறு வேண்டுகின்றோம்.

சாவகச்சேரி, தெல்லிப்பழை, கரவெட்டி போன்ற பிரதேசங்களில் ஏற்கெனவே நடைமுறைப்படுத்தப்படும் இச் செயற்பாடு ஏனைய பிரதேசங்களிலும் தொடர்ச்சியாக மேற்கொள்ளப்படின் சிறந்த சமூக நோக்குள்ள நடவடிக்கையாகவும் சைவசமயத்தின் ஒழுக்க விழுமியங்கள் உன்னதப் பண்பாகவும் அமையும்.

உண்மையான சமயநெறியை பின்பற்ற முயற்சிக்குமாறு புகைத்தலின் கொடிய பிடிக்குள் அகப்பட்டிருப் போரை வேண்டி நிற்கின்றோம். அதற்கு ஒரு நல்ல ஆரம்பமாக குறைந்த பட்சம் வெள்ளிக்கிழமைகளில் புகைத்தலை நிறுத்தி தாய், தந்தையருக்கோ, மனைவி, பிள்ளைகளுக்கோ அப் பணத்தில் பழங்களை வாங்கி பகிர்ந்துண்டு உங்கள் ஆரோக்கியத்தை மேம்படுத்துமாறும் நாளடைவில் படிப்படியாக தியானம், யோகாசனம் போன்ற வழி முறைகளைக் கடைப்பிடித்து உங்கள் உடல் நலத்திற்கும் உங்களைச்சார்ந்த குடும்பத்தார், தொழில் புரியும் இடத்திலுள்ளோர், கருவிலுள்ள குழந்தைகள் என சூழலிலுள்ள சகலருக்கும் பாரிய கேடுகளை உண்டுபண்ணும் இப் பழக்கத்தை முற்றாக கைவிடுமாறு வேண்டுகின்றோம்.

இளைய சகோதரர்களிடம் கேட்பது யாதெனில், உங்கள் மதியையும் விதியையும் தலைகீழாக மாற்றியமைக்கக்கூடிய கொடிய பழக்கத்திற்கு ஆளாகாது உங்களை தற்காத்து கொள்ள உறுதி பூணுமாறும் உங்கள் நண்பர்களை இப்பழக்கத்திற்கு ஆளாக்க முயற்சித்தால் முளையிலே தடுத்து நிறுத்தும் முயற்சிகளில் ஈடுபடுமாறும் வேண்டிநிற்கின்றோம்.

இச்சந்தர்ப்பத்தில் எமது ஆரோக்கியம், ஒழுக்கம், பண்பாடு யாவற்றையும் சிதைக்கின்ற போதைப்பொருள் பழக்கத்தை எமது கலாசார பிடியிலிருந்து அடியோடு சாய்க்க நாம் அனைவரும் உறுதிபூணுவோம் என அதில் குறிப்பிடப்பட்டுள்ளது. (2)

# மின்சாரம் தடைப்படும்

உயர் அழுத்த தாழ் அழுத்த மின் விநியோக மார்க்கங்களின் இணைப்பு மற்றும் பராமரிப்பு வேலைகளுக்காக நாளை சனிக்கிழமை காலை 8.30 மணியிலிருந்து மாலை 5.30 மணிவரை குடத்தனை, நடுக்குடத்தனை, பொற்பதி, குடத்தனை வடக்கு கடற்கரைப் பகுதி, மணற்காடு சந்தி, மணற்காடு வடக்கு, அம்பன், நுணாவில், வேம்பிராய் மட்டுவில், மந்துவில், சரசாலை, இராஜ வீதி, நிலாவரை, சிறுப்பிட்டி மேற்கு, நவக்கிரி, புத்தூர், எல்லாளன் வாசிகசாலையடி, வீரவாணி, ஊறணி, ஆவரங்கால்;

அச்சுவேலி, இடைக்காடு, செல்வ நாயகபுரம், வாதரவத்தை, பொக்கணை, சந்நிதி வீதி, தோப்பு, கைத்தொழில்பேட்டை, குட்டியப்புலம், சுதந்திரபுரம், சுன்னாகம் சிவன் கோவிலடி, சூராவத்தை, மலப்பை, மயிலணி, மயிலங்காடு, ஏழாலை, குப்பிளான், கட்டுவன், காங்கேசன்துறை உயர் பாதுகாப்பு வலயம் ஆகிய இடங்களிலும்

நாளை மறுதினம் ஞாயிற்றுக் கிழமை காலை 8.30 மணியிலிருந்து மாலை 5.30 மணிவரை பாற்பண்ணை, முடமாவடி, திருநெல்வேலி, மருத்துவ பீட பிரதேசம், கொக்குவில், பொற்பதி வீதி, ஆடியபாதம் வீதி, புளூ வீதி ஆகிய இடங்களிலும்

எதிர்வரும் 5ஆம் திகதி வியாழக் கிழமை காலை 8.30 மணியிலிருந்து மாலை 5.30 மணிவரை நெடுந்தீவு பிரதேசத்தின் சில பகுதிகளிலும் மின்சாரம் தடைப்பட்டிருக்கும் என யாழ்.பிரதேச மின் பொறியியலாளர் அறிவித்துள்ளார். (எ-11)

# மன்னிப்புக் கோரும் ஜேவிபி

1989-ம், 90-ம்ஆண்டுகளின்வன்முறை காலத்தில் ஜே.வி.பியினால் மேற்கொள்ளப்பட்ட 6 ஆயிரத்திற்கும் அதிகமான கொலைகளுக்காக மக்களிடம் மன்னிப்பு கோருவதாக அதன் தலைவர் அனுர குமார திஸாநாயக்க தெரிவித்துள்ளார்.

லண்டனில் பி.பி.சி சிங்கள சேவைக்கு வழங்கிய செவ்வியின்போதே அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

1983ஆம் ஆண்டு ஆட்சியில் இருந்த ஐக்கிய தேசியக் கட்சியின் அரசு ஜே.வி.பியை தடை செய்ததன் பின்னர், ஆயுதம் ஏந்தும்வரை சம்பவங்கள் அதிகரித்தன.

ஜே.வி.பியினால் மேற்கொள்ளப்பட்ட கொலை தொடர்பில் சம்பந்தப்பட்ட குடும்பங்களிடம் எமது துக்கத்தையும் கவலையும் தெரிவித்து கொள்கிறது.


1989-ம், 90-ம் ஆண்டுகளில் கொல்லப்பட்ட ஜே.வி.பியின் உறுப்பினர்கள் தொடர்பில் சர்வதேசம் கூட விசாரணைகளை கேட்கவில்லை. யாரிடம் விசாரணைகளை நடத்துமாறு கோருவது?

கொலைகளுடன் சம்பந்தப்பட்டவர்களிடம் கொலை செய்தவர்களிடம விசாரணைகளை கோரும் அளவிற்கு நாம் அறிவீனமுடையவர்கள் அல்ல.

கொலைகளுடன் யார் சம்பந்தப்பட்டுள்ளனர். யார் பொறுப்புக் கூற வேண்டும் என்பது எமக்கு தெளிவாக தெரியும்.

இந்த குற்றங்கள் தொடர்பில் என்றாவது ஒருநாள் மக்கள் தீர்ப்பாயம் அமைக்கப்பட வேண்டும் எனவும் அது கட்டாயமானது எனவும் அனுரகுமார திஸாநாயக்க தெரிவித்துள்ளார். (எ-11)

## மொழி பெயர்ப்பாளராக நியமிக்கப்பட்டுள்ளார்



(பருத்தித்துறை)

வடமராட்சி புலோலி மேற்கைச் சேர்ந்த லயன். எம். தர்மலிங்கம் நீதி அமைச்சினால் தமிழ்-ஆங்கிலம் மொழி பெயர்ப்பாளராக நியமனம் செய்யப்பட்டுள்ளார்.

இவர் அண்மையில் நீதி அமைச்சினால் நடத்தப்பட்ட எழுத்துமூல மொழி பெயர்ப்பாளர் பரீட்சைக்குத் தோற்றி சிறப்பு தேர்ச்சி பெற்றுள்ளார்.

கடந்த 1-ம் திகதி பருத்தித்துறை மாவட்ட நீதிபதி ஜே.கஜநிதிபாலன் முன்னிலையில் சத்தியப்பிரமாணம் செய்துள்ளார். (அ-10)

## விழிப்புணர்வு ஒத்திகை

வேலணைப் பிரதேச செயலக பிரிவில் மண்டைதீவு தெற்கு ஜே/09 கிராம உத்தியோகத்தர் பிரிவில் மட்டும் இன்று வெள்ளிக்கிழமை பிற்பகல் 3.00 மணிக்கு அனர்த்த முகாமைத்துவ மத்திய நிலையத்தின் வேண்டுகோளிற்கிணங்க முன்னெச்சரிக்கை விழிப்புணர்வும்ஒத்திகைப்பயிற்சிச்செயற்பாடுகளும் மேற்கொள்ளப்படும்.

இது தொடர்பில் பொதுமக்கள் அமைதியாக இருக்குமாறும் இது ஒரு ஒத்திகைச் செயற்பாடு என்பதால் எவரும் குழப்பமடையத் தேவையில்லை எனவும் பொதுமக்களுக்கு அறியத் தரப்படுகிறது என யாழ். அரச அதிபர் சு.அருமைநாயகம் அறிவித்துள்ளார். (செ)

## 14 இலட்சம் ரூபா நகைகள் திருட்டு

மட்டக்களப்பிலிருந்து வவுனியாவிற்கு பேருந்தில் வந்த பெண்ணிடம் 14 லட்சம் ரூபா பெறுமதியான நகைகள் களவாடப்பட்டுள்ளதாக வவுனியா பொலிஸார் தெரிவித்துள்ளனர். இச்சம்பவம் நேற்று முன்தினம் இடம்பெற்றுள்ளது.

சம்பவம் தொடர்பில் மேலும் தெரிய வருவதாவது, வவுனியா கோவில் குளத்தைச்சேர்ந்த குறித்த பெண் மட்டக்களப்பிற்கு உறவினரின் திருமணத்திற்காக சென்று பேருந்தில் வீடு திரும்பியுள்ளார்.

அவ்வேளையில் அவரது கைப்பையினுள்ளிருந்த 14 இலட்சம் ரூபா பெறுமதியான நகைகள் பேருந்தில் களவாடப்பட்டுள்ளதாக வவுனியா பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது. (9-250)

### அமைதியின் சொற்கள்

எல்லையில்லா பொருளிற்கு, யாரிற்கும் எந்தவித எல்லையும் கிடையாது. படித்தவனோ, படிக்காதவனோ, ஏழையோ, பணக்காரனோ, இளைஞனோ, வயதானவனோ யாரிற்கும் எந்த எல்லையும் கிடையாது. அதுதான் உண்மையான ஆனந்தம். அது எல்லோர் இதயத்திலும் இருக்கின்றது. அதற்கு தொடக்கமோ, முடிவோ கிடையாது. அது எல்லையில்லாதது. ஆனந்தத்தின் பண்டகசாலை.

*(பிரேம் ராவத்)*

### இஸ்லாம் ஆன்மீக சிந்தனை


#### மாசற்ற மனிதநேயம்

நபிகள் நாயகம் (ஸல்) நவின்றார்கள்: "எல்லா மக்களும் இறைவன் படைப்புக்களே! அவர்களுக்கிடையில் எக்காரணம் கொண்டும் வேற்றுமை காட்டாமல் அனைவருக்கும் நன்மையே செய்யுங்கள். தனது படைப்புக்களில் இறைவனுக்கு மிகவும் பிரியமானவர்கள் அவன் படைப்புக்ளுக்கு நன்மை செய்யும் நன் மக்களே!" (நூல்: பைஹகீ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஜே.பி.எல் கிரிக்கெட் சுற்றுப்போட்டி

## பற்றீசியன் வெற்றி




பற்றீசியன் விளையாட்டுக்கழக அணிக்கும் யங்ஸ்ரார்ஸ் விளையாட்டுக்கழக அணிக்கும் இடையில் இடம்பெற்ற கிரிக்கெட் போட்டியில் பற்றீசியன் அணி 28 ஓட்டங்களால் இலகுவாக வெற்றிபெற்றது.

ஜே.பி.எல் பருவகாலம் 2 இற்கான பேட்டிகள் இடம் பெற்று வருகின்றன.

இதில் இடம்பெற்ற போட்டியிலேயே பற்றீசியன் அணி இலகுவாக வெற்றிபெற்றது.

நாணயச் சுழற்சியில் வென்று முதலில் துடுப்பெடுத்தாடிய பற்றீசியன் அணி 19.4 பந்துபரிமாற்றங்களில் 166 ஓட்டங்களுக்குச் சகல இலக்குகளையும் இழந்தது.

துடுப்பாட்டத்தில் பற்றீசியன்ஸ் அணி சார்பாக என்.அஜித்டர்வின் 40 ஓட்டங்களையும் நவதீபன் 22 ஓட்டங்களையும் லிவிங்டன் 20 ஓட்டங்களையும் பெற்றுக்கொடுத்தார்.

பந்துவீச்சில் யங்ஸ்ரார்ஸ் அணி சார்பாக ரி.குமுதன், எஸ்.சயந்தன் ஆகியோர் 25 ஓட்டங்களுக்கு தலா 2 இலக்குகளையும் என்.முகுந்தன் 38 ஓட்டங்களுக்கு 2 இலக்குகளையும் கே.கமலக்ஸன் 26 ஓட்டங்களுக்கு 2 இலக்குகளையும் கைப்பற்றினார்கள்.

167 ஓட்டங்களை வெற்றியிலக்காகக் கொண்டு பதிலுக்குத் துடுப்பெடுத்தாடக் களமிறங்கிய யங்ஸ்ரார்ஸ் அணி, 17.3 பந்துபரிமாற்றங்களில் 138 ஓட்டங்களுக்குச் சகல இலக்குகளையும் இழந்து தோல்வியடைந்தது. இதில் றொபேர்றிசான் 40 ஓட்டங்களை பெற்றுக்கொடுத்தார்.

பந்துவீச்சில் பற்றீசியன் அணி சார்பாக எஸ்.நோபேர்ட் 33 ஓட்டங்களுக்கு 4 இலக்குகளையும் என்.கிளின்டன், எஸ்.லிவிங்டன் ஆகியோர் 17 ஓட்டங்களுக்கு தலா 2 இலக்குகளையும் கைப்பற்றினார்கள்.

இப்போட்டியின் ஆட்டநாயகனாக பற்றீசியன் அணியின் என்.அஜித்டர்வின் தெரிவு செய்யப்பட்டார். (கு-23)

## ஸ்கந்தா ஸ்ரார்ஸ் வெற்றி




ஜே.பி.எல் பருவகாலம் 2 இற்கான போட்டிகள் இடம் பெற்று வருகின்றன. இதில் கடந்த ஞாயிற்றுக்கிழமை இடம்பெற்ற போட்டியில் KCCC விளையாட்டுக் கழக அணியை சுன்னாகம் ஸ்கந்தாஸ்டார் விளையாட்டுக் கழக அணி போராடி வெற்றி கொண்டது.

நாணயற்சுழற்சியில் வென்ற சுன்னாகம் ஸ்கந்தாஸ்டார் விளையாட்டுக் கழக அணி முதலில் துடுப்பெடுத்தாடத் தீர்மானித்தது.

இதன் படி முதலில் துடுப்பாடிய KCCC விளையாட்டுக் கழக அணி சுன்னாகம் ஸ்கந்தாஸ்டார் விளையாட்டுக் கழக அணியின் ஜனக்ஷனின் பந்துவீச்சை எதிர்கொள்ள முடியாது தடுமாறி 20 ஓவர்களில் சகல இலக்குகளையும் இழந்தது 100 ஓட்டங்களையே பெற்றது. இதில் பங்குஜன் 28, ஜனுதாஷ் 12, சிலோஜன் 12 ஓட்டங்களைப் பெற்றனர். உதிரிகளாக 18 ஓட்டங்கள் கிடைத்தன. ஏனைய எவரும் இரட்டை இலக்கத்தைக் கூட எட்டவில்லை.

பந்துவீச்சில் சுன்னாகம் ஸ்கந்தாஸ்டார் சார்பில் ஜனக்ஷன் 8 ஓட்டங்களுக்கு 4 இலக்குகளையும், விஷ்ணுப் பிரகாஷ் 14 ஓட்டங்களுக்கு 2 இலக்குகளையும், துபிஷன் 13 ஓட்டங்களுக்கு 2 இலக்குகளையும் கைப்பற்றினர்.

பதிலுக்கு 101 என்னும் வெற்றி இலக்கோடு துடுப்பாடிய சுன்னாகம் ஸ்கந்தாஸ்டார் விளையாட்டுக் கழக அணி இறுதிப் பந்தில் 9 இலக்குகளை இழந்து வெற்றி இலக்கை அடைந்தது. இதில் பென்ஜோய் மற்றும் துபீஷன் தலா 12 ஓட்டங்களையும், சிந்துஜன் 10 ஓட்டங்களைப் பெற்றனர். உதிரிகளாக 15 ஓட்டங்கள் கிடைத்தன.

பந்துவீச்சில் KCCC விளையாட்டுக் கழக அணி சார்பில் ராகுலன் 13 ஓட்டங்களுக்கு 4 இலக்குகளையும், சாம்பவன் 2 இலக்குகளையும், கைப்பற்றினர். போட்டியின் ஆட்ட நாயகன்ாக 4 ஓவர்கள் வீசி 8 ஓட்டங்களுக்கு 4 இலக்குகளை கைப்பற்றிய சுன்னாகம் ஸ்கந்தாஸ்டார் விளையாட்டுக் கழக அணியின் ஜனக்ஷன் தெரிவானார். (கு-23)

## சென்றலைட்ஸ் வெற்றி



ஜே.பி.எல் பருவகாலம் 2 இற்கான போட்டிகள் இடம் பெற்று வருகின்றன.

இதில் கடந்த ஞாயிற்றுக்கிழமை இடம்பெற்ற போட்டியில் ஜொனியன்ஸ் விளையாட்டுக் கழக அணியை சென்றலைட்ஸ் விளையாட்டுக் கழக அணி இலகுவாக வெற்றி கொண்டது.

நாணயற்சுழற்சியில் வென்ற ஜொனியன்ஸ் விளையாட்டுக் கழக அணி முதலில் துடுப்பெடுத்தாடத் தீர்மானித்தது.

இதன் படி முதலில் துடுப்பாடிய ஜொனியன்ஸ் விளையாட்டுக் கழக அணி 20 ஓவர்கலில் சென்றலைட்ஸ் விளையாட்டுக் கழக அணியின் பந்துவீச்சை எதிர்கொள்ள முடியாது தடுமாறி 8 இலக்குகளை இழந்து 108 ஓட்டங்களைப் பெற்றது.

இதில் அன்புஜன் 41, ல்வேந்திரா மற்றும் அஹிலன் தலா 11 ஓட்டங்களைப் பெற்றனர். ஏனைய எவரும் இரட்டை இலக்கத்தைக் எட்டவில்லை.

பந்துவீச்சில் சென்றலைட்ஸ் அணியின் கிஷாந்தன் 10 ஓட்டங்களுக்கு 3 இலக்குகளையும். வதுஷனன் மற்றும் ஜெரிக்துஷாந் தலா 1 இலக்கையும் கைப்பற்றினர்.

பதிலுக்கு 109 என்றும் வெற்றி இலக்கோடு துடுப்பாடிய சென்றலைட்ஸ் விளையாட்டுக் கழக அணி வதுஷனனின் அதிரடி கைகொடுக்க 11.2 ஓவர்களில் 2 இலக்குகளை மாத்திரம் இழந்து வெற்றி இலக்கை அடைந்தது.

இதில் வதுஷனன் 54, ஜெரிக்துஷாந் மற்றும் ஜேம்ஸ் தலா 12 ஓட்டங்களைப் பெற்றனர்.

பந்துவீச்சில் ஜொனியன்ஸ் விளையாட்டுக் கழக அணி சார்பில் அகிலன் 37 ஓட்டங்களுக்கு 2 இலக்குகளை கைப்பற்றினர்.

போட்டியின் ஆட்ட நாயகனாக அதிரடியாக துடுப்பாடி அரைச்சதம் பெற்ற சென்றலைட்ஸ் விளையாட்டுக் கழக அணியின் வதுஷனன் தெரிவானார். (கு-23)

## சென்.ஜோன்ஸ், யூனியன் கிரிக்கெட்
# சமநிலையில் முடிவு



இலங்கைத் துடுப்பாட்டச் சங்கத்தின் ஏற்பாட்டில் 15 வயதுப்பிரிவு துடுப்பாட்ட அணிகளுக்கிடையில் நடைபெற்று வரும் 50 பந்துபரிமாற்றங்கள் கொண்ட மட்டுப்படுத்தப்பட்ட துடுப்பாட்ட போட்டியில் தெல்லிப்பழை யூனியன் கல்லூரியும் சென்ஜோன்ஸ் கல்லூரி அணிக்கும் இடையிலான போட்டி சமநிலையில் முடிவடைந்தது.

இந்த போட்டி கடந்த திங்கட்கிழமை சென். ஜோன்ஸ் கல்லூரி மைதானத்தில் இடம்பெற்றது.

நாணயச் சுழற்சியில் வென்று முதலில் துடுப்பெடுத்தாடிய சென்.ஜோன்ஸ் அணி 43.2 பந்துபரிமாற்றங்களில் 159 ஓட்டங்களுக்குச் சகல இலக்குகளையும் இழந்தது.

துடுப்பாட்டத்தில் எஸ்.றெமிங்ரன் 31, என்.மதீசன் 30 ஓட்டங்களையும் பெற்றுக் கொடுத்ததுடன், உதிரிகளாக 38 ஓட்டங்கள் கிடைத்தன.

பந்துவீச்சில் யூனியன் கல்லூரி அணி சார்பாக, என்.பிரகாஸ் 3, எம்.பமிங்ரன், என்.தேனுஜன், எல்.லவன்ராஜ் ஆகியோர் தலா 2 இலக்குகளைக் கைப்பற்றினார்கள்.

160 என்ற வெற்றிலக்குடன் பதிலுக்குத் துடுப்பெடுத்தாடக் களமிறங்கிய யூனியன் கல்லூரி அணி, 48.2 பந்துபரிமாற்றங்களில் 159 ஓட்டங்களுக்குள் அனைத்து இலக்குகளையும் இழந்தது.

இதனால் போட்டி சமநிலையில் முடிவடைந்தது.

துடுப்பாட்டத்தில் என்.தேனுஜன் 25, எஸ்.மதீசன் 22 ஓட்டங்களைப் பெற்றுக்கொடுத்ததுடன், உதிரிகளாக 77 ஓட்டங்கள் பெறப்பட்டன.

பந்துவீச்சில் சென்.ஜோன்ஸ் அணி சார்பாக, எஸ்.செந்தூரன் 3, எஸ்.ஜெயசுதன், என்.மதீசன் ஆகியோர் தலா 2 இலக்குகளையும் கைப்பற்றினார்கள்.

# கிரிக்கெட் போட்டிக்கு விண்ணப்பிக்குக

அமரர் யோகேஸ்வரன் நிஜாந்தன் ஞாபகார்த்த கிண்ண கிரிக்கெட் போட்டி ஆரம்பமாகவுள்ளது.

கைதடி மேற்கு சனசமூக நிலையத்தின் 66 ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு குமரன் விளையாட்டுக் கழகம் நடத்தும் தென்மராட்சி பிரதேச கழகங்களுக்கிடையிலான அணிக்கு 6 பேர் பங்குபற்றும் 5 பந்து பரிமாற்றங்களைக் கொண்ட மென்பந்து கிரிக்கெட் சுற்றுப்போட்டி நாளை 31 ஆம் திகதி சனிக்கிழமை ஆரம்பமாகவுள்ளது.

எனவே இப் போட்டிகளில் பங்குபற்றவுள்ள அணிகள் இன்று தங்கள் பதிவுகளை மேற்கொள்ளுமாறு அறிவிக்கப்பட்டுள்ளது. மேலதிக விபரங்களுக்கு எஸ்.விதூசன் 077 2911259 எனும் இலக்கத்தோடு தொடர்பு கொள்ளுமாறு போட்டி ஏற்பாட்டாளர்கள் அறிவித்துள்ளனர். (கு)

# கூடைப்பந்தாட்ட போட்டி

யாழ்.மாவட்டக் கூடைப்பந்தாட்டச் சங்கம், யாழ்.மாவட்டத்தில் முதன்முறையாக நடத்தும் இளையோர் கூடைப்பந்தாட்டச் சுற்றுப்போட்டித் தொடர் எதிர்வரும் ஜூன் மாதம் முதலாம் திகதி தொடக்கம் ஜூலை மாதம் 6 ஆம் திகதிவரை இடம்பெறவுள்ளது.

மேற்படி போட்டிகளில் 11, 13, 15, 17, 19 வயதுப்பிரிவுக்குட்பட்ட ஆண், பெண் இருபாலாரும் கலந்துகொள்ளவுள்ளனர் எனவும் போட்டிகள் யாவும் லீக் முறையில் இடம்பெறும் எனவும் போட்டி ஏற்பாட்டாளர்கள் தெரிவித்துள்ளனர். (கு)

# இன்றைய போட்டி

யாழ்.மாவட்ட தாச்சி சங்க அனுசரணை யுடன் தாவடி காளி அம்பாள் விளையாட்டுக் கழகம் நடத்தும் மின்னொளியிலான மாபெரும் தாச்சி சுற்றுப் போட்டியின் இன்றைய லீக் போட்டியில் [illegible] அணியும் பாரதி அணியும் மோதவுள்ளன. இப் போட்டி இரவு 7 மணிக்கு தாவடி காளி அம்பாள் விளையாட்டுக் கழக மைதானத்தில் நடைபெறவுள்ளது. (கு)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# இங்கிலாந்து வெற்றி



இங்கிலாந்துக்கெதிரான 3வது ஒரு நாள் போட்டியில் இலங்கை அணி படுதோல்வி யடைந்தது.

இங்கிலாந்து-இலங்கை கிரிக்கெட் அணிகள் இடையிலான 3-வது ஒரு நாள் போட்டி மான்செஸ்டரில் நேற்றுமுன்தினம் நடந்தது.

இதில் நாணய சுழற்சியில் வென்ற இங்கிலாந்து அணி களத்தடுப்பை தெரிவு செய்தது. அதனால் இலங்கை அணி முதலில் துடுப்பெடுத்தாடியது.

இதைத் தொடர்ந்து களமிறங்கிய இலங்கை அணியின் அனைத்து வீரர் களும் சொற்ப ஓட்டங்களில் வெளியேறினர். இதனால் இலங்கை அணி 24 ஓவர்களில் அனைத்து விக்கெட்டுகளையும் இழந்து வெறும் 67 ஓட்டங்கள் மட்டுமே எடுத்தது. இதில் அதிகபட்சமாக சங்கக்கார 13 ஓட்டங்கள் எடுத்தார்.

ஒரு நாள் போட்டியில் இது இலங்கையின் 3-வது மோசமான ஓட்டமாகும். இங்கிலாந்து வேகப்பந்து வீச்சாளர் கிறிஸ் ஜோர்டான் 5 விக்கெட்டுகளை கைப்பற்றினார்.

பின்னர் களமிறங்கிய இங்கிலாந்து அணித்தலைவர் அலஸ்டயர் குக்கும் (30 ஓட்டங்கள்), இயான் பெல்லும் (41 ஓட்டங்கள்) இணைந்து 12.1 ஓவர்களிலேயே இலக்கை எட்டி 10 விக்கெட் வித்தியாசத்தில் வெற்றியை தேடித்தந்தனர்.

இந்த வெற்றியின் மூலம் 5 போட்டி கொண்ட தொடரில் இங்கிலாந்து 2-1 என்ற கணக்கில் முன்னிலை வகிக்கிறது.

## கூகுளை கலக்கும் தோனி, மக்ஸ்வெல்



ஐ.பி.எல் 7வது தொடரில். இணையத் தேடலில் அதிகம் தேடப்பட்ட வீரர்களாக டோனிஇ மேக்ஸ்வெல் திகழ்கின்றனர்.

சென்னை சுப்பர் கிங்ஸ் அணியின் அணித் தலைவராக உள்ள தோனிக்கு ரசிகர்கள் எப்போது அதிகம். அதே நேரத்தில் இந்த ஐ.பி.எல் தொடரில் மேக்ஸ்வெல் ரசிகர்களின் அதிரடி ஹீரோவாக உள்ளார்.

இந்தக் காரணங்களால் கூகுள் தேடலில் அதிகம் தேடப்பட்ட வீரர்களாக இவர்கள் விளங்குகின்றனர். டோனி, மேக்ஸ்வெல் தவிர அதிகம் தேடப்பட்ட வீரர்க்ள் பட்டியலில் யுவராஜ் சிங், டிவிலியர்ஸ், காம்பீர், ரோகித் ஷர்மா, டேல் ஸ்டெய்ன், ராபின் உத்தப்பா, ரவீந்தர் ஜடேஜா, யூசுப் பத்தான் ஆகியோர் உள்ளனர்.

கூகுளில் அதிகம் தேடப்பட்ட அணியாக சென்னை சூப்பர் கிங்ஸ் அணி உள்ளது. இது தவிர கொல்கத்தா நைட் ரைடர்ஸ், கிங்ஸ் லெவன் பஞ்சாப், மும்பை இந்தியன்ஸ் அணிகள் அதிகம் தேடப்பட்டுள்ளன.

# மோடி அரசாங்...

நம் இடையிலான உறவுகளை பலப்படுத்தியுள்ளது.பாஜக அரசாங்கத்தின் ஆட்சியின் கீழ் அரசாங்கம் சிக்கல்களை சந்திக்க நேரிடும் என தகவல்கள் வந்தன.

காங்கிரஸ் அரசாங்கத்தின் கீழ் இருந்தது போல் இருக்க முடியாது என்றனர். எமது அரசாங்கம் கவிழ்க்கப்படும் எனச் சிலர் கூறினர்.

எனினும் மோடிக்கும் ஜனாதிபதிக்கும் இடையிலான முதல் சந்திப்பு மிகவும் வெற்றிகரமாக அமைந்தது.

சில பிரச்சினைகள் தொடர்பான இலங்கையின் நிலைப்பாடுகளை ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ, மோடியின் கவனத்திற்கு கொண்டு வந்ததுடன் மோடி கூறியவற்றையும் ஜனாதிபதி செவிமடுத்துள்ளார்.

எந்த பிரச்சினையாக இருந்தாலும் அதனை பேச்சுவார்த்தை மூலமே தீர்க்க நாம் எதிர்பார்த்துள்ளோம். மோதல் அரசியல் மூலமாக எந்த பிரச்சினைகளையும் தீர்க்க முடியாது எனவும் அமைச்சர் நிமால் சிறிபால டி சில்வா குறிப்பிட்டுள்ளார்.

நரேந்திர மோடியின் பதவியேற்பு நிகழ்வில் கலந்து கொண்ட ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ, அவரை சந்தித்துடன் 13 வது அரசியல் அமைப்புத் திருத்தச் சட்டம், மீனவர் பிரச்சினை உள்ளிட்ட பல பிரச்சினைகள் தொடர்பில் இருவரும் கலந்துரையாடினர். (எ-11)

## இலங்கை விவகார...

இலங்கை பிரச்சினை தொடர்பாக தமிழகத்தில் எழும் எந்த குரலையும் மத்திய அரசு கேட்பதாகவே இருந்ததே இல்லை. அதே நேரத்தில் தற்போதைய மோடி அரசாங்கம் பதவியேற்கும்போது இலங்கை ஜனாதிபதி ராஜபக்ஷவை அழைத்ததன் மூலம் பா.ஜ.க பெரும் சிக்கலில் சிக்கிக் கொண்டது. அதுவரை மோடி அரசுடன் நல்லுறவை பேணுவதாக கூறி வந்த தமிழக அரசும் கூட ராஜபக்ஷ வருகையை கடுமையாகவே கண்டித்து எதிர்ப்பும் தெரிவித்தது. பாரதிய ஜனதாவின் கூட்டணிக் கட்சியான மதிமுகவும் கூட டெல்லியில் போராட்டம் நடத்தியது மோடிக்கு பெரும் நெருக்கடியாகவே கருதப்பட்டது.

இந்த நிலையில் டெல்லி சென்ற இலங்கை ஜனாதிபதியிடம், இந்தியத் தரப்பின் கருத்துகளை சற்று இறுக்கமாகவே நரேந்திர மோடி முன்வைத்ததாக கூறப்பட்டது. இதனை உறுதிப்படுத்தும் வகையில் இலங்கையில் கால் பதித்த உடனேயே இந்தியா தொடர்புடைய சம்பூர் அனல்மின் நிலைய திட்டத்தை உடனே செயல்படுத்த ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ உத்தர விட்டார்.

இதனிடையே இலங்கை விவகாரங்களைக் கவனிப்பதற்காக தமது நேரடி சிறப்பு பிரதிநிதி ஒருவரை நியமிக்க பிரதமர் மோடி ஆலோசித்து வருவதாக டெல்லி தகவல்கள் தெரிவிக்கின்றன.

குறிப்பாக முன்னாள் பிரதமர் இந்திரா காந்தி தமது ஆட்சிக்காலத்தில் இலங்கை விவகாரங்களுக்கு மட்டும் ஜி. பார்த்த சாரதியை சிறப்பு பிரதிநிதியாக நியமித்திருந்தார். அதேபோல் இலங்கை விவகாரங்களை தமது சார்பில் நேரடியாக கையாளக்கூடிய சிறப்பு பிரதிநிதியை நியமிப்பது குறித்து பிரதமர் மோடி ஆலோசிப்பதாக கூறப்படுகிறது.

அப்படி நியமிக்கப்படும் சிறப்பு பிரதிநிதியானவர் வெளியுறவு அமைச்சர், செயலர், தேசிய பாதுகாப்பு ஆலோசகருக்கும் மேலானவராக செயல்படக் கூடும் என்றும் டெல்லி தகவல்கள் தெரிவிக்கின்றன. (செ-11)

# சிறப்பான பந்துவீச்சே வெற்றிக்குக் காரணம்

## தோனி



மும்பை அணிக்கெதிரான ஆட்டத்தில் வெற்றி கிடைத்ததற்கு பந்து வீச்சாளர்களின் சிறந்த பந்து வீச்சே காரணம் என சென்னை அணித்தலைவர் தோனி கூறியுள்ளார்.

இந்த வெற்றி குறித்து சென்னை அணியின் அணித்தலைவர் டோனி கூறுகையில், ஆடுகளம் துடுப்பாட்டத்திற்கு ஏற்ற வகையில் இருந்தது மட்டுமல்லாமல் பந்து வீச்சாளர்கள் மிகவும் சிறப்பாக பந்து வீசியது பாராட்டுக்குரியதாகும்.

மேலும் பிடிகளை தவற விட்டால் ஆட்டத்தின் போக்கு மாறிவிடும். ஆனால் அண்டர்சன் அடித்த பந்தை ஈஷ்வர் பாண்டே அபாரமாக கேட்ச் செய்தார். இத ற்கு அஸ்வினின் சிறப்பான பந்து வீச்சே காரணம்.

அனுபவம் வாய்ந்த வீரர்களான ரெய்னாவும் ஹஸ்சியும் களத்தில் இருக்கும் போது நான் எந்தவித பதட்டமும் அடையவில்லை. எங்கள் அணியில் சிறந்த தொடக்க வீரர்கள் இருப்பதால் 174 ஓட்ட இலக்கை எடுத்துவிட முடியும் எனக் கருதினேன் என்று கூறியுள்ளார்.

இதேவேளை கொல்கத்தா ஈடன் கார்டன் மைதானத்தில் நேற்றுமுன்தினம் நடந்த 'தகுதி சுற்று' ஆட்டத்தில் காம்பீர் தலைமையிலான கொல்கத்தா நைட் ரைடர்ஸ் 28 ஓட்டங்கள் வித்தியாசத்தில் பெய்லி தலைமையிலான கிங்ஸ் லெவன் பஞ்சாப் அணியை வீழ்த்தி இறுதிப் போட்டிக்கு தகுதி பெற்றது.

# கௌரவமான தீர்வு...

கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன் அனுப்பி வைத்துள்ள கடிதத்தில் தெரிவித்திருக்கின்றார்.

அண்மைய நாடாளுமன்றத் தேர்தலில் தமிழக முதல்வர் ஜெயலலிதா, தமிழ்நாட்டில் ஈட்டிய பெரு வெற்றியைப் பாராட்டி அவருக்கு அனுப்பிவைத்த கடிதத்திலேயே அவர் இதனைத் தெரிவித்துள்ளார். அக்கடிதத்தில் தெரிவிக்கப் பட்டுள்ளதாவது,

முதலமைச்சர் அவர்களே, தமிழ் மக்களை, குறிப்பாக இலங்கையின் வடக்கு, கிழக்கில் வசிக்கும் தமிழ் மக்களை, கணிசமான அளவில் பிரதிநிதித்துவப்படுத்தும் வகையில், ஜனநாயக முறையில் தெரிவுசெய்யப்பட்ட தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் என்ற ரீதியில் இம் மடலை வரைகிறேன்.

கடைசியாக நடைபெற்ற வடமாகாண சபைத் தேர்தலில் கூட - அச்சுறுத்தும் வகையில் ஆயுதப் படைகள் பிரசன்னமாகியிருந்து தலையீடு செய்த போதிலும் - சர்வதேச மற்றும் உள்நாட்டு அவதானிகளின் மத்தியில் இடம்பெற்ற அத்தேர்தலில், எமது தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு வடக்கு மாகாண சபையின் 38 ஆசனங்களில் 30ஐக் கைப்பற்றியிருந்தது.

இலங்கையில் தமிழர்களின் பிரச்சினைக்குத் தீர்வு காணவேண்டும் என்பதில் தாங்கள் தொடர்ந்து காட்டிவரும் சிரத்தைக்கு நாம் நன்றியாக இருக்கும் அதேசமயத்தில் எங்களிடையேயான உறவை வலுப்படுத்தும் வகையில் உங்களுடனும் உங்கள் அரசுடனும் நெருங்கிச் செயற்படுவதற்கு எதிர்பார்த்தும் இருக்கிறோம். மீண்டும் வன்முறை இடம்பெறுவதை இலங்கையில் உள்ள தமிழ் மக்கள் விரும்பவில்லை. தாமும், இலங்கையில் உள்ள ஏனையோரோடு தத்தம் பிரதேசங்களின் சமத்துவம் மற்றும் நீதி ஆகியவற்றின் அடிப்படையில் சேர்ந்து வாழ்வைக் கொண்டு நடத்துவதையே விரும்புகின்றனர்.

மே 2009இல் ஆயுதப்போர் முடிவுக்கு வந்து, வன்முறை நிறுத்தப்பட்டபோது, சமத்துவம், நீதி, உண்மையான தீர்வு ஆகியவற்றின் அடிப்படையில் பிணக்குக்கு நிரந்தரமாக முடிவு கட்டும் அனைத்து வாய்ப்புக்களும் உருவாகின. ஏற்றுக் கொள்ளத்தக்க அரசியல் தீர்வைக் கொண்டு வருவோம் என்ற வாக்குறுதியை - போர் நிகழ்ந்த காலத்திலும், போரின் முடிவுக்குப் பின்னரும் - இந்தியாவுக்கும் சர்வதேச சமூகத்திற்கும் இலங்கை வழங்கியிருந்தது. துரதிர்ஷ்டவசமாக இந்த வாக்குறுதி நிறைவு செய்யப்படவேயில்லை.

இந்திய பிரதமர் நரேந்திர மோடிக்கு அனுப்பப்பட்ட கடிதத்தின் பிரதி ஒன்றை தங்களின் மேலான கவனத்துக்காக நாம் இத்துடன் இணைத்துள்ளோம்.

இலங்கையில் நீதி மற்றும் சமத்துவத்தின் அடிப்படையிலான கௌரவமான தீர்வு ஒன்று எட்டப்படுவதை உறுதிப்படுத்துவதற்கு இந்தியாவின் பங்களிப்புத் தொடரவேண்டும் என்று பிரதமரிடம் நாம் கோரியுள்ளோம். இதனை எட்டுவதற்கு உங்களின் முழு ஆதரவு தொடர்ந்து அவசியம் என்று தங்களை வேண்டி நிற்கிறோம். இயன்ற விரைவில் தங்களைச் சந்திக்க எதிர்பார்த்திருக்கிறோம். அத்தகைய வாய்ப்பை எமக்கு வழங்குமாறு ஆர்வத்துடன் வேண்டுகிறோம்.

இவ்வாறு தமிழக முதல்வர் ஜெயலலிதாவிற்கு தமிழ் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் சம்பந்தன் எழுதிய கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (எ-11)




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## புலிகளை...

நிலையில். அவர்களை கைது செய்வதற்கான விசேட நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. மலேசியாவின் பொலிஸ் மா அதிபர் காலிட் அபுபக்கர் இதனைத் ஆங்கில ஊடகம் ஒன்றுக்கு தெரிவித்துள்ளார்.

மலேசியாவில் விடுதலைப் புலிகளின் செயற்பாடுகள் அதிகரித்துள்ளன. இது தடுக்கப்பட வேண்டும். மலேசியாவில் வசித்து வருகின்ற 4 ஆயிரம் இலங்கை அகதிகள் மத்தியில் இவ்வாறான விடுதலைப் புலிகளின் உறுப்பினர்களும் மறைந்திருக்க கூடும்.

அவர்களை கைது செய்வதற்காக 4 ஆயிரம் அகதிகளை விசாரணைக்கு உட்படுத்த விருப்பதாக அவர் தெரிவித்துள்ளார். (எ-11)

## மன்னராக...

லக்ஸ்மன் ஹுலுகல்ல போன்ற அரசாங்கத்துக்கு எதிரானவர்கள் பெயர்கள் எவையும் அதில் உள்ளடக்கப்படவில்லை என்றும் தெரிவிக்கப்படுகிறது.

மேலும் விடுதலைப் புலிகளின் உறுப்பினர்கள் யாரும் இராணுவத்திடம் சரணடையவில்லை என்றும் அனைவரையும் இராணுவமே போராடி கைது செய்ததாகவும் எழுதப்படுகிறது. (எ-11)

## முழு இராணுவ...

மேற்கண்டவாறு தெரிவித்தார். இந்தச் சந்திப்பில் அக்கட்சியின் பொதுச்செயலாளர் செல்வராஜா கஜேந்திரன், அக்கட்சியின் தேசிய அமைப்பாளர் விஸ்வலிங்கம் மணிவண்ணன் ஆகியோரும் பங்கு கொண்டிருந்தனர்.

அங்கு அவர் மேலும் தெரிவிக்கையில்,

இராணுவத்தினரால் மேற்கொள்ளப்பட்டு வரும் தமிழ்மக்களுக்கு சொந்தமான காணி அபகரிப்புக்கு எதிராகவும், யுத்த காலத்தில் சொந்த இடங்களை விட்டு இடம்பெயர்ந்த மக்களை அவர்களின் சொந்த இடங்களில் மீள்குடியேற்ற வலியுறுத்தியும் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் ஏற்பாட்டில் நேற்று முன்தினம் கிளிநொச்சி மாவட்ட செயலகம் முன்பாக நடத்தப்பட்ட கவனயீர்ப்பு போராட்டத்தை குழப்பும் வகையில் பல நடவடிக்கைகளை இந்த அரசாங்கமும் அதன் இராணுவத்தினரும் ஈடுபட்டிருந்தனர்.

இதன் ஒரு கட்டமாக வடக்கு மாகாண சபையின் ஆளும்கட்சி உறுப்பினரான சு. பசுபதிப்பிள்ளையின் வீடு கடந்த 28 ஆம் திகதி அதிகாலை 3 மணிமுதல் காலை 9 மணி வரை இராணுவத்தினரால் முற்றுகையிடப்பட்டிருந்ததோடு சோதனை நடவடிக்கைகளிலும் படையினர் ஈடுபட்டுள்ளனர்.

ஈழத்தமிழரின் உரிமைப்போராட்டத்தில் முக்கிய பங்காற்றிய வன்னி உட்பட தமிழர் தாயகத்தில் ஜனநாயகம் மலரக்கூடாது என்பதிலும் இந்த மண்ணைவிட்டு தமிழர்களை வெளியேற்றுவதிலும் அரசு தீவிரமாக ஈடுபட்டுவருகின்றது. இதன்வெளிப்பாடே ஜனநாயகத் தலைவர்கள் மீதான அச்சுறுத்தல்கள்.

மேலும் ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் கூட்டத்தொடரில் இலங்கை அரசாங்கத்திற்கு எதிராக மூன்றாவது முறையாகவும் தீர்மானம் கொண்டுவரப்பட்டு நிறைவேற்றப்பட்ட பின்னர் கூட தமிழர்கள் மீதான அடக்கு முறைகள் தொடர்ந்து கொண்டே செல்கின்றது என்றால் அதற்கு காரணம் ஜெனிவா அமர்வில் இலங்கை அரசிற்கு எதிராக கொண்டுவரப்படும் தீர்மானங்கள் பல வீனமடைந்ததாகவுள்ளதே. எனவே தமிழர் நிலை மேலும் மேலும் மோசமடைந்து செல்கின்றது என்பதை சர்வதேசம் புரிந்து கொள்ளவேண்டும். யுத்த பாதிப்புக்களை எதிர் கொண்ட மக்களுக்கு விமோசனம் கிடைக்ககூடிய நடவடிக்கைகளை சர்வதேச சமூகம் முன்னெடுக்கவேண்டும் என்று அவர் மேலும் தெரிவித்தார். (எ-4,6)

## சுஷ்மாவுக்கு...

விஜயத்தின் போது இலங்கை - இந்திய உறவுகள் தொடர்பில் அண்மை காலத்தில் புதிய உயிர்ப்பை கொடுத்ததாகவும் அமைச்சர் பீரிஸ் குறிப்பிட்டுள்ளார்.

சுஷ்மா சுவராஜ் 2012 ஆம் ஆண்டு இந்திய நாடாளுமன்ற பிரதிநிதிகள் குழுவிற்கு தலைமை தாங்கி இலங்கை வந்திருந்திருந்தார். அவரது இந்த விஜயத்தினால் இரு நாடுகளுக்கும் இடையிலான சம்பிரதாய பூர்வமான நட்பு மாத்திரமல்லாது பிணைப்புகள் உறுதியாகியது.

இந்தியாவின் புதிய வலுவான அரசாங்கம் தெற்காசிய பிராந்தியத்தில் பொருளாதார முன்னேற்றம், ஸ்திரத்தன்மைக்கு காரணமாக அமையும். புத்த தர்மத்தின் பிறப்பிடமாக இந்தியாவுக்கும் இலங்கைக்கும் இடையிலான சமய தொடர்புகளும் மேலும் வளர்ச்சியடையும்.

பொருளாதாரம், சமூக அபிவிருத்தி, அமைதிக்காக இந்தியாவும் இலங்கையும் மேற்கொள்ளும் முயற்சிகள் பிராந்தியத்திற்கு மட்டுமல்லாது முழு உலகத்திற்கும் முக்கியமானது எனவும் அமைச்சர் பீரிஸ், சுஷ்மா சுவராஜுக்கு அனுப்பியுள்ள வாழ்த்துச் செய்தியில் குறிப்பிட்டுள்ளார். (எ-11)

## சர்வ...

ந்து கொண்டு உரையாற்றும்போதே அவர் இதனை கூறியுள்ளார்.

ஐரோப்பா உட்பட வெளிநாடுகளில் உள்ள விடுதலைப் புலிகளின் ஆதரவாளர்கள் இலங்கையை பின்நோக்கி நகர்த்தும் செயற்பாடுகளை முன்னெடுத்துள்ளதுடன், ஈழக் கொள்கையை தொடர்ந்து முன்னெடுத்து வருவதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார். (எ-11)

## பாரிய...

ற்பட்டு வருவ தாகக் குற்றம் சுமத்தியுள்ளார். அரசாங்கம் எதேச்சதிகாரபோக்கில் மக்களின் நலன்களை கருத்திற் கொள்ளாது செயற்பட்டு வருவதாகத் தெரிவித்துள்ளார். மக்கள் அரசாங்கத்தின் மீது அதிருப்தியடைந்துள்ளதுடன், சர்வதேச ரீதியிலும் நாடு பாரியளவிலான அழுத்தங்களை எதிர்நோக்கி வருவதாக கரு ஜயசூரிய தெரிவித்துள்ளார். (எ-11)

## மலேசியாவில்...

மிகவும் ரகசியமான ஆவணங்களும் புகைப் படங்களும் இராணுவப் புலனாய்வுப் பிரிவினரிடம் உள்ளன.

இந்த சாட்சியங்கள் குசாந்தன் மாஸ்டர் புலிகள் அமைப்பின் முக்கியமான உறுப்பினர் என்பதை உறுதிப்படுத்துவதாக இராணுவப் புலனாய்வுப் பிரிவின் தகவல்கள் தெரிவிக்கின்றன.

குசாந்தன் என்ற இந்த புலிகளின் விமானப்படை பிரதானி 2009 ஆம் ஆண்டு இறுதிக்கட்டப் போரின் போது மலேசியாவிற்கு தப்பிச் சென்றவர் என தகவல்கள் வெளியாகியுள்ளன.

விடுதலைப் புலிகள் அமைப்பில் குசாந்தன், குசாந்தன் மாஸ்டர் என அழைக்கப்பட்டார். எனினும் அவரது உண்மையான பெயர் சந்திரலிங்கம் குசாந்தன் எனவும் முல்லைச் செல்வம் என்ற பெயரிலும் அவர அழைக்கப்பட்டதாக புலனாய்வுப் பிரிவினர் தெரிவிக்கின்றனர்.

மலேசியாவில் இருந்து அழைத்து வரப்பட்டுள்ள குசாந்தன் உட்பட மூன்று புலிகளின் உறுப்பினர்களிடம் பயங்கரவாத தடுப்பு பிரிவினர் விசாரணைகளை நட்த்தி வருகின்றனர். (எ-11)


விசா எடுத்து வெளிநாடு போய்விட்டால் வேலைவாய்ப்பு கிடைத்துவிடுமா?

இதோ சிங்கப்பூர், மலேசியா, டுபாய் 4*/5* ஹொட்டேல் வேலைவாய்ப்பு (Job Contract & Work Visa வுடன்)



UK, Switzerland, Australia, Malaysia New Zealand இல் வேலைவாய்ப்புடன் கூடிய மாணவர் விசா

(சி-7510)

முக்கிய குறிப்பு:- எமக்கு வேறு எந்தப் பெயர்களிலும் கிளைகள் கிடையாது.

Sikaram – Gateway to Education & Employment

TakeOff your dreams

மேலதிக விபரங்களுக்கு www.sikaram.lk 077 36 16 798

இல.153, பலாலி வீதி, கந்தர்மடம், யாழ்ப்பாணம்

மிக குறைந்த விமான கட்டணங்கள்

| | | |
|---|---|---|
| கொழும்பு – மதுரை | –16500 | RTN |
| கொழும்பு – சென்னை | –21900 | RTN |
| கொழும்பு – திருச்சி | –22400 | RTN |
| கொழும்பு – டோகா | –26000 | O/W |
| கொழும்பு – பெங்களூர் | – 27600 | RTN |
| கொழும்பு – மலேசியா | –30000 | RTN |
| கொழும்பு – சிங்கபூர் | –30200 | RTN |
| கொழும்பு – பிரான்ஸ் | –45500 | O/W |
| கொழும்பு – லண்டன் | –44800 | O/W |
| கொழும்பு – சுவிஸ் | –83500 | RTN |
| கொழும்பு – கனடா | –103700 | o/w |

வீட்டில் இருந்தவாறே பெற்றுக்கொள்ளலாம்

யாழ் நகரில் நம்பிக்கையான பாதுகாப்பான 24 மணித்தியால சேவை வழங்குனர்

Nation Popular Travels & Tours

#128, Brown Road, Jaffna

128.பிறவுண் வீதி யாழ்ப்பாணம்

0114375357, 0773083820

0214 920 920

நீங்கள் பறந்து செல்ல நாங்கள் சிறகுகளாகின்றோம்

(சி-7514)

Certificate Courses in English & Sinhala

3 மாத Certificate Courses

Basic English -1500/=

Advanced English -1500/=

சிங்களம் -1500/=

Success Language centre 11, Kasthuriyar Lane, Jaffna. 0776408622 (6515)

புதிய பிரிவுகள் 31.05.2014 சனிக்கிழமை ஆரம்பம்.

ALLIANCE FRANÇAISE DE JAFFNA

பிரெஞ்சு மொழியை பிரெஞ்சு முறையில் கற்றுக்கொள்ளுங்கள்

af பிரெஞ்சு af Alliance Française de Jaffna

கற்பதற்கு FRENCH EMBASSY இன் கீழ் இயங்கும் உலகின் முதல்தர சர்வதேச நிறுவனம் AF மட்டுமே. 1884 PARIS இல் நிறுவப்பட்டது. யாழில் 1976 முதல் 136+ நாடுகளில் 1040+ கிளைகள். உயர் தகுதியுடைய ஆசிரியர்கள் மாணவர்களின் பேச்சாற்றலை விரைவாக உறுதிப்படுத்துகிறார்கள்.

➲ அங்கீகரிக்கப்பட்ட CERTIFICATES & INTERNATIONAL DIPLOMAS. பிரெஞ்சு மொழிபெயர்புகள். AUDIO-VISUAL AIDS, பிரமாண்டமான நூலகம்.

➲ வடமராச்சி, வன்னி, மன்னார், வவுனியாவைச் சேர்ந்த நூற்றுக் கணக்கானோர் படிக்கிறார்கள். புதிய வகுப்புகள் ஆரம்பமாகின்றன.

France, Canada, Switzerland... செல்வோர் அழையுங்கள்...

61இ கச்சேரி - நல்லூர் வீதி, யாழ்ப்பாணம் 021 222 8093 (6520)

கச்சேரி ➔ எக்காளத்தொனி கிறிஸ்தவ ஆலயம் ✝ ➔ Alliance Française.

ஆரியகுளம் ➔ றக்கா றோட் (J/John Bosco's School, British Council) ➔ AF.

கனடா

தெளிவான காலவரையறை, படிமுறைகள் பட்டவர்த்தனம்

எண்ணி 2 1/2 மாதங்களில் சட்ட ரீதியாக - வேறு நாடுகளில் இடைத்தங்கல் ஏதுமின்றி - நேரடியாக - வேகமாகப் பறக்க விரைந்து வாருங்கள்.

இலங்கையிலேயே எம்மிடம் மட்டுமே மிகக் குறைந்த கட்டணம்.

7 நாட்களும் திறந்திருப்போம்.

திசைகாட்டி (பிறைவேற்) லிமிற்

175, பருத்தித்துறை வீதி, யாழ்ப்பாணம்.

021 221 9016, 021 568 9090

(C-7515)

Package 1
4Ch AMARON DVR
320GB HDD
2 Bullet CCD Camera (Night Vision)
Free Installation
Free online Setup
2 Year Service free
1 Year Warranty
Rs 36,500 Only

Package 2
4Ch AVTECH DVR
320GB HDD
2 Bullet CCD Camera (Night Vision)
19" Moniter
Free Installation
Free online Setup
2 Year Service free
1 Year Warranty
Rs 49,500 Only

Package 3
4Ch AVTECH DVR
500GB HDD
4 Bullet CCD Camera (Night Vision)
19" Moniter
Free Installation
Free online Setup
2 Year Service free
1 Year Warranty
Rs 67,500 Only

Package 4
8Ch FUHO DVR
1000GB HDD
8 Bullet CCD Camera (Night Vision)
19" Moniter
Free Installation
Free online Setup
2 Year Service free
1 Year Warranty
Rs 114,500 Only

CCTV CAMERA



உங்கள் வியாபார நிறுவனங்களை, வீடுகளை மற்றும் சொத்துக்களை 24 மணிநேரமும் பாதுகாக்கும் நோக்குடன்

மேலதிக விபரங்களுக்கு 075 9997798

(சி-7509)

HOTLINE 021 5 676767

aj SYSTEMS

Anyplace, Anywhere, Anytime ! Your POS & CCTV Partner

AJ SYSTEMS I (PVT) LTD

இல. 315,1/2 பலாலி வீதி, திருநெல்வேலி, யாழ்ப்பாணம்

Tel : 0212219234 Email: info@aj-sys.lk Web: www.aj-sys.lk


இப்பத்திரிகை வலம்புரி அன்.கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 30.05.2014 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org